# கட்டுரைக் கதம்பம்

எழுதியவர் :
பேராசிரியர்,
வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.
தமிழ்த்துறைத்தலைவர், புதுக்கல்லூரி, சென்னை.

கிடைக்கும் இடம்:
பேராசிரியர் வித்துவான்
பாலூர் கண்ணப்பமுதலியார், M.A., B.O.L,
43, விஜயவிக்னேசுவரர் கோவில் தெரு,
சூளை, சென்னை-7.

உரிமை ஆசிரியர்க்கே.

[ விலை ரூ. 2 ]

Printed at The Midland Printers, 160, Purasawalkam High Road,
Vepery, Madras-7

" கட்டுரைக் கதம்பம் " என்னும் இந்நூல் பல கட்டுரைகளைத் தன்னகத்துக் கொண்டிருத்தலின், இப் பெயருடன் வெளிவருவதாயிற்று. இந் நூலில் உள்ள கட்டுரைகள் யாவும் என்னால் பல்வேறு சஞ்சிகை கட்கும், ஆண்டு மலர்கட்கும் சில்லாண்டுகட்கு முன்பே எழுதப்பட்டவையாகும். சில கட்டுரைகள் யான் எழுதி வெளியிட்டுள்ள நூற்களினின்றும் எடுக்கப் பட்டவை. இத் தொகுப்பு நூல் எல்லாச் சமயத்தவர் களும் இனிது ஏற்றுப் படித்து, தமிழ் இலக்கியச் சுவையினைச் சுவைத்து இன்புறும் வண்ணம் தொகுக் கப்பட்டுள்ளது. உற்று நோக்குதற்குரியது. இந் நூலில் காணப்படும் கட்டுரையான வள்ளுவரும் கடவுள் வாழ்த்தும், என்பது **குமரகுருபரன்** என்னும் மாத சஞ்சிகையிலும் திருமுகப்பாசுரம் என்பது சைவ சித்தாந்த சமாஜ **பொன்விழா மலரிலும்**, பத்துப் பாட் டின் பண்பு என்பது **செந்தமிழ்ச்செல்வி** என்னும் மாத சஞ்சிகையிலும், சேக்கிழாரும் கம்பரும், திருக்கோவை யார் என்பன. **ஞானசம்பந்தம்** என்னும் மாத சஞ்சிகை யிலும், கம்பன் கவியும் காகுத்தன் கணையும் என்பது **இராம கிருஷ்ண விஜயம்** என்னும் மாத சஞ்சிகை யிலும், இனிய தமிழும் இஸ்லாமியமும், பெருமை என்பன **புதுக்கல்லூரி ஆண்டு சஞ்சிகை**யிலும், தேவர் கண்ட நாடு என்பது **சிந்தாமணி மலர்** என்னும் சஞ் சிகையிலும், கொடைமடம்பட்ட கோமான் என்பது **சங்ககால வள்ளல்கள்** என்னும் நூலிலும், சிலம்பை யாத்த சீர்சால் புலவர், வீரமா முனிவர் என்பன **தமிழ்த் தொண்டர்** என்னும் நூலிலும், மணிமேகலை பாடிய மாபெரும் புலவர் என்பது, **தொழிலும் புலமையும்** என்னும் நூலிலும் வந்தவை.

இந்தக் கட்டுரைக் கதம்பமாம் இத் தொகுப்பு நூலைத் தமிழ் அறிஞர்கள் ஏற்று, என்னை இத் துறையில் மேலும் மேலும் ஊக்கி ஆக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

**பாலூர் கண்ணப்ப முதலியார்.**

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | வள்ளுவரும் கடவுள் வாழ்த்தும் | .... 1 |
| 2. | திருமுகப்பாசுரம் | .... 12 |
| 3. | பத்துப்பாட்டின் பண்பு | .... 20 |
| 4. | திருக்கோவையார் | .... 25 |
| 5. | கொடைமடம்பட்டகோமான் | .... 41 |
| 6. | சேக்கிழாரும் கம்பரும் | .... 53 |
| 7. | மணிமேகலை பாடிய மாபெரும் புலவர் | 63 |
| 8. | கம்பன் கவியும் காகுத்தன் கணையும் | .... 72 |
| 9. | சிலம்பை யாத்த சீர்சால் புலவர் | .... 84 |
| 10. | இனிய தமிழும் இஸ்லாமியர்களும் | .... 98 |
| 11. | வீரமா முனிவர் | .... 105 |
| 12. | தேவர் கண்ட நாடு | .... 115 |
| 13. | பெருமை | .... 123 |

# 1. வள்ளுவரும் கடவுள் வாழ்த்தும்

திருவள்ளுவர் எம்மொழியினராலும் எம்மதத்தினராலும் எவ்வினத்தவராலும் போற்றப்பட்டு வரும் பெரும்புலவர் என்பது உலகு அறிந்த ஓர் உண்மையாகும். இங்ஙனம் இவர் மதிக்கப்படுதற்குரிய காரணம், இவரது வாக்குக்களாகிய திருக்குறட் பாக்கள் அத்துணைப் பொருட்செறிவுடையன என்பது தவிர்த்து, வேறு எதுவும் இன்று. இவர் யாத்த இப்பெரு நூலில் இல்லாதது ஒன்றும் இல்லை. இஃது எல்லாம் நிறைந்த ஓர் அறநூல். இதனால்தான் நத்தத்தனர் என்னும் புலவர்,

> ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
> பாயிரத்தி னோடு பகர்ந்தன்பின்—போயொருத்தர்
> வாய்க்கேட்க நூலுளதோ ?

என்று விதந்து பாடினர்.

"அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே" என்பது ஒரு நூலால் எய்தும் பயனைக் குறிக்கும் விதியாகும். இவ்விதி முற்றிலும் பொருந்தப்பெற்றது நந்தம் வள்ளுவனார் வாய்மொழியாகிய திருக்குறள் என்றறிக. இதனை நன்கு உணர்ந்த கொடிஞாழல் மாணிபூதனர் என்னும் புலவர்,

> " அறன்அறிந்தேம் ஆன்ற பொருள்அறிந்தேம் இன்பின்
> திறன்அறிந்தேம் வீடு தெளிந்தேம்—

என்று உண்மை அறிந்து உரைத்துள்ளார். இன்னோரன்ன சீரிய பண்புடைய நூலின்கண் கடவுளைப் பற்றிய குறிப்புக்கள் எந்த அளவுக்குக் காணப்படுகின்றன என்பதை எடுத்துக் கூறப்படுவதே இக்

கட்டுரையின் நோக்கமாகும். இப்பகுதி திருக்குறளில் உள்ள கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.

வள்ளுவனார் கடவுள் பண்புகளை எம்முறையில் பகுத்துத் தம் நூலில் சுட்டியுள்ளார் என்பதை உற்று நோக்கும்போது, முதலாவதாகக் கடவுள் உண்டு என்பதை உதாரண வாயிலாக உணர்த்தினர் என்பது தெரிகிறது. அவர் அக்கடவுளைத் தொழுதலாலும் அணுகுதலாலும் ஏற்படக்கூடிய பயனை மொழிந்து, எத்துணை அறிவு பெற்றிருந்தாலும், கடவுள் திருவடிகளில் பற்று இல்லையானல், பயன் எதுவும் இல்லை என்பதையும் திறம்படப் பேசியுள்ளார்.

வள்ளுவர் கடவுள் பண்பினை வகுத்துப் பேசிய முறைப்பாட்டினைக் குறித்து விரிந்த அளவில் அறிந்து அன்புறுதற்கு முன்பு, அவர் கடவுளை எவ்வெச் சொற்களால் சுட்டியுள்ளார் என்பதை முதற்கண் நாம் அறிதல் சாலப் பொருத்தமேயாகும்.

திருவள்ளுவராம் பொய்யில் புலவர், இறைவனை "ஆதிபகவன்" என்றும், "வாலறிவன்" என்றும், "மலர்மிசை ஏகினன்" என்றும், "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்றும், "இறைவன்" என்றும், "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்றும், "தனக்குவமை இல்லாதான்" என்றும் "அறவாழி அந்தணன்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு செந்நாப் போதாராம் திருவள்ளுவர் கடவுளுக்குரியனவாக எடுத்துக்கூறிய மொழியும், தொடர்களும் பொருள் பொலிவுடையனவாகவும் செறிவுடையனவாகவும் கடவுளின் இயல்புகள் இன்ன என்பனவற்றை விளக்குவனவாகவும் உள்ளன.

எல்லாம் வல்ல இறைவன் தனக்குமேல் ஒரு பொருளையும் பெற்றிராமல், தானே முதன்மை யானவனுக விளங்குதலின், அவன் ஆதி என்று கூறப்படுவதல் உண்மையாகும் அன்ருே? "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்ற வாகீசப் பெருமானுர் வாக்கையும், "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே" என்னும் வாதவூர் அடிகளார் கூறியுள்ளதையும் ஈண்டுப் பொருத்திக் காணலாம்.

இறைவனுக்கும் சீவனுக்கும் வேறுபாடு உண்டு. இவ்வேறுபாட்டை உணர்த்தவே இறைவனுக்குச் சில குணங்கள் இருப்பனவாக அறிஞர்கள் கற்பித்துக் கூறியுள்ளனர். தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேர் அருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்ற எண்குணங்களை யுடைமையால் அவன் எண் குணத்தினன் என்று குறிப்பிடப்பட்டுள்ளான். இங்ஙனமே சுந்தர மூர்த்திகள் இறைவனை 'எண்குணத் தினனை' என்று பாடியுள்ளார். இப்படி இவ்வருளாளர் கூறுதற்குக் காரணம் நம் வள்ளுவனுர் தம் திருவாயால் இறைவனை "எண்குணத்தான்" என்று கூறிப் போந்தமையே அன்றி வேறன்று.

தூய அறிவன்; பேர் அறிவன் இறைவன். நாமோ சிற்றறிவினர்; தூய்மை அற்ற அறிவினர். அதனுல்தான் வள்ளுவனுர் வால் அறிவன் என்று வழுத்தினுர் இறைவனை. இந்த உண்மையினுல் அன்ருே "பேர் அறிவே இன்பப் பெருக்கே" என்றனர் தாயுமானுர்!

இறைவன் கற்பனை கடந்த சோதியாக இருந்தாலும், கருணையே உருவமானவன். இப்பண்

புடையவன் இறைவன் என்பதை அன்பால் தன்னை நினைப்பவர்களுடைய மனத்தாமரையில் விரைவில் சென்று குடிபுகுபவன் என்பதிலிருந்து நாம் உணரலாம். இதை வற்புறுத்தவே பெருநாவலராம் திருவள்ளுவர் "மலர்மிசை ஏகினன்" என்று இறைவனைக் கூறலுற்றனர். இக்கருத்தை ஒட்டியே திருநாவுக்கரசரும், இறைவனை "மனத்தகத் தான்" என்று போற்றியுள்ளார். "என் உடல் இடங்கொண்டாய் யான் இதற்கு இலன் ஓர் கைம் மாறு" என்று கூறினர் மணிமொழியார். "நஞ்சுடை கண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மை நயந்து" என்றருளிச் செய்தனர் ஆளுடைய பிள்ளையார்.

இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன். "இவன் தனக்கு வேண்டியவன்; இவன் தனக்கு வேண்டாதவன்" என்று கருதும் இயல்பு அவ் விறைவன்மாட்டு இல்லை. "ஈசன் அவன் எவ் வுயிர்க்கும் இயல்பானன்." இதனால் அன்றோ அவன் கொடிய விடமுடைய பாம்பினையும் தன்மீது அணிந்து கொண்டனன் என்பர். விருப்பு வெறுப்பு இல்லாதது இறைமைக்குணம் என்பதை இறைவன் ஞானசம்பந்தர்க்கு ஞானப்பால் கொடுத்து, அவரைத் தனக்கு அன்பனுகை ஆக்கிக்கொண்டதனுலும், அப்பர்சுவாமிகட்குக் கொடிய சூலைநோய் தந்து அவரையும் அன்பராக்கிக் கொண்டதாலும் நன்கு உணரலாம். இந்நிகழ்ச்சி இறைவனது விருப்பு வெறுப்பு உணர்ச்சியினையா காட்டுகிறது? அவனது அறக்கருணை, மறக்கருணை மாட்சியினை அன்றோ காட்டுகிறது?

இந்தப் பண்பாடுகளை அறிந்தன்றோ வள்ளுவப் பெருந்தகையார் முன் கூட்டியே தம் பாவில் இறைவன் இயல்பு இன்னது என்பதை "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்று

விதந்து பேசியுள்ளார். இத் தொடரே அப்பர் பெருமானை "வேண்டாமை வேண்டுவதும் இல்லான்" என்று இறைவனைப்பற்றிப் பாடச் செய்தது.

பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிற்கும் இயல்பு இறைவனுக்குரியதாதலின், அதனை ஒரு சொல்லால் உணர்த்தவே "இறைவன்" என்று இனிது எடுத்துப் பேசினர் நாயனார். இறுத்தலாவது தங்குதல். இறைவன் எங்கும் தங்கி இருப்பவன். ஆகவே, அப்பொருள் தரும் சொல்லால் இறைவன் என்று கூறப்பட்டான். தான் எங்கும் தங்கி இருந்ததனால் அன்றோ, திருக்குறிப்புத் தொண்ட நாயனார் கல்லில் தம் தலையை மோதிய போது, அதனின்றும் கையைத் தோற்றுவித்து அவர்தம் தலை மொத்துண்ணுவாறு தடை செய்தான் இறைவன்!

நாம் ஐம்புலன்களைப் பெற்றிருக்கிறோம். அப்புலன்களை அடக்கி ஆளுதல் என்பது எளிதில் முடியும் செயலும் அன்று. ஆனால், இறைவனே நம்மாட்டு வைத்த அருள் காரணமாக நம்போன்று வடிவம் கொண்டாலும், அவ்வடிவத்தில் அமைந்த ஐம்புலன்கள் அவனை ஒன்றும் செய்ய மாட்டா. இறைவன் நம்பொருட்டே, அதாவது நாம் இறவாப் பேர்இன்பம் பெறவே, அருள் திருமேனி கொள்கின்றான் என்பதைச் சிவஞான சித்தியார் நமக்கு நன்கு எடுத்து மொழிகின்றது. ஆகவே, அவன் ஐம்புலன்களையும் பெற்ற வடிவினனாகக் காட்சியளித்தாலும், அவ்வைம்புலன்களையும் செற்ற அறிஞன் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. ஐம்புலன்கள் ஆறத்துய்த்தற்குரியோர் போல அவனுக்கு மனைவி மக்கள் முதலியோர் இருப்பவராகக் கூறப்பட்டு வருகின்றதே எனில், இறைவனுக்கு அமைந்த மனைவி மானிடர்கட்கு அமைந்த

மனைவி போன்று இன்றி, அருளே அவனுக்குரிய மனைவியாக உள்ளாள் என்பதுதான் உண்மை நூல்களின் துணிபாகும். "ஆனு அருள் தன்னைத் தாஞக இருத்திய தையல்" என்ற கச்சியப்பர் வாக்கைக் காண்க. இங்ஙனமே இறைவனுக்கு மக்களும் இலர். மக்கள் இருப்பவராகக் கூறுதல் உலகமக்கள் போல நடித்துக் காட்டும் நடிப்பே அன்றி வேறன்று.

ஒருபொருளின் உயர்ச்சியை அறிவிக்க மற்றொரு பொருளை உவமை தருதல் இயல்பு. அவ்வுவமை உபமேயத்தைப் போலச் சிறப்புடையதாகவோ, அன்றி அதனினும் சீரியதாகவோ இருக்கும் இயல் புடையது. அந்த முறைக்கிணங்க இறைவனுக்கு எதிராக ஒரு பொருளை ஒப்புமை கூறச் சிந்திக்கும் போது ஒன்றும் புலனுகாது; அவனுக்கு ஒப்புக் கூறவும் இயலாது. அதனுல்தான் செந்நாப் போதார் "தனக்குவமை இல்லாதான்" என்று இறைவனைக் கூறிப்போந்தனர்" இதனை அடி யொற்றியே அழுது அழுது அரனடிக்கு அன்பு பூண்ட மாணிக்கவாசகரும் "ஒப்புனக்கு இல்லா ஒருவனே" என்று உளம் மகிழ உரைத்தருளினர். அப்பர்பெருமானுரும் "ஒப்புடையன் அல்லன் ஓர் உவமன் இல்லி" என்று கூறியிருப்பனவற்றையும் ஈண்டு நினைவுகொள்வோமாக.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வு யிர்க்கும், செந்தண்மை பூண்டொழுக லான்" என்று வள்ளுவரே அந்தணர் என்ற சொல்லுக்குப் பொருள்கூறிப் போந்தனர் ஆதலின், அவ்வந்தணப் பண்பின் மூலகாரணர் இறைவர் என்பதை நமக்கு நாயனுர் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இறைவனை "அந்தணன்" என்று கூறி அறிவுறுத்திவிட்டனர். அவ்வந்தணன் பின்னுல் நீத்தார் பெருமையில் கூறப்பட்ட அந்தணரினும் ஒருபடி வேருனவன்

என்பதையும் உணர்த்தவே, "அறவாழி அந்தணன்" என்றனர். இறைவன் அந்தணன் என்னும் பெயர்க்கு உரியவன் என்பதைத் திருவாசகத்தில் "கொந்தணவும் பொழில் சோலைக் கூங்குயிலே இதுகேள் நீ, அந்தணனாகி வந்திங்கே அழகிய சேவடி காட்டி" என்று கூறியிருப்பதால் அறியலாம். "அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே" என்றார் திருஞானசம்பந்தர். ஆகவே, இதுகாறும் கூறியதினின்று வள்ளுவர் பெருமானார் கடவுளைப் பற்றிக் கூறிய சொற்களினின்றும் சொற்றொடர்களினின்றும் கடவுளின் இயல்புகள் இன்ன என்பனவற்றை அறிந்தனம். இனி, இக்கடவுளிடத்து உயிர்களாகிய நாம் எந்த முறையில் தொடர்பு கொள்ளுதல் வேண்டும் என்பதையும் அறிவோமாக.

சீவர்களாகிய நாம் இவ்வுலகில் பிறந்து பிறந்து இறந்து இறந்து போவதில் பயன் இல்லை. பிறப்பும் இறப்பும் இடையறாது வருதலின் பிறப்பைப் பெரியகடல் என்று கூறி வருகின்றனர் ஆன்றோர். அப்பிறப்பாகிய கடலைக் கடத்தல் வேண்டும்; கடந்து பேர் இன்பமாகிய கரையினைச் சேரவேண்டும். இதுவே, சீவான்மாவின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அதனால்தான் நம்முன்னோர்கள் கடவுளை நோக்கி முறையிடும் போதெல்லாம் "வன்பிறவி வேதனைக்கு அஞ்சி உனை அடைந்தேன் ஐயா" என்றும், "பிறவாதிருக்க வரந்தரவேண்டும்" என்றும் வேண்டுவாராயினர், "இவ்வேண்டுகோள் நிறைவேற வேண்டுமானால் இறைவனது திருவடியாகிய தெப்பத்தைப் பற்றுங்கள். அத்தெப்பம் பிறவிக் கடலைக் கடக்கச் செய்து முத்திக்கரையினில் சேர்க்க வல்லது" என்று மக்களுக்கு அறிவுறுத்தவே, பொய்யில் புலவர் "பிறவிப் பெருங்கடல்

நீந்துவர் நீந்தார் இறைவன் அடிசேரா தார்'' என்றும், ''அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால், பிறவாழி நீந்தல் அரிது'' என்றுங் கூறினர். மேலும், திருவடிப்பேறு ஞானப்பேருகும். இறைவன் திருவடி, ஞானமே என்பதைத் திருமந் திரப் பாடலாலும் தெள்ளத்தெளிய உணரலாம்.

வள்ளுவனுர் பிறவிப் பெருங்கடல் நீந்துதற்கு மட்டும் கடவுள் திருவடியினைச் சேருமாறு வற்புறுத் திலர். இறைவன் இணையடியினைச் சேரப் பெற் றவர் இம்மை உலகத்துமட்டும் இன்றி, அம்மை உலகத்திலும் நீடுவாழ்வர் என்றும், எந்த இடத்தும் துன்புருர் என்றும், மனக்கவலை மாற்றி இன்பக் கடலில் ஆழ்வர் என்றும் கூறினர். ஆம், இறைவன் திருவடி அத்துணையும் தரவல்லதுதான். நம் வள்ளு வனுர் கருத்தை ஒட்டியன்ருே வாகீசர், இறைவன் திருவடியினைப் பற்றிப்புகழ்ந்து பேசுகையில்,

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறைஅணிந் தாடும்ஐ யாறன் அடித்தலமே

எனக் குதூகலத்துடன் கூறுவராயினர்.

வள்ளுவர்க்குத் திருவடிப்பேற்றைப் பெறு வதோடு மக்கள் நில்லாமல், அவனது புகழையும் எந்நேரமும் இடைவிடாது சிந்தித்த வண்ணமும் செப்பிய வண்ணமும் இருத்தல்வேண்டும் என்பதும் உள்ளக்கிடக்கையாகும். அப்படி எண்ணிஞல்தான் எந்தவிதமான வினைகளும் அவர்களை அணுகா என்று வற்புறுத்திக் கூறுகிருர். இக் கருத்துத்தானே ''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' என்ற குறட்பாவில் தெரிகிறது? சுந்தரர் தாம் இடைவிடாது இறைவனைச் சிந்தித்த வண்ணம் இருந்தார் என்பதை '' நற்றவா உனை

நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே' என்று கூறியுள்ளார். இவ்வாறு சிந்தித்தலாகிய ஒழுக்க நெறியில் மக்கள் ஒழுகவேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து. இவ்வொழுக்க நெறியில் நின்றவர் நீடுவாழ்வர் என்று, இப்பண்புடையார் வாழ்க்கையின் நீட்டிப்பினை அறிந்து பேசினர். இப்பண்பினர் பருவுடல் நீங்கினும், அவர்களது நுண்ணுடல் பெருமையும் பண்பும் இன்றும் இவ்வுலகில் பேசப்படுதலே அவர்கள் நீடுவாழ்கின்றார் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

இறைவன் நமக்குக் கை கால் முதலான உறுப்புக்களைக் கொடுத்ததன் காரணம், உடுப்பதற்கும் உண்பதற்கும் உலக வாழ்க்கையில் உறைவதற்கும் மட்டும் அன்று. அவ்வுறுப்புக்களைக் கொண்டு இம்மைப் பயனைத் துய்த்தலோடு அம்மைப் பயனையும் எய்தற்கும் பாடுபடுதல் வேண்டும். அம்மைப் பயனை எதுபோது பெறலாம்? ஆண்டவனால் கொடுக்கப்பட்ட உறுப்புக்களை அவன் பொருட்டே பயன் படுத்தினால் தான் பெற இயலும், இதனை வள்ளுவனார், " தலையினை பெற்றும் எவர்க்கும் தலைவனும் இறைவன் தாளை வணங்கவில்லை என்றால், அந்தத் தலையினைப் பெற்றுப் பயன் இல்லை. ஆகவே, தலையால் அவன் தாளை வணங்குதல் வேண்டும் என்று கூறிய வள்ளுவர்வாக்கின் உண்மைப் பொருளை உணர்ந்த பரிமேல் அழகர் தலையால் வணங்கினால் மட்டும் போதாது என்பதை விளக்கக் "காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனில எனத் தலைமேல் வைத்துச் சொல்லினும், இனம் பற்றி வாழ்த்தாத நாக்களும் அப்படியே பயனிலவாம். என்க" என்று கூறிப்போந்தனர். ஆளுடைய அரசராம் அப்பர் பெருமானாரும் திருவங்கமாலையில் "தலையே! நீ வணங்காய், கண்காள் காண்மின்களோ, செவி

காள் கேண்மின்களோ, மூக்கே நீ முரலாய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய், கைகாள் கூப்பித்தொழீர், ஆக்கையால் பயன் என்?'', கால்களால் பயன் என்?, என்று அருளிச்செய்தனர். இங்ஙனமெல்லாம் பாட இடங் கொடுத்தது 'கோளில் பொறியில் குணம்இலவே எண்குணத் தான், தாளை வணங்காத் தலை'' என்ற வள்ளுவர் வாக்கே அன்றி வேறு வாக்கு உண்டோ ?

வள்ளுவர் முக்காலமும் உணர்ந்த மூதறிஞர். வருங்காலத்தில் கடவுள் உணர்ச்சி சிறிது குறைவு படும் போலும் என்று ஓர்ந்து உணர்ந்துள்ளார். அவ்வுணர்ச்சிக்குக் காரணம் கல்வியின் முதிர்வு என்றுகூடச் சிந்தித்துள்ளார். அன்னார் அச்சிந்தனை காரணமாகவே கல்வி அறிவால் முதிர்ந்தவர்கள் மாட்டுக் கருணை வைத்து, அவர்கட்குக் கடவுள் உணர்ச்சியினைப் புகட்ட வேண்டுமென்று, ''கடவுள் திருவடியினைத் தொழாதுபோயின், கற்றுப்பயன் இல்லை' என்று கூறியருளினர். அங்கும் ஒரு நயம் தோன்ற அவ்வுண்மையைக் கூறியருளினர். கற்றவர்கள் தம் கல்வியின் அறிவைப் பெரிதாகவும், குற்றம் குறையற்றதாகவும் கருதிக் கடவுள் உணர்ச்சி குறைந்துள்ளார். ஆனால், அவர்களின் கல்வி அறிவு, இறைவன் அறிவின் முன் தாழ்வுடையது; தூய்மை அற்றது. இந்த உண்மையினை வலியுறுத்தவே இத்தருணத்தில் இறைவனை வேறு எந்தச் சொல்லாலும் குறிப்பிடாமல் ''வால் அறிவன்'' என்றே கூறிய மாண்பினை என்னென்றுவியப்பது !

கற்றதனால் ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்று வள்ளுவர் திருவாய் மலர்ந்த குறட்பாவிற்கு விளக்கம் காட்டுவார் போன்று, சேக்கிழார் பெருமானார்,

உள்ளநிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றால்
தெள்ளவடித் தறிந்தபொருள் சிவன்கழலில் செறிவென்றே
கொள்ளுமுணர் வினில்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாய்என்றும் பயின்றுவரும் பண்புடையார்

என்று பாடியருளிய பாட்டினையும் ஈண்டுப் படித்துப் பரவச முறுதல் சாலப்பயன் தருவதாகும்.

வள்ளுவனார் கடவுள் தன்மைகளையும் அக்கடவுளை அடைந்து பெறத்தக்க இன்பத்தினையும் கடவுளை எப்படியும் போற்றியே ஆதல்வேண்டும் என்பதையும் கூறியருளினார் எனக் கூறினோம். இனி, வள்ளுவனார் கடவுள் உண்டு என்பதை எப்படி நிலைநாட்டினார் என்பதைக்கூறி இக்கட்டுரையைமுடிப்போமாக.

வள்ளுவனார் கடவுளை நம் கண்முன் கொண்டு வந்து காட்ட முன்வந்திலர். கடவுள் ஒருவர் உண்டு என்பதை உதாரண வாயிலாகக் காட்டவே முனைந்து நின்றனர். புகை கண்ட இடத்து ஆண்டு நெருப்பு உண்டு என்று அறிவதுபோல, உலகத்தினைக் கண்டபோது இவ்வுலகத்திற்கு முதற் காரணமான ஒரு பொருள் இருக்க வேண்டும். அதுவே கடவுள் என்ற கருத்தில் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்று உலகிற்கு முதற் காரணன் கடவுள் என்பதைக் கூறினர். இந்தத் தொடர்க்கு விளக்கம் கூறவந்த பரிமேல் அழகரும் "காணப்பட்ட உலகத்தைக்கொண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச் சொல்ல வேண்டுதலின், ஆதி பகவன் முதற்றே என்று உலகின்மேல் வைத்துக் கூறினார்; கூறினாரேனும் உலகிற்கு முதல்வன் ஆதி பகவன் என்பது கருத்தாகக்கொள்க" என்று எழுதிப் போந்தனர். ஆளுடைய அடிகளாம் மணிமொழியாரும் "ஞாலமேகரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும்" என்று இந்த உண்மையினை அறிந்து பாடியுள்ளார். ஆகவே, கடவுள் உண்டு என்பதை வள்ளுவர் எடுத்துக் காட்டின் மூலம் கூறியருளினர் என்பதை உணர்வோமாக.

# 2. திருமுகப் பாசுரம்

செம்மை சான்ற திருந்திய மொழிகளில் தன்னேரில்லாத் தகைமையொடு விளங்குவது நந்தம் தண்டமிழ் மொழி என்பது எவர்க்கும் ஒப்பமுடிந்த முடிபாகும். இம்மொழி சிறந்து விளங்குவதற்கு உரிய காரணங்கள் பலவாக இருப்பினும், அவற்றுள் ஒன்று இம்மொழி இலக்கண இலக்கியங்களைப் பெற்றுத் திகழ்வதனாலேயே என்க. நந்தம் செந்தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தலை சிறந்தது என்பதை மேனாட்டு அறிஞர்கள் பலரும் ஒருமுகமாகக் கூறியிருப்பதிலிருந்து நன்கு உணர்ந்து கொள்ளலாம் "இலக்கியப் பெருமையில் இலத்தீன் மொழியையும் வெல்ல வல்லது தமிழ்" என்று வின்ஸ்லோ பெருமகனார் கூறி இருப்பதை ஒரு சான்றாகக் காட்டலாம். இத்தகைய பெருமை மிக்க மொழியில் கடித அமைப்பில் அமைந்த இலக்கியத்தினைப் பற்றிச் சிறிது ஆராய்தலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கடிதம் என்னும் பொருள் கொண்ட சொற்கள் முடங்கல், திருமுகம், மடல், ஓலை முதலியன. இங்ஙனம் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் இருத்தலை நோக்குங்கால், கடிதம் எழுதுதலில் நம்மவர்கள் தலை சிறந்து விளங்கினர் என்பதையும், அக்கடிதங்கள் வெறும் செய்திகளை அறிவிக்கும் திருமுகங்களாக மட்டும் இன்றி, பொருட் செறிவுடைய மடல்களாகவும் திகழ்ந்தன என்பதையும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருமுறைகள், தனிப் பாடல் திரட்டு போன்ற நூல்களில் பரக்கக் காணலாம்.

இத் திருமுகங்கள் மேற்கு நாட்டு அறிஞர்கள் போற்றுகின்ற செஸ்டர்பீல்டு, சிஸரியோ, ஷில்லர்,

ஹெரேஷியஸ் வால்போல், கூப்பர் போன்றவர்களின் கடிதங்கட்கு எட்டுணையும் பின் வாங்குதலின்றிச் சிறப்புடையனவாக உள்ளன. "கடிதம் எழுதுவது ஓர் ஒப்பற்ற அருங்கலையாகும்," என்று செஸ்டர்பீல்டு தன் மகன் பிலிப்புக்கு அறிவுறுத்தியிருக்கும் கருத்தை நம்மவர்கள் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நன்கறிந்தவர்கள் என்பதில் ஆசங்கை எழ இடமில்லை.

இக்காலத்தில் கடிதம் எழுதும் முறைளைக் கண்டு அவை மேனாட்டு அறிஞர்களின் போக்கைத் தழுவி எழுதப் படுகின்றன என்று கூறி வியப்புறுகின்றவர் ஒரு சிலர். அதாவது, மேற்கு நாட்டவர் தாம், கடிதம் எங்கிருந்து வருகின்றது என்பதை அறிவிக்க, முன்னர் வருகையினைக் (From) குறித்துப் பின்னர் இக்கடிதம் இன்னாருக்கு (To) எழுதப் படுகிறது என்பதையும் குறிப்பிட்டு, அதன் பின்னர்ச் செய்திகளை (Subject matter) அறிவிக்கின்றனர் என்று கூறிப் பெருமிதம் கொள்கின்றனர். இம் முறைகளை நம் செந்தமிழ்மொழியினரும் உணர்ந்திருந்தனர் என்பதை நன்கு விளக்க நம் பதினோராம் திருமுறைக்கண் முதலில் விளங்கும் திருமுகப் பாசுரத்தினைத் துணையாகக் கொள்வோமாக. அப்பாசுரம்,

*மதிமலி புரிசை மாடக் கூடல்*
*பதிமிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு*
*அன்னம் பயில்பொழில் ஆல வாயில்*
*மன்னிய சிவன்யான் மொழிதரும் மாற்றம் :*
*பருவக் கொண்மூஉப் படியென பாவலர்க்கு*
*உரிமையின் உரிமையின் உதவி, ஒளிதிகழ்*
*குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்*
*செருமா உகைக்கும் சேரலன் காண்க.*
*பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்*
*தன்போல் என்பால் அன்பன் ; பண்பால்*
*காண்பது கருதிப் போந்தனன்.*
*மாண்பொருள் கொடுத்து வ்ரவிடுப் பதுவே.*

என்பது. இது திருவாலவாயுடையாரால் சேரமான் பெருமாண் நாயனருக்குப் பாணபத்திரரது வறுமை தீரப் பொருள் கொடுக்கச் செய்யுள் வடிவில் எழுதப் பட்ட கடிதமாகும். இக்கடிதத்தில் "மதிமலி...சிவன் யாம்" என்பது வரையில் இன்னரிடமிருந்து இது வருகிறது என்பதும், பருவக் கொண்மூ....சேரன் காண்க" என்பது வரையில், இன்னருக்கு எழுதப் படுகிறது என்பதும், "பாண்பால் யாழ்பயில்... வரவிடுப்பதுவே" என்பது வரையில், எழுதப்படும் செய்தி இன்னது என்பதும் எத்தனை அழகாக பொறிக்கப் பட்டுள்ளன என்பதை நாம் நினைந்து பார்க்குங்கால், தமிழ்மொழியின் இலக்கிய நுட்ப அமைப்பின் முறைமை நன்கு புலனாகின்றதன்றோ? செஸ்டர்பீல்டு தம் திருமகனை பிலிப்புக்கு எழுதிய கடிதத்தில் "கடிதம் எழுதுவது ஓர் அருங்கலை" என்று கூறியது உண்மைதான் என்பதை இத் திருமுகப் பாசுரங் கொண்டே நன்கு உணரலாம்.

**இப்பாசுரம் பேரறிவுப் பொருளாய் விளங்கும்** இறைவரால் எழுதப்பட்டது என்பது தொன்று தொட்ட முடிவாகும். இறைவரோ, "பேரறிவே, இன்பப் பெருக்கே பராபரமே" என்று தாயுமானார் வாக்கிற்கும், "சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதற்கண் பெருமானே!" என்ற சிவப்பிரகாசரது மொழிக்கும் பொருளாய் விளங்குபவர். அத்தகைய பேரறிவுப் பிழம்பாகிய இறைவரால் பாடப் பெற்ற இத்திருமுகப் பாசுரம் சொல்நோக்கும், பொருள் நோக்கும் மற்று எந்நோக்கும், கொண்டு இலங் குவது என்பதைக் கூறவும் வேண்டுமோ? இத் திருமுகப் பாசுரத்தினைத் தொடங்கும் பொழுதே இறைவனர் "மதிமலி புரிசை" என்று தொடங்கி மதுரையின் மதிலின் மாண்பைப் புலப்படுத்தத் தொடங்குகிறார் அல்லரோ? மதுரையின் மதில் பல மாட்சிமைப்பட்ட அறிஞர்களின் அறிவுக் கூறு

பாடுகள் பெற்று விளங்கியது என்பதைச் சிலப் பதிகாரம் மதில்களில் அமைந்த பொறிகள் இன்ன என்பதைக் குறிப்பிட்டிருப்பதிலிருந்து நாம் உணர லாமே. இதனை உட்கொண்டன்றோ "மதி மலி புரிசை" என்றனர் மதிமுடி சொக்கேசர்.

"மாடக் கூடல்" என்பதும் பொருள் பொதிந்த தொடராகும். மதுரையம்பதியில் குடிவளத்தையும், அக் குடிமக்கள் வாழும் கட்டட அமைப்புக்களையும் காட்ட எழுந்த தொடரே இது. இவ்வாறே நாட்டின் மாடங்களைச் சிறப்பித்து, "செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கி" என்று ஞானசம்பந்தப் பெரு மானார் நவில்வதனாலும் அறிந்து கொள்ளலாம்.

"அன்னம்பயில் பொழில் ஆலவாய்" என்பது மதுரையம்பதியின் நீர்வளத்தையும் நில வளத் தையும் குறிப்பதாகும். நீர் மிக்கு இருந்தாலன்றி, அன்னங்கள் வாழா அல்லவா? "அன்னங்கள் பயிலும் ஆலவாய்" என்பதனால், நகரில் பல சோலை கள் அமைந்து, அச்சோலைகளில் நீர் நிலைகளும் பொருந்தி, மக்கள் மாலை நேரங்களில் நறுமணமும், நல்ல தென்றலும் துய்க்க அந்நகரினை அமைத்திருந் தனர் நகராண்மைக்கழகத்தினர் என்பதும் தெரிய வருகின்றது அன்றோ? இதனால், அக்கால நக ராண்மைக் கழகத்தினர் நற்றொண்டும் புலனாகிறது.

இங்ஙனம் இறைவனார், மதுரையம்பதியின் மாண்தரு வளங்களை முன்னர் அறிவித்துத் தம் திருமுகத்தினைத் தொடங்குவதன் உட் பொருள், வளமற்ற,வரண்ட நகரத்தினின்று எழுதப்பட்ட தன்று என்பதன் பொருட்டும், பாணபத்திரரது வறுமையைப் போக்கத்தக்க வளம் இல்லாதது போலும் என்று சேரர் எண்ணாதிருக்கும் பொருட் டும் இவ்வாறு மதுரையினைச் சிறப்பித்தனர் என்க. எழுதுகின்றவர் இறைவர் என்பதையும்

அறிவிக்க "மன்னிய சிவன்யாம்" என்ற தொடர் மூலம் விளக்கியருளினர்.

அடுத்தாற்போல், சேரமான் பெருமாண் நாயஞர் சிறப்பையும் எடுத்தியம்ப எண்ணி, அவர்க்குரிய சிறப்புக்களுள் கொடைச் சிறப்பினையே விதந்து கூற உளங்கொண்டு "பருவக் கொண்மூஉப் படியென பாவலர்க்கு உரிமையின், உரிமையின் உதவி" என்று வரைந்தனர். சேரர் பெருமாஞர், கொடைக் குணத்தில் ஒப்பாரும், மிக்காரும் இன்றித் திகழ்ந்தனர் என்பதைச் சேக்கிழார் பெருமாஞர் "இம்பர் உலகில், இரவலர்க்கும், வறியோர் எவர்க்கும் ஈகையிஞல் செம்பொன் மழையாம் எனப்பொழிந்து" என்று செப்பியதனுலும் தெள்ளிதின் உணரலாம். சேரர்மரபே பொதுவாகப் புலவர்கட்குப் பொன்னும் பொருளும் ஈந்து புகழ்பெற்றது என்பதைப் பதிற்றுப் பத்து என்னும் சங்கமருவிய நூலால் சங்கையறத் தெளிகின்ருேமல்லமோ? இந்த மரபின் உரிமை சேரர் மெருமாஞர்க்கு இருத்தல் கருதியும், நினைவுபடுத்தக் கருதியும், "உரிமையின், உரிமையின்" என்றனர். இந்த அளவில் சேரர் பெருமாஞரது புகழினைப் புகழ்ந்து நிறுத்திஞரல்லர் நீலமேனி வால் இழைபாகத் தொருவர். அம்மன்னரது குடையினையும் சிறப்பிக்க எண்ணியவராய் "குருமாமதிபுரை குலவிய குடைக்கீழ் செருமா உகைக்கும் சேரலன் காண்க." என்றனர். இவ்வாறு, குடையினைச் சிறப்பித்ததன் நோக்கம், அக்குடை வெயிலை மறைப்பதற்கு மட்டும் உரியதன்று; குடிமக்களின் துன்ப வெம்மையை மறைக்கவும் வல்லது; காக்கவும் வல்லது என்பனவற்றை அறிவிக்கவே என்க. இக் காரணங்களைப் பற்றியே மன்னர்களின் குடைகள் மாண்புற்றிலங்குகின்றன என்பதை,

"கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றே வருந்திய குடிமறைப்
பதுவே"

என்ற புறநானூற்றடிகளாலும்,

"திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்
கொங்கலர்ச் சென்னி குளிர்வெண் குடை போன்றிவ்
அங்கண் உலகளித்த லான்"

என்ற சிலப்பதிகார நூலாலும் அறிந்து கொள்ளலாம்.

"செருமா உகைக்கும் சேரலன் காண்க" என்று கழறிற்றறிவாரைச் சுட்டிக் கூறியதன் நோக்கம் பின்னுல் இவர் நம்பி ஆரூரருடன் கைலைக் கேகுங்கால், கலினமாவில் கடிது ஊர்ந்து செல்ல வேண்டி இருக்கும் குறிப்பினை முன்கூட்டி அறிவிக்கும் பொருட்டே ஆகும். இவ்வாறு பின்னர் நிகழ்வதை முன்னரே அறியும் வண்ணம் சில அருந் தொடர்கள் அமைந்து விடுவதை இன் தமிழ் இலக்கிய நூல்களில் இனிதுறக் காணலாம். தயரதன் தன் திருமகனை இராமனைக் கௌசிக முனிவருடன் அனுப்ப விழைந்து, அவனை அழைக்கக் கட்டளையிட்ட பணியாளரிடம் "திருவின் கேள்வன்" என்று குறிப்பிட்டது, பின்னர்ச் சீதையைத் திருமணம் முடித்தலை முன் கூட்டி அறிவிக்கும் மங்கலச் சொல்லாகவன்றோ அமைந்து விட்டது? இங்ஙனம் பின்னுல் நிகழ்வதை முன்னுல் அறிவிக்கும் சொற்றொடர்களை அமைப்பதற்குக் கம்பர் யாங்ஙனம் உணர்ந்தனர்? அவர் திருமுறைகளை நன்கு பயின்ற பயிற்சியினுல் என்று கூறின், அது மிகையாகாதன்றோ?

செருமா உகைக்கும் சேரலன் காண்க

என்ற தொடர்ப் பொருளைச் செவ்வன் சிந்தித்ததன் பயனன்றோ,

"திருவின் கேள்வனைக் கொணர்மின்"

என்று செப்பச் செய்தது?

இங்ஙனம் தம் நாட்டையும், சேரர் பெருமானுர் சிறப்பையும் புகழ்ந்து கூறிய இறைவர், தாம்

கடிதம் தந்து அனுப்பும் பாணபத்திரரையும் சேரர்க்கு அறிமுகப்படுத்தி வைக்க விரும்பியவராய், முன்னர் அவரது இசைப்புலமையினை உணர்த்தவேண்டி "யாழ்பயில் பாணபத்திரன்" என்று குறிப்பிட்டருளினர். அவ்யாழ்ப் பயிற்சியினையும் நன் முறையில் பெற்றவர் என்பதை, "பண்பால் யாழ்பயில் பாணபத்திரர்" என்ற தொடரால் விளக்கியருளினர். யாழ்ப் பயிற்சி உடையராயினும், கல்விச் செருக்குக் காரணத்தால் கடவுளை மறந்த கயவர் அல்லர்; எம்மால் உன்பால் அனுப்பப்படுபவர் என்பதை நன்குணர்த்த 'எம்பால் அன்பன்" என்று எடுத்து மொழிந்தனர். "எம்பால் அன்பன்" என்று எடுத்து மொழிந்ததனுல் "நாம் அன்புடையோம் அல்லமோ" என்று சேரர் நினையாதிருக்கும் வண்ணம், மிக்க விழிப்புடன் "உன் போல்என்பால் அன்பன்" என்றும் எழுதி மன்னர்க்கு அத்தகைய எண்ணம் எழாதவாறு செய்தனர்.

என்னே இறைவர் பேரறிவுடைமை! தம்மால் அனுப்பப்படுபவர் வறுமையுற்ற காரணத்தால் உம்பால் அனுப்புகின்றேம் என்று கூறிப் பாணபத்திரருக்கு இழுக்கு உண்டாகுமாறு செய்ய எண்ணமற்றவராய், அவரது மாண்புமணக்க, "காண்பது கருதிப் போந்தனன்" என்றே திருமுகத்தில் தீட்டியருளினர். இவ்வாறு எழுதிமுடித்து முடங்கலினைக் கொடுத்தனுப்பின், பொருள் கொடாமல் சேரர் அனுப்பிவிடுவரோ என்ற ஐயத்தினராய் "மாண்பொருள் கொடுத்து" என்றும் குறிப்பிட்டுப் பொருளினை அளிக்குமாறு தூண்டினர். ஒருவேளை சிறுபொருள் கொடுத்துச் சென்று வருக என்று சொல்லி விடுவாரோ என்று சிந்தித்த சிவனுர், பெரும் பொருளைக் கொடுக்க என்று கட்டளையிடுவார் போல் "மாண் பொருள்

கொடுத்து" என மாண்புற மடலை வரைந்தனர். இந்த அளவிலும் திருமுகப் பாசுரத்தினைத்தீட்டி முடிக்காது, இறுதியில் "வர விடுப்பதுவே" என்று வரைந்து முடித்துள்ளதை என் சிற்றறிவு கொண்டு என்னென்று செப்ப வல்லேன்? ஆ! "வர விடுப் பதுவே" என்னும் செழும் தொடரைப் பன்முறை யும் பன்னிப் பன்னிச் சிந்திக்க வேண்டியவரா கின்றோம். இத்தொடரின் ஆழ்பொருள் அமைப் பினை அனுபவிக்க வேண்டியவராகின்றோம்.

பாணபத்திரர் யாழ் இசையில் வல்லவர். அத்து டன் இறைவர்தம் அன்பை எய்தப் பெற்றவர்; மேலும் இறைவரால் அனுப்பப்பட்டவர். இன் னோரன்ன சிறப்புடைய சீரியரைச் சின்னாளேனும் உடன் வைத்து உவகையும் உறவுங் கொள்ள வேண்டும் என்று உளங்கொண்டு, சேரர் பெரு மானார் பாணபத்திரரை நிறுத்திக் கொள்ளா திருக்கும் பொருட்டே "வர விடுப்பதுவே" என்றனர். நாளும் யாழிசை கேட்டு இன்புறும் இறைவர், யாங்ஙனம் பாணபத்திரரைத் தணந் திருப்பார்? ஏழிசையாய், இசைப்பயனாய் இருப் பவர் இறைவர். ஆகவே, உடனே பொருள் தந்து அனுப்பி வைக்க உளங்கொண்டே "வர விடுப் பதுவே" என்று கட்டளையிட்டருளினர். இத்தகைய மாண்பொருள் பலவும் மாண்புறப் பெற்ற இத்திரு முகப் பாசுரத்தினைப் பலகாலும் பயின்று இன் பத்தினைத் துய்த்து வாழ்தல் நம்கடமையாகும்.

# 3. பத்துப்பாட்டின் பண்பு

பாட்டு இன்னது என்பதைப் பலபடப் பகர்கின்றன பன் மொழிகள். பலவகைத் தாதுக்களினால் உயிர்க்கு இடனாக இயற்றப்பட்ட உடம்பு போலப் பல்வகைச் சொற்களாலும் பொருளுக்கு இடனாகத் தங்கள் அறிவினால் கற்றுவல்லோர் அலங்காரம் தோன்றச் செய்வது பாட்டு என்றும், அறிவு உலகிற்கு அழகு செய்வதாய், நிறைந்த பொருட் பொலிவு உடையதாய்த் துலங்குவது பாட்டு என்றும் செந்தமிழ் நூல்கள் செப்பிக் களிக்கின்றன. மக்கள் மன அறிவினின்றும் வடித்து இறக்கப்பட்ட தூய அமிழ்தம் ஆகும் என்று அறைகின்றனர் ஆங்கில அறிஞர்கள். இங்ஙனம் இயம்பப் பெறும் பாட்டின் இலக்கணம் அனைத்தும் பொருந்தப்பெற்றதே பத்துப்பாட்டு என்னும் பன்னரும் புகழுடைய நூலாகும்.

உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் வரைந்த உரைகளில் இந்நூற்குரிய உரையும் ஒன்றாதலின், அதனை அச்சிட்டு வழங்கிய ஐயர் அவர்கள் தம் முகவுரையில்

" அமிழ்தினில் சிறந்த தமிழெனும் மடந்தை
கந்தரத் தணிமணிக் கலன்அர சென்ன
உத்தமர் புகழும்இப் பத்துப் பாட்டு,"

என்றும், தமிழ்விடுதூது என்னும் தனிப்பெரும் பனுவல்,

" மூத்தோர்கள் பாடி அருள்பத்துப் பாட்டும்,"

என்றும், உரைச் சிறப்புப்பாயிரம் உரைத்த ஆசிரியர் ஒருவர்.

"ஆன்றோர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து
சான்றோர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டும்,"

என்றும், பாண்டிமண்டல சதக ஆசிரியர்,

"தமிழ்ச்சங் கத்தின், நிலைபெற் றாபர்பத் துப்பாட்டும்,"

என்றும், இந்நூலைப் புகழுமாற்றால் இதன் பண்பினை நன்கு உணரலாம். இப் பத்துப்பாட்டுப் பனுவலின் சுவையை நன்கு துய்ப்பவர்கள் ஏனைய இடைக்கால நூல்களைப் படிக்க உள்ளம் கொள்ளார் என்பதையும், பத்துப்பாட்டே உள்ளதை உள்ளவாறு உரைக்கும் வரலாற்று நூல் ஆகும்; பின்வந்தவை கற்பனை நிறைந்தவை; அக்கற்பனையும் பொருட்கிசைந்த கற்பனை அன்று; இலக்கணத்திற்கு இயைந்த கற்பனையும் அன்று, என்பதையும் அறுதியிட்டு உறுதியாக எடுத்துக்காட்டுவார் போலப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்,

"பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில்
கற்பனையே,"

என்று பாடி மகிழ்கின்றார்.

இத்தகைய மாண்பு வாய்ந்த பெருநூற் கடலினின்று கிடைக்கும் நித்திலங்களை எடுத்துக் காட்டுவது இச்சிறுகட்டுரையால் ஏலாது. இஃது இயற்கைக்கு ஓர் இருப்பிடம், ஓவியத்திற்கோர் உறைவிடம், உவமை யணிக்கோர் உயர்விடம். தமிழக நாகரிகத்தினைத் தனிச்சிறப்புடன் காட்டுதற்குரிய தகவிடம் என்று கூறின் அது மிகையாகாது.

"இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறை
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும், குன்று,"

என்னும் திருமுருகாற்றுப் படையின் அடிகளில் இயற்கை யழகின் இயல்பு எத்துணைச் சிறப்புடன் எடுத்து இயம்பப்பெற்றிருக்கின்றது பாருங்கள்!

அழகு நிறைந்த சிறகுகளையுடைய வண்டின் கூட்டம் சேறு நிறைந்த வயலில் மலர்ந்த தாமரை மலரில் இரவு முழுவதும் உறங்கி, விடியற்காலத்தே எழுந்து நெய்தல் மலரை ஊதி மாலைப்போது கண் போன்று மலர்ந்த சுனைப்பூக்களிலேசென்று ஒலிக்கும் திருப்பரங்குன்றம் என்பதன்றோ இவ்வடிகளின் பொருள்!

"அறல்போல் கூந்தல் பிறைபோல் திருநுதல்
கொலைவில் புருவத்துக் கொழுங்கடை மழைக்கண்
இலவிதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்ப்
பலவுறும் முத்தில் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை அன்ன
பூங்குழை ஊசல் பொறைசால் காதின்
நாண்அடச் சாய்த்த நலங்கிளர் எருத்தின்
ஆடமைப் பணைத்தோள் அரிமயிர் முன்கை
நெடுவரை மிசைஇய காந்தள் மெல்விரல்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்உகிர்
அணங்கென உருத்த சுணங்கணி ஆகத்து
ஈர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்
உண்டென உணரா உயவு நடுவின்
இரும்பிடித் தடக்கையின் செறிந்துதிரள் குறங்கின்
வருந்துநாய் நாவில் பெருந்தரு சீறடி
பெடைமயில் உருவில் பெருந்தகு பாடினி.

இப்பொருநர் ஆற்றுப்படை அடிகள் ஒரு பெண்ணின் எழில் உருவ ஓவியத்தை யன்றோ எழுதிக் காட்டு கின்றன. இவ்வடிகளைப் படிக்கும் தோறும் படிக்குந் தோறும் பாடினியின் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் நாம்நேரில் காண்பதுபோன்று அல்லவோ இவ்வடிகள் காட்சி அளிக்கின்றன.

ஆற்று மணல் போன்ற கூந்தலும், பிறைமதி போன்ற நெற்றியும் வில்போன்ற புருவமும், குளிர்ந்த கண்களும், செந்நிற வாயும், முத்தன்ன பற்களும், குழை அணிந்த காதுகளும், குனிந்த கழுத்தும், மூங்கில் போன்ற தோளும், முன்கையும், காந்தள்மலர் போன்ற விரல்களும் கிளிமூக்கன்ன நகங்களும், நீர்ச் சுழி போன்ற கொப்பூழும் நுண்ணிய இடையும், யானையின் தடக்கை போன்ற திரண்ட தொடைகளும், நாயின் நாப்போன்ற பாதங்களும் உடைய பாடினி என அப்பாடினியைச் சித்திரத்தில் எழுதிக்காட்டு வார் போலக்காட்டி இருக்கும் இச்சொல் ஓவியத்தைக் காணும் தோறும், எத்துணை இன்பம் பயக்கின்றது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! செம்மையும், பசுமையும், வெண்மையும், கருமையும் முதலான வண்ணங்களைச் சொல்லால் சித்திரித்துக் காட்டும் திறனை என்னென்றும் இயம்புவது! இவ்வடிகளையே உவமை நயத்திற்கு எடுத்துக்காட்டாக இயம்பலாம். நகத்திற்குக் கிளிவாயும், விரல்கட்குக் காந்தள் மலரும், சீறடிக்கு நாயின்நாவும் எத்துணைப் பொருத்தமான உவமைகள் என்பதை இயம்பவும் வேண்டுமோ?

இனி, இப்பத்துப் பாட்டின்கண் நாகரிக நயத்திற்கு இரண்டோர் இடங்களைச் சுட்டிக்காட்டி, இக் கட்டுரையினை இனிதின் முடிப்போமாக. "இக்காலத்தில் வாழும் மாதர்கள் தாம் எதற்கும் முன்னணியில் நிற்கவல்லவர். இதோ பாருங்கள்! இம் மாதராள் உந்து (Motor Car) வண்டியினை மொய்ம்புடன் விடுகின்றனள். இம்மங்கையினைக் காணுங்கள்! எத்துணை வீரமான செயல்களைச் செய்கின்றனள்! இத்துணையும் மேனாட்டு நாகரிகம் நம்நாட்டில் புகுந்த பின்னரே நிகழ்ந்த நிகழ்ச்சியாகும்" என்று கூறிப் பெருமிதம் கொள்கின்றனர். அன்னார் நம் தொன்னூல்களைக் காணாத் தொகுதியினர் என்று கூறுது

வேறு அவர்களைக் குறித்து என்ன கூறுவது?

"மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்ப"

என்னும் அடியினைப் பெரும்பாணாற்றுப் படையில் பார்க்கும் பொழுது, எருதுகளை முதுகில் புடைத்து வண்டிகளைப் பூட்டும் திறம் மாதர்கள் பெற்றிருந்தனர் என்பது பெறப்படுகின்றதன்றோ? உந்து வண்டிகளை ஓட்டுவதுகூட எளிது. ஆனால், பீடு நடைக்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டாக உள்ளதும், வீரத்திற்கு உறைவிடமாக உள்ளதுமான எருதுகளின் முதுகினை அடித்து அதட்டி ஓட்டும் ஆண்மையினைத் தமிழக மாதர் பெற்றிருந்தனர் என்றால், அவர்கள் மென்மையுடன் வன்மையும் கலந்த வனிதையர்கள் என்பது அறியக்கிடக்கின்றதன்றோ!

தமிழர்கள் வீரத்திலும்சிறந்தவர்கள் என்பதற்குப் பல சான்றுகள் நம்தண்டமிழ் நூல்களில் காணப்படுகின்றன. இப் பத்துப்பாட்டில் மாதர்கள் வாள் ஏந்தி அரசனை அல்லும்பகலும் போர்க்களத்தில் மெய்க் காப்பாளராக இருந்து காத்து வந்தனர் என்பதைப் படிக்கும்போது உணர்ச்சி யற்றவரும் வீரம் கொண்டு எழவேண்டியவர்களாவார்.

"குறுந்தொடி முன்கைக் கூந்தல்அம் சிறுபுறத்து
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சில் பூண்ட மங்கையர்."

என்பன முல்லைப்பாட்டு அடிகளாகும்.

இன்னோர் அன்ன நயங்கள் பலபடப் பொதிந்து இப்பத்துப் பாட்டுக் காணப்படுகின்றது. அந் நூலைத் துருவி அறிந்து சுவைத்து இன்பம் பெறுதல் தக்கதாகும்.

# 4. திருக்கோவையார்

## தோற்றுவாய்

தமிழ் மக்கள் தம் வாழ்வை இருகூறுக வகுத்துக் கொண்டனர். அவையே, அகவாழ்வு புறவாழ்வு என்பன. புறவாழ்வில் அறம், பொருள், வீட்டின் பாகுபாடுகள் விளக்கப்பெறும். அகவாழ்வில் இன்பப் பகுதியே இயம்பப்படும். அகம் எனும் சொல்லே இன்பம் என்னும் பொருள் தந்து நிற்குமாயின் வேறு கூறுவானேன் ?

## கோவையின் இலக்கணம்

அகமாகிய இன்பத்தை விளக்க எழுந்த இலக்கணங்களும், இலக்கியங்களும் பலவாகும். அவற்றுள் கோவை என்னும் நூலுக்கு இடனுண்டு. தமிழ்மொழியில் உள்ள தொண்ணூற்ருறு வகையான பிரபந்தங்களுள் ஒன்று கோவையென்பது. இக்கோவை அகப்பொருள் பற்றிக் கூறுவதனுல் இஃது அகப்பொருள் கோவை என்றே கூறப்பெறும். இதனை எவ்வாறு பாடுதல் வேண்டும் என்பதை இலக்கணமுகத்தான் அறிய வேண்டின்,

" முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முகந்து
களவு கற்பெனும் வரைவுடைத் தாகி
நலனுறு கலித்துறை நானூற் ருக
கூறுவ தகப்பொருள் கோவை ஆகும்."

என்ற இலக்கணவிளக்க நூற்பாவால் நன்கு அறியலாம்.

## கோவையால் அறியக்கிடப்பன

கோவை நூல்களிலிருந்து தமிழ்நாட்டுத் திருமண முறையை ஒருவாறு உணரலாம். கோவையின் பொருட் சுருக்கம் பின்வருமாறு, ஒருவன் தன்

தோழனோடு சோலைவழியே வருவான். அவ்வாறே ஒருத்தி தன் தோழியோடுசோலையில் பூக்கொய்யவும் புனல் விளையாடவும் வருவாள். அவள் தனித்து இருக்கையில் தலைமகன் கண்டு காதலிப்பான். இவருடைய மனமும் இயைந்து ஒன்றுபடும். இந்த நிகழ்ச்சி சில நாள் பிறர் அறியாமல் நிகழப் பின் தோழி அறிவாள். அவள் துணையால் சிலநாள் தலைவன் தலைவியர் கூடி மகிழ்வர். தலைவியின் வேறுபாட்டை அறிந்த தலைவியின் உறவினர் தோழியை வினவத் தோழி தலைவிக்கு ஏற்பட்ட காதல் நிகழ்ச்சியைப் புனல்தரு புணர்ச்சியாலும், பூத்தரு புணர்ச்சியாலும், களிறுதரு புணர்ச்சியாலும் உறவினர்க்கு உணர்த்துவள். அதனால், சுற்றத்தினர் தலைவியை வெளியில் ஏகாதவாறு தடுப்பர். இத்தடையால் தலைவன் தலைவியைத் தோழியின் துணையால் தன்னூருக்கு அழைத்துச் செல்வான். அங்கு மணத்தை முடிப்பன். மீண்டும் மணமகள் இல்லம் திரும்புவான். பெற்றோர் அவனுக்கே அவளை ஈந்துவிடுவார். இருவரும் இல்லறத்தை இனிது நடத்துவர். மக்கட்பேற்றை மாணுறப்பெற்று இன்பம் கர்வர்.

இன்னோரன்ன நிகழ்ச்சிகள் கோவையாகச் சொல்லப்படுதலின், இது கோவை என்னும் பெயரைப் பெற்றது. இதுகாறும் கூறிப்போந்தவை கோவையின் பொதுத்தன்மைகளாகும். இனி நாம் எடுத்துக்கொண்ட பொருளாகிய திருக்கோவையாரைப்பற்றிக் கூறுவோமாக. திருக்கோவையார் ன்பது திருவாதவூரரால் பாடப்பட்ட கோவை நூலாகும்.

## திருக்கோவையார் மாண்பு

தமிழில் உள்ள கோவைகள் யாவும் யார் மீது பாடப்படுகின்றனவோ, அவர்கள் பெயரையொட்டியும், எத்தலத்தின்மீது பாடப்படுகின்றனவோ அத்தலத்தின் பெயரைச் சார்ந்தும் வழங்கப்பெறும். முறையே

தஞ்சைவாணன் கோவை, திருவாரூர்க்கோவை என்னும் பெயர்களால் இவ்வுண்மையை நன்கு உணரலாம். இவ்வாறே ஏனைய கோவை நூல்கள் விளங்குவதைக் காணலாம். இவ்வாறு பாட்டுடைத் தலைவன் பெயரையோ தலத்தின் பெயரையோ சார்த்தி வழங்கப்பெறுமல் 'கோவை', என்று கூறியதும், இன்ன கோவை என்றுணரப்பெறுமல் திகைக்க நேரிடும். ஆனல், திருக்கோவையார் என்று கூறிய அளவில் நமக்கு வேறு கோவை நூல்களில் எண்ணம் செல்லாமல், திருச்சிற்றம்பலக் கோவையின்மீதே செல்லும் என்பதை எவரும் மறுக்க இயலாது. இதன் ஈடும் எடுப்பும் இல்லாப் பெருமையை முன்னே திரு என்னும் சொல்லையும், பின்னே ஆர் என்னும் உயர்வு சிறப்பு விகுதியையும் புணர்த்திக் கூறியதினின்றும் நன்கு உணரலாம். திரு என்னும் சொல்லுக்குப் பேராசிரியர் 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என்று பொருள் கூறியதற்கேற்ப, இக் கோவையும் விளங்குதலின், 'திருக்கோவையார்' என்ற பெயருடன் இலங்குவதாயிற்று.

இந்நூலின் சிறப்பைப்பலபடப் புனைந்து கூறியுள்ளனர் புலவர் பெருமக்கள். தமிழில் ஒருவன் நல்ல புலமைபெற்றுத் திகழவேண்டின், மூன்று நூல்களைப் படித்துவிடின் போதுமானது என்பதை இலக்கணக் கொத்து ஆசிரியர் சுவாமிநாத தேசிகர் கூறும்போது,

> "பல்கால் பழகினும் தெரியா உளவேல்
> தொல்காப் பியம்திரு வள்ளுவர் கோவையார்
> மூன்றினும் முழங்கும்"

என்று கூறிப் போந்தனர். தொல்காப்பியம், திருக்குறள் நூல்களோடு ஒருங்குவைத்து எண்ணப்படும் நூல் திருக்கோவையார் என்று இலக்கணப் பேராசிரியர் இயம்பின், இதற்குமேல் இதன் மாண்பை இயம்பவும் வேண்டுமோ ?

திருமுறை வகுத்த பேராசிரியராம் நம்பியாண்டார் நம்பிகள்,

" ..................................திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயும்மற்
றப்பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே"

என்று இதில் அடங்கிய பொருட்சிறப்பை நனிவியந்து கூறியுள்ளார்.

செவ்வந்திப் புராணம், திருவெண்காட்டுப் புராணம் ஆசிரியர்கள் திருக்கோவையார் பாடிய ஆசிரியரைப் புகழ்கையில், முறையே 'திருக்கோவை, நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை,' என்றும், சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியும் செம்முகிலை,' என்றும் கூறி நூலின் இன்சுவையை எடுத்துக்காட்டுவார் ஆயினர்.

திருக்கோவையாரின் சொல்லின்பத்தையும் பொருள் இன்பத்தையும் ஒருங்கே துய்த்து இன்புற விழைந்த ஒரு புலவர், தாம் வழிபடும் கடவுளை நோக்கி,

" கண்ணிய ர்த் தேனூறு செஞ்சொல் திருக்கோவை
என்கின்ற நானூறும் என்மனத்தே நல்கு"

என்று வேண்டுவார் ஆயினர்.

திருக்கோவையாருக்கு எந்நூலுக்கும் இல்லாத தனிச்சிறப்பு ஒன்று உண்டு. அஃது, இறைவனே இதைத் தன் கையால் எழுதிய சிறப்பாகும். இறைவன் 'பாவை பாடின வாயால் ஒரு கோவை பாடுக' என்றனன். இன்னோரன்ன சிறப்பியல்பு இந்நூலுக்கு இல்லையானால்,

"ஆரணங் காண்என்பர் அந்தணர் யோகியர் ஆகமத்தின்
காரணங் காண்என்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காண் என்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே"

என்று ஒரு புலவர் இம்முறையில் அறுதியிட்டு உறுதி யாகக் கூறியிருப்பரோ ?

**திருக்கோவையார் பாடிய ஆசிரியர் யார் ?**

இந்த வினவும் எழுதற்கு இடனுண்டா என்று சிலர் ஐயுறலாம். ஆம் எழுதற்கு இடனுண்டு. வாத வூர் சிவபாத்தியன் பாடியது என்பது சிலர் கருத்து. தொன்றுதொட்டுப் பரம்பரையாக எவரும் கூறிக் கொண்டு வருவது திருக்கோவையாரைப்பாடியவர் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் என்பதாகும். நூல் வழக்கும் இதனை நன்கனம் வலியுறுத்தும்.

"தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை இருபோதும் இறைஞ்சிடுவேன்"

என்று **செவ்வந்திப் புராணமும்,**

" சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியும் செம்முகிலை
மற்றொப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்கும் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே.;

என்று **திருவெண்காட்டுப் புராணமும்,** அறிவிப்பதி னின்றும் அறியலாம். இக்காரணங்களால் திருவா சகம் பாடிய மாணிக்கவாசகரே திருக்கோவையாரைப் பாடினர் என்பதை அறிந்தோம். ஆனல், இவை அனைத்தும் **புறச்சான்றுகளாகும். அகச்சான்றுக ளாலும்** இக்கருத்தை நன்கு வலியுறுத்தலாம். அத னையும் ஈண்டு நோக்குவோமாக.

அத் திருவாசகத்தில் காணும் சொல்லும், பொருளும், திருக்கோவையாரில் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றமையின், அவற்றை எடுத்துக் காட்டின் மணிமொழியாரே திருக்கோவையார்க்கும் ஆசிரியர் என்பது வெள்ளிடைமலை என விளங்கும் என்க. திருக்கோவையாரில், வழி வினுதல் என்னும் துறை கூறும் பகுதியில்,

"சிலம்பணி கொண்டசெஞ் சீறடி பங்கன்தன் சீராடியார்
குலம்பணி கொள்ளஎனைக் கொடுத்தோன்"

என்னும் அடிகள் திருவாசகத்தில் திருப்பூவல்லிப் பகுதியில் வரும்,

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீர்அடியார் கூட்டமும் வைத்தெம்
பெருமான்"

என்னும் அடிகளை நினைவுபடுத்துகின்றன.

"சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செய்வாய்த்
துடையிடையீர்
அழளா தொழியின் ஒழியா தழியும்என் ஆருயிரே"

என்னும் ஆற்றுதுரைத்தல் துறையை உணர்த்தும் கோவையார்ப் பாடல்.

"அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பா
ரார்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்
பலக்கூத்த"

என்னும் திருவாசகக் கோயில் மூத்த திருப்பதிகத்தின் சொல்லையும் பொருளையும் தழுவி நிற்பதை உணரலாம்.

"மைத்தழை யாநின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற அன்பினர் போல
விதிர்விதிர்த்து."

என்பது திருக்கோவையாரில் இரக்கத்தோடு மறுத்தல் என்னும் துறையைச் சார்ந்த பாடல். இதில் விதிர் விதிர்த்து என்று பெய்யப்பட்ட தொடர்,

"மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன் விரையார்
கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி
உள்ளம்"

என்னும் திருவாசகத் திருச்சதக முதற்பாட்டில் மிளிர்வதைக் காண்க.

மாணிக்கவாசகர் தம்மை நாயினும் கடைப்பட்டவன் என்று அடிக்கடி கூறிக்கொள்வதைத் திருவாசகத்தில் பல இடங்களில் காணலாம்,

'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு'—சிவ புராணம் 'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த
நாயகனை'—திருக்கோத்தும்பி

இந்தக் கருத்தைக் கருத்தில் கொண்டேதான் திருக்கோவையாரிலும்,

**" நாய்வயின் உள்ள குணமும் இல்லேனைநற் றொண்டு கொண்டு**
**தீவயின் மேனியன்"**

என்று ஆசிரியர் மொழிவார் ஆனார். இவ்வாணித்தரமான அகச்சான்றுகளால் மாணிக்கவாசகரே திருக்கோவையாரின் ஆசிரியர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது.

இங்ஙனம் இருக்க, வாதவூர்ச் சிவபாத்தியன் திருக்கோவையாரைப் பாடினார் என்ற ஐயம் எழுந்தமைக்குக் காரணம், நம்பியாண்டார், "வாதவூர்ச் சிவபாத்தியன் செய்திருச் சிற்றம்பலப் பொருளார் தரு திருக்கோவை" என்று பாடி இருப்பதாகும். ஈண்டும் சிவபாத்தியர் என்பவர் மாணிக்கவாசகரே.

## திருக்கோவையார் கவிநயம்

திருக்கோவையாரில் உள்ள நானூறு பாடல்களும் நனி சிறந்த பாடல்கள். ஆதலின், எல்லாப் பாடல்களின் சொல்நயம் பொருள் நயங்களை எடுத்து இயம்புதல் எளிதன்று. என்றாலும், 'பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம்' என்னும் முதுமொழிக்கிணங்க, அந்நானூறு பாடல்களின் கருத்துக்களில் ஈங்கொன்று ஆங்கொன்றாகச் சிலவற்றையே ஈண்டெடுத்து இயம்புதல் நன்றன்றோ.

கோவையில் குறிப்பிடும் மணமகன் மணமகளை அகப்பொருள் இலக்கணப்படி தலைவன் தலைவி என்று குறிப்பிடுவது மரபாகும். அம்முறைக்கிணங்க

மணிமொழியார் கூறிய தலைவனுடைய தன்மைகளையும் தலைவியின் பண்புகளையும் முதலில் சிந்திப்போமானுல், அவர்கள் வாழ்க்கை பின்னுல் எவ்வாறு சிறந்து விளங்கி இருக்கும் என்பது நன்கு தெரியவரும்,

## தலைவன் தன்மை

"காரணி கற்பகம், கற்றவர் நற்றுணை, பாணர்ஒக்கல்
சீரணி சிந்தா மணிஅணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன், தக்கோர்தம் சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க்கு ஊரன்மற் றியாவர்க்கும் ஊதியமே"

என்னும் இப்பாடலில் தலைவனை மேகம், கற்பக விருட்சம், படித்தவர்களுக்கு நண்பன், பாணர்கட்கு உறவினன், சிந்தாமணி, கொன்றைமாலை, சங்கநிதி, ஊழ், ஊருணி என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கூறியதற்கு ஏற்ற காரணங்கள் உண்டு. மேகம் கைம்மாறு கருதாமல் பிறர்க்குக் கொடுக்கும் தம்மையுடையது. கற்பகம் வேண்டியபோது வேண்டுபவர் வேட்கைக் கேற்பக் கொடுக்கவல்லது. நினைத்ததைத் தருதலில் சிந்தாமணி நிகர் அற்றது. அவரவர்கட்கேற்பப் பயன் கொடுக்கவல்லது விதி. பொதுக்குளமோ, இணரு எவர்க்கும் நீரை ஈந்து இன்புறத்தக்கது. இங்ஙனம் உவமிக்கப்பட்டவற்றின் பண்புகள் இத்தலைமகன்பால் பொருந்திக் கிடந்தமையின், அவனுக்குக் காரும், கற்பகமும், சிந்தாமணியும், சங்கநிதியும், விதியு நிகராயின. இவன் கல்வி அறிவில் சிறந்து விளங்கினமையால் கற்றவர்க்கு நற்றுணையாகவும், கல்வியறிவுக் கேற்பக் கடவுள் அன்பும் பெற்றவனுக விளங்கினமையால் சிவனடிக்குத் தார் அணி கொன்றையனுகவும் திகழ்ந்தான். இங்ஙனம் தலைவனது தனிப்பெரும் பண்பை அங்கையில் நெல்லிக்கனியென அறிந்து கூறியவர் இதுவரையில் எவரேனும் உளரோ ?

இனித் தலைவியின் தன்மையை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார் என்பதையும் சிந்திப்போமாக. பெண்களுக்குப் பிறப்புரிமையாய் இருப்பது நாணம். இந்த நாணத்தை அவர்கள் உயிரினும் சிறந்ததாகக் கருதுவர் என்பது நம் முன்னோர் கருத்து. ஆனால், அதனினும் சிறந்ததாகப் பெண்கள் கொள்ள வேண்டியது கற்பு என்பதை அறிஞர்கள் அறிந்து கூறியதை நாம் சிந்திக்கும்போது பெண்களுக்குரிய பொறுப்பு அளவிடற்கரியது என்பது புலனாகும். இல்லையானால் ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியனார்,

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"

என்று விதி வகுக்கமாட்டார். இதனைக் கருத்துள் கொண்ட ஆசிரியர் தலைமகள்இலக்கணத்தை இயம்புகையில்,

"தாயிற்சிறந்தன்று நாண்தைய லாருக்கந் நாண்தகைசால்
வேயிற் சிறந்தமென் தோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடும்எம் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே"

என்று கூறி அவளது இயற்கை எழிலால் புறப்பண்பையும், கற்புச் சிறப்பால் அகப்பண்பையும் நன்கு விளக்கியுள்ளார்.

இவ்விரு கோவைப் பாடல்களால் தமிழ்நாட்டுத் தலைவன் தலைவியர் எவ்வாறு இலகினர் என்பது நமக்கு நன்கு புலனாகின்றது. இங்ஙனம் நலத்தாலும் குணத்தாலும் ஒற்றுமைப்பட்ட தலைவன் தலைவியர் வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் இருவர்க்கும் ஒன்றாகவே அமையுமே அன்றி, ஏற்றத்தாழ்வாக அமையா என்பதை நன்கு விளக்கவே மணிமொழியார்,

"காகத் திருக்கண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்துள் ஓர்உயிர் கண்டனம் யாம்இன்று யாவையுமாம்

க—3

ஏகத் தொருவன் இரும்பொழில் அம்பல வன்மலையில்
தோகைக்கும் தோன்றற்கும் ஒன்ருய் வரும்இன்பத்
துன்பங்களே''

என்று எடுத்து மொழிந்தனர்.

இப்பாடலிலிருந்து ஆசிரியர் பொருள்களைக் கூர்ந்து கவனிக்கும் இயல்புடையவர் என்பதும் புலனுகிறது. காக்கையை நாமும் பார்க்கின்ருேம். அதற்கு இரு கண்கள் இருப்பதையும் உணர்கிருேம். ஆனல், அவ்விரு கண்களும் ஒரே சமயத்தில் ஒரு பொருளைப் பார்க்கும் வலியற்றவை. அஃது ஒரு பொருளைப் பார்க்கின், தலையைச் சாய்த்தே காண்பதை ஆசிரியர் உணர்ந்தார். அவ்வுவமையைத் தக்க இடத்தில் அமைக்கத்தலைவன் தலைவியர்களை இடமாகக்கொண்டனர். தலைவன் தலைவியர்க்கு உடல் இரண்டே ஆயினும், உயிர் ஒன்றேயாகும் என்ற சீரிய கருத்துடன் இன்ப துன்ப நுகர்ச்சியும் ஒரு படித்தாகும் என்ற அரும்பெரும் கருத்தையும் காட்டக்காக்கையின் இரு கண்களை உவமை கூறி விளக்கிய நுட்பத்தை என்னென்று வியப்பது !

திருக்கோவையாரில் சீரிய கருத்துக்கள் பலப்பல காணப்படுகின்றன. தலைவன் தலைவியைத் தன்னூருக்கு அழைத்துக்கொண்டு செல்கிருன். அதனை ஆற்ருத நற்ருய் தன் மகளைத் தேடிவரப் புறத்தே புறப்பட்டாள். வழியில் யோகதண்டம் தாங்கிய முக்கோல்பகவரை நோக்கித் தன் மகள் செய்தியைக் கூறினள். அவர் அவ்வம்மைக்கு நல்லறிவு கொளுத்த 'அம்மையீர் சந்தனம், முத்து, சங்கு ஆகிய இவை பிறர்க்குப் பயன்படாவகையில் தாம் தாம் பிறந்த இடத்திலேயே இருப்பின் யாது பயன்? விரும்பினவர்கள்பால் சென்ருல் அன்ருே அவை பெருமை அடையும்? அதுபோலவே உம் திருமகளை நீரே நும் வீட்டில் வளர்த்து வைப்பின் பயன் உண்டோ ! ஆதலின்,

அவளை விரும்பினவன் கொண்டுசென்றதில் தவறில்லை. அதுகுறித்து மகிழ்வீராக' என்று கூறினர்.

இக்கருத்தை மாணிக்கவாசகர் கற்றூர் ஏத்தும் கலித் தொகையில் இருந்து எடுத்துத் தம் நூலில் ஆண்டுகொண்டனர் என்பது,

'பலவுறும் நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செயும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே.

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செயும்
தேருங்கால் நும்மகள் நுமக்கும்ஆங் கனையளே.

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செயும்
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.'

என்னும் பாடல்களால் உணரலாம்.

கற்புப் பற்றிய சீரிய கருத்துக் திருக்கோவையாரில் நாகரிகமுறையில் கூறிஇருப்பது போற்றப்படுவது போன்று வேறு எந்த நூலிலும், காண்டற்கு இல்லை என்று கூடக் இயம்பிவிடலாம். நாம் கற்பு என்பது பெண்மக்கள் சமூகத்திற்குரிய பண்புஎன்று கருதி இருக்கிறோம். அது தவறான எண்ணமாகும். கற்பு என்னும் சொல் ஒழுக்கம் என்னும் பொருளில் ஒளிர்வதனல், அவ்வொழுக்கம் ஆண்மக்கள் இனத்திற்கும் பொருந்துவதாகும். இதனை நம் நூலாசிரியப் பெருந்தகையார், எவ்வளவு நாகரிகமாக மொழிகின்றூர் என்பதை உணரும்போது, இவரது நுண்மாண் நுழைபுலம் தெள்ளிதாகத் தெரியவருகிறது.

நற்றாய், தன் மகளைப்பற்றி முக்கோல் பகவரை முன் வினவியதைப்பார்த்தோம். அவர் அவ்வம்மை யாருக்கு ஏற்றவிடை கூறியதையும் உணர்ந்தோம். என்றாலும், நற்றாய் உள்ளம் அமைதி பெற்றிலது.

அந்நிலையில் இருவர் ஆணும் பெண்ணுமாகச் சேய்மை யிலிருந்து தன் திசைநோக்கி வருதலைக் கண்டாள். கண்டதும் தன் மகளும், மகளை அழைத்துச்சென்ற மருகனும்தாம் மீண்டுவருகின்றனர் என்று எண்ணி மனம் மகிழ்ந்தாள். ஆனால், அவர்கள் அண்மியதும் தன் மகள் அல்லள் என்று உணர்ந்தும், தன் ஆற்றாமை மிகுதியால், 'மணமக்களே! நீங்கள் வரும்வழியில் உம் எதிரே உம் போலும் காதலுடைய இருவர் ஆணும் பெண்ணுமாகப் போனதுண்டோ?' என்று வினவி னாள். அதற்கு விடை கூறும்முகத்தால் ஆண்மகனானவன் தன்னைத் தொடர்ந்துவரும் காதலியை நோக்கி, நான் ஆண்சிங்கம் போன்ற காளையைக் கண்டதுண்டு. அதனோடு வேறு ஒன்றையும் இந்த அம்மையார் கூறுகின்றாரே? நீ அதே சமயத்தில் வேறு யாரையே னும் கண்டதுண்டோ?' என்று வினவுவதிலிருந்து அவ்வாண் மகன் ஆணையே பார்த்தனன் என்பதும், அவனுக்கு அயலே வந்த பெண்மகளைத் தான் ஏறிட் டும் பார்த்ததில்லை என்பதும் விளங்குவதால், அவனது கற்பொழுக்கம் நமக்கு எவ்வளவு கழிபேர் இன்பம் பயக்கவல்லதாக இருக்கிறது பாருங்கள்!

> "பிறன்மனை நோக்காத பேர்ஆண்மை சான்றோர்க்கு
> அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு,"

என்னும் திருக்குறள் செப்புவதும் இதைத்தானே! இந்தக் கருத்தைத் திருக்கோவையார் எத்துணை யழகாக,

> "மீண்டார் எனஉவந் தேன்கண் டும்மைஇம் மேதகவே
> பூண்டார் இருவர்முன் போயின ரேபுலி யூர்எனைநின்
> றாண்டான் அருவரை ஆளியன் னானைக்கண் டேன்அயலே
> தூண்டா விளக்கனை யாய்என்னை யோஅன்னை
> சொல்லியதே'.

என்று எடுத்துக்காட்டுகிறது?

'நுண்ணறிவுடைய நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்து' என்று கூறிப் பெண்ணுலகத்திற்கு ஒரு பழியைப் பிற்பட்டவர் ஏற்படுத்தியுள்ளார். அவ்வாறு நாம் கருதுதற்கில்லை. அவர்களும் ஆண்களைப்போலவே பேர் அறிவு படைதவர். சொல்லாற்றலோடு பேசவல்லவர். அவர்கள் பேச்சுத்திறன் மிகமிக வியக்கத்தக்கதாக இருக்கும். இதனைத் திருக்கோவையாரைப் படிப்பின் உணரலாம். தலைமகன் தலைவியைத் தான்கூடி வாழ வாய்ப்புக் கிடைக்காவிடின், மடல்ஏறித் தற்கொலை புரிந்துகொள்வதாகத் தோழியிடம்மொழிவான். மடல் என்பது பனையோலையாலும் மட்டையாலும் செய்யப்படும் குதிரைமீது தலைவன் ஏறித் தலை மகள் பால்கொண்ட தணியா வேட்கையைத் தோற்று விப்பதாகும். இத்தகைய குதிரையைச் செய்யவேண்டுமானல் பனை ஓலையையும் மட்டையையும் மரத்திலிருந்து வெட்டி எடுத்தல்வேண்டும். பொதுவாகப் பறவைகள் பனை மரத்தில் கூடுகட்டி வாழும் இயல்பின.

இந்நிலையில் தோழி தலைவன் எண்ணியுள்ள மடல் ஏறும் எண்ணத்தை நீக்கவேண்டியவளாய், 'மடல் ஏறற்க' என்று மொழியினும், அவன் தலைமகள்பால் வைத்த காதல் மிகுதியால் அவ்வெண்ணத்தை நீக்க மாட்டான். இதனை எந்தமுறையில் எடுத்து இயம்பினுல், அவன் மடல்ஏறுதலைத் தடுக்க இயலும், என்பதைச் சிந்தித்துத் தன் பேச்சுத்திறனுல் அதனை விலக்க முன்எழுந்த தோழியின் பேச்சு வன்மையை என் என்பது.!

தோழி தலைவனைப் பார்த்து, 'ஐயா! நீ மடல் ஏறத் துணிந்தனை. அம்மடற்கு வேண்டிய ஓலையும் மட்டையும் மரத்தில் இருந்து எடுக்கப்பட வேண்டியவை. அப்படியே எடுப்பின, அம்மரத்தில் கூடு

கட்டி இன்புடன் வாழும் பறவைகட்கு இன்னல் செய் தவனுய் ஆவையே! இரக்க உணர்ச்சி உனக்குத் தோன்றவில்லையானுல், வேறு யாரிடத்தில் தோன் றப்போகிறது? என்னும் பொருளில்,

"நடனும் வணங்கும்தொல் லோன்எல்லை நான்முகன் மால் அறியா
கடனும் உருவத் தரன்தில்லை மல்லல்கண் ஆர்ந்தபெண்ணை
உடனும் பெடையொடொண் சேவலும் முட்டையும் கட்டழித்து
மடனும் புனைதரின் யார்கண் ணதோமன்ன இன்னருளே"

என்று கூறி மடல் விலக்கினுள்.

தலைமகளின் கண்களைப் புனைய வருகின்ருர் புலவர் பெருமானுர், அவற்றின் அகற்சி, நீளம், ஒளி, நிறம், ஆகியவற்றிற்கு உவமைகளாக அவர் கூறிய வை பின்வருவன. அவற்றின் அதற்சிக்கு, ஈசன் இடத்து வைத்த அன்பின் அகலம் உவமையாயிற்று. அவற்றின் கருமைக்குப் பாசத்தின் நிறம் பொருளா யிற்று. ஒளிக்குத் தில்லைஒளி உதாரணமாயிற்று. அவற்றின் வெண்மைக்குத் திருநீறு எடுத்துக்காட் டாயிற்று. நீட்சிக்கு, அன்பர் இறைவன் திருவடி களைப் புகழும் புகழ்உரைகள் உவமையாக நின்றன.

"ஈசற்கி யான்வைத்த அற்பின கன்றவன் வாங்கியஎன்
பாசத்திற் கார்என் றவன்தில்லை இன்ஒளி போன்றவன் தோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங்கண்களே"

என்பது மேலே கூறிய கருத்தை உணர்த்தும் பாடல்.

சில்லோர், தமிழில் குறைகாண முற்படுவது இக்கால நாகரிகமாக இன்னமும் இருந்து வருகிறது. அவர் கூறும் குறைகளில் தமிழ் இலக்கியங்களில் (humour) நகைச்சுவை இல்லை என்பது. இலக்கண

நூற்களில் வரும் சூத்திரங்களுக்கே நகைச்சுவை பொருள் காட்டி நகைக்கச் செய்யும் ஆற்றல் வாய்ந்த தமிழ்ப்பெருமக்கள், இலக்கியங்களில் அச்சுவையை அவர்கள் புகுத்தாமல் இருப்பரோ ?

"முன்னிலை முன்னர் ஈயு மேயும்
அந்நிலை மருங்கின் மெய்யூர்ந்து வருமே"

என்பது தொல்காப்பிய நூற்பா. இது முன்னிலைச் சொற்கள் 'சென்றீ,' 'சென்மே' என வருவதற்கு இலக்கணம் கூறும் முறையை அறிவிப்பதற்கு எழுந்ததாயினும், இதில் நகைச் சுவைப் பொருளையும் கண்டு ஏன் சுவைக்கக் கூடாது? 'உண்ணும் இலைக்கு எதிரே எறும்பு முதலியன ஊர்ந்துவருதலே அன்றி, ஈயும் மேயும்; அப்படி மேய்தலோடு நில்லாமல், உடலிலும் ஊர்ந்து செல்லவும் தொடங்கும்,' என்று வேடிக்கைப் பொருள்கூறிச் சுவைக்கச் செய்யவும் கூடும். நகைச்சுவை தமிழ் நூல்களில் இல்லை எனக் கூற இயலுமா ?

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகைஎன்
றப்பால் எட்டே மெய்ப்பா டென்ப"

என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் நகைச்சுவை அன்றோ முன்னர்க் கூறப்பட்டுள்ளது? இத் தருணம்,

"எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்"

என்னும் துறைமங்கலத்தார் தூயமொழிகொண்டு குறை கூறுவாரை அடக்கிவிடலாம். இனி நாம் திருக்கோவையாரில் காணப்படும் நகைச்சுவையை அறிந்து நனி வியப்படைவோமாக.

தலைவன் தோழியிடம் வந்து தலைவியின் கூட்டுறவைப் பெறுதற்கு அவளோடு பேசத் தொடங்கினான்.

அவன் கையில் பூந்தழைகொண்டு அவளை நோக்கி "அம்மையீர்! இவ்வழியே யான் எய்த அம்புபட்டு யானை ஒன்று போந்ததுண்டோ?," என்று வினவினன். பிறகு தான் கொணர்ந்த பூந்தழையை ஈந்து, "இதனை நும் தலைவி அணியுமாறு செய்க," என்று வேண்டினன். இப்படிக் கெஞ்சிக் கூத்தாடி நின்ற தலைவனைக்கண்ட தோழி, அவன் செயலை எள்ளி நகையாடுவாள்போல,

'மைத்தழை யாநின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற அன்பிரைப் போல விதிர்விதிர்த்துக்
கைத்தழை ஏந்திக் கடமா வினைய்க்கையில் வில்இன்றியே
பித்தழை யாநிற்ப ரால்என்ன பாவம் பெரியவரே'

என்று கூறிய கூற்று, எத்துணை நகைச்சுவை பயக்க வல்லதாகக் காணப்படுகின்றது பாருங்கள்! கையில் வில்இல்லை. ஆனால், தழை இருக்கிறது. இப்படிப் பட்டவர் யானையை எய்ததாகக் கூறுகிறார். இக்கூற்றுத் தம்மைப் பித்தர் என்பதை அறிவித்து நிற்கிறது. பார்த்தால் பெரியவராய்க் காணப்படுகிறார். ஐயோ பாவம்' என்று கூறப்பட்டவை நம்மை விடா நகைப்பினை நகைக்கச் செய்கின்றன அல்லவா?

# 5. கொடை மடம்பட்ட கோமான்

தண்டமிழ்மொழியில் கொடைமடம், படைமடம் என இருபெரும் தொடர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் படை மடமாவது எதிரில் நிற்க இயலாமல், புறமுதுகு காட்டிப் போர்க்களத்தினின்று இரிந்தோடும் வீரன் மீதோ, அன்றி ஆயுதமின்றி வெறுங் கையினனாய் நிற்கும் வீரன் மீதோ, வீரப்பண்பு இல்லாதார் மீதோ, புண்பட்டார் மீதோ, மூத்தார் மீதோ, இளையார் மீதோ, போர் செய்தற்குச் செல்லுதலாகும். இப்படிச் சென்று படைமடம்பட்ட பார்த்திபர்களோ, வீரப் பெருமக்களோ நம் செந்தமிழ் நாட்டில் இருந்திலர். ஆனால், கொடைமடம் பட்ட கொற்றவர் நம் நற்றமிழ் நாட்டில் இருந்துள்ளார். கொடை மடமாவது தமக்கு அமைந்த பிறவிக் குணமாகிய கொடைக் குணத்தால் அறியாமைப் படுதலாகும். தம்மை அணுகிக் கேட்டற்கு இயலாதவையான அஃறிணைப் பொருள்களிடத்தும் அன்பு காட்டி, இன்னது கொடுத்தால் இதற்குத் தகும் என்று கூடச் சிந்தியாமல், தம் உள்ளத்தின் போக்குக்கு இயைய ஈவதாகும். ஞானாமிர்தம் என்னும் நூல், கொடைமடம் என்னும் தொடருக்குப் பொருள் காண்கையில், அகாரணத்தால் கொடை கொடுத்தல் என்று கூறுகிறது. திவாகரம் என்னும் நூல் வரையாது கொடுத்தலாகும் என்று விளக்குகிறது. எவ்வாறு பொருள் கொள்ளினும் கொடைமடம் என்பது, கொடுக்குங்கால் மடமைப்படுதலாம். அதாவது அறியாமையுறுதல் என்பதே நேரிய பொருளாகக் கொள்க. இங்ஙனம் அறியாமைப் பட்டவர்கள் பலராக இருப்பினும், இலக்கியங்களில் எடுத்துக் காட்டாக அமைந்தவர் இருவர்.

அவர்களே பாரியும், பேகனும் ஆவர். இவ்வுண்மை யை ஐயனாரிதனார் இயற்றிய புறப் பொருள் வெண்பா மாலையில் உள்ள,

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
இரவாமல் ஈந்த இறைவர்போல் நீயும்
கரவாமல் ஈகை கடன்.

என்னும் வெண்பாவால் அறியலாம். இவர்களுள் இங்குப் பேகனது வரலாற்றை மட்டும் வரைந்து காட்டுவோமாக.

வையாவிக் கோப் பெரும்பேகன் சேரர் குடியின் தொடர்புடையவன். இவன் குடி முதல்வன் வேளா விக் கோமான்; சேரன் செங்குட்டுவனது மாற்றாந் தாயின் தந்தையாவான். அதாவது சேரன் செங்குட்டு வனுக்குப் பாட்டன் முறையினன். இவன் பொதினி மலைக்குரிய ஆவியர் குலத்தில் தோன்றியவன். பொதினி மலை என்பது இப்பொழுது சீரும் சிறப்பும் பேரும் புகழும் பெற்று விளங்கும் பழனி மலையாகும். ஆவியர்குடி தோன்றல்களால் ஆட்சி புரியப்பட்டு வந்தமையால், இப் பழனித்திருப்பதி ஆவினன்குடி என்று வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆவியர் குடியில் தோன்றியவனே வையாவிக் கோப் பெரும் பேகன் ஆவான். ஆகவே, இவனும் மலைநாட்டு மன்ன னவன். மலைநாட்டு மன்னனேயானாலும் இவன் வாழ்ந்த ஊர் நல்லூர் என்று நவிலப்பெறும்.

இவன் யாதோர் அடைமொழியு மின்றி வெறும் பேகன் என்றும் கூறப்படும் பெருமை பெற்றவன்.

பேகன், கொடை, கல்வி, அறிவு, ஆண்மை ஆகிய வற்றில் தலைசிறந்தவன். இவனது கொடைத்திற னும் படைத்திறனும் ஆள்வினையுடைமையும் கண்டே கபிலர், வன்பரணர், அரிசில் கிழார், பரணர், பெருங்

குன்றூர்க்கிழார் முதலானவர்கள் பாடியுள்ளனர். இத்தகையோருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்தவள் கண்ணகி. இவள் வருவிருந்து உவப்ப ஊட்டும் நேசம் மிக்குஉடையவள்; கொழுநன் நினைப்பு அறிந்து ஒழுகும் திண்கற்பும் வாய்ந்தவள். இங்குக்குறிப்பிட்ட கண்ணகி என்பாள், கோவலனுக்கு இல்லக்கிழத்தியாக வாய்ந்த ஏந்திழையல்லள். அவள் வேறு; இவள் வேறு. இக்கண்ணகி பெண்மைக்குரிய இயல்புடையளாய் இல்லறத்தை இனிது நடத்தி வரலானாள்.

பேகன் வாழ் இடம் மலைப் பாங்கர். அம்மலைப் பக்கல் கண்கொள்ளாக் கவின் பெருங் காட்சி நிறைந்தது. இயற்கைக் குடிலாக இலங்கவல்லது. இவ்விடத்து இயற்கை எழிலை அடிக்கடி பேகன் கண்டு இன்புறுவதுண்டு. ஒரு நாள் பேகன் தன் நாட்டு வளங்காணப் பணியாட்களுடன் வெளியே சென்றான். ஒவ்வோர் இடமாகக் கண்டு களித்துக் கொண்டேவந்தான். வான்முகில்கள் வரைகள் மீது தவழ்ந்து ஓடும் பொலிவைக் கண்டு பூரித்தான். அக்கொண்டல்கள் மலைகட்குக்கவிகை தாங்கி நிற்பனபோலும் எனக்கற்பனை செய்து களிப்புக் கொண்டான். கானமயில்கள் ஈட்டம் ஈட்டமாகவும், கூட்டம் கூட்டமாகவும் குலவி விளையாடுவதைக் கண்டான். அவற்றுள் ஒன்று தனித்துத்தன் தோகையினை விரித்துக் களிப்புடன் ஆடுவதையும் கண்ணுற்றான், அம் மஞ்சை மேகங் கண்டு மோகம் கொண்டு தோகை விரித்துக் ஆடுகின்றது என்பதை ஓராதவனாய், அது குளிர்க்கு வருந்தித் தன் தோகையை விரித்து ஆடுகின்றதோ என்று எண்ணி, அதன் நளிரினைத் தீர்க்க யாதுவழி என்று சிந்தனை கொண்டான். அவன் சிந்தனைக்கு யாதொன்றும் புலனாகவில்லை. தான் அணிந்திருந்த விலைமதித்தற்கரிய பொன் ஆடையை

அதற்குப் போர்வையாக ஈவதே பொருத்த மானது என்று உறுதி கொண்டான். அவ்வாறே தான் மேலே அணிந்திருந்த பீதாம் பரத்தினை அத்தோகைக்கு இத்தோன்றல் ஈந்து உள்ளம் மகிழ்ந்தான். இதனைப் பாராட்டிப் புலவர்கள் பாடிய பாட்டுக்கள் மிக மிக அருமைப் பாடுடையன ;

உடாஅ போராஅ ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு, ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்

என்பதும்,

மடத்தகை மாமயில் பனிக்கும் என்றுஅருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்இசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக

என்பதும் பரணர் பாட்டு,

வானம் வாய்ந்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்

என்பது சிறுபாணாற்றுப்படை ஆசிரியர் பாட்டு.

இங்ஙனம் மயிலுக்குப் படாம் அளித்துத் தன் மாளிகைக்குச் சென்று, அன்று தான் செய்த அரும் பெருஞ்செயல் குறித்து அகங்களி கொண்டனன். ஈந்து உவக்கும் இன்பம் அவாவுபவன் ஆதலின், அவன் செயல் குறித்து அவனே இத்துணை மகிழ்ந் தனன்.

பேகன் பண்டம் மாற்றுப் போலத் தன் பொருள்களை இரலர்களுக்கு ஈந்து அதன் மூலம் புண்ணியத்தைப் பெறவேண்டும் என்று எண்ணு பவன் அல்லன். எத்துணையாயினும் ஈதல் நன்று என எண்ணும் மனப்பான்மையன். இவன் தான்

செய்யும் ஈகை மறுமைக்குப் பயன் தரவல்லது என்று நினைத்துச் செய்யும் ஈகையன் அலலன், யாசகர்களின் வறுமை நோக்கி அவ்வறுமை தீரக் கொடுத்தல் முறையென்பதை உளங்கொண்டவன். "பாத்திரம் அறிந்து பிச்சையிடு" என்னும் பண்பு வாய்ந்தவன். இதனை அழகுபடப் பரணர்,

கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண் மையே.

என்று நமக்கு அறிவுறுத்துவார் ஆயினர். ஆகவே, இவன் கொடைமடம் படுபவனே அன்றிப் படை மடம் படான் என்று இவன் கொடையினைப் புகழ்ந் தார்.

ஒரு முறை பரணர் பேகனைக் கண்டு பொற்றா மரையணியினையும், பொன்னரி மாலையினையும் பெற்றுத் தாம் விறலியுடன் ஒருசுரத்திடையே இளைப்பாறிக் கொண்டிருந்தனர். அதுபோது ஓர் ஏழை இரவலன் இவரைக் கண்ணுற்று,"ஐயன் மீர், நீவிர் யாவீர்?" என்று கேட்டனன். இங்ஙனம் வினவிய அவனை நோக்கி, "ஐயா யானும் உன் போல் ஓர் இரவலன். யான் பேகன் என்பானைக் காணுதற்கு முன், நின்னைப் போலவே வறுமைக் கோர் உறைவிடமாக இருந்தனன். அவனைக் கண்டதும் என் மிடிதீர்ந்தது. அதன் பின் இங் ஙனம் பூண்களைப் பூண்டு பொலிவு பெற்றனன். அப்பேகன் கரியும் பரியும் பெற்றுக் கண்ணியமாய் வாழ்பவன், தான் கொடுக்கப் போகும் போர்வை யை உடுத்திக் கொள்ளாது என்பதை அறிந்தும் தன் பொன் ஆடையும் மயிலுக்குப் போர்த்த புண் ணியன்" எனக்கூறி ஒருபாணனை ஆற்றுப் படுத்திப் பேகனதுகொடைக் குணத்தைச் சிறப்பித்தனர்.

பேகன் நல்லோனே; ஈகையில் ஓகை கொண் டோனே; புலவர் பாடும் பீடு உடையோனே; அறிவில் சிறந்தோனே; கல்வியில் கண்ணியமுடை யோனே; ஆண்மையில் மேன்மை மேவினேனே என்றாலும், இவன் பால் தீயசெயல் ஒன்று இருந் தது. அதுவே, இவன் கற்புக்கரசியான கண்ணகி யைத் தணந்து வேறொரு மாதுடன் இன்புடன் வாழ்ந்து வந்ததாகும். அந்தோ, கண்ணகி என்னும் பெயர் பெற்ற காரிகைமார்கட்கு அமைகின்ற கணவன்மார்கள் எல்லாம் தம் ஆருயிர் அனைய இல்லக் கிழத்தியரை விடுத்துப் பிறமாத ரொடு வாழும் பெற்றியினர் போலும்! கண்ணகி யைத் தணந்து மாதவி என்பாளுடன் வாழ்ந்தனன் அல்லனோ கோவலன்! அவனைப் போலவே வை யாவிக் கோப் பெரும் பேகனும், கண்ணகியைத் தணந்து வேறொருத்தியிடம் வாழலானான்.

இங்ஙனம் தன்னை மறந்து வேறொருத்தியுடன் தன் கணவன் வாழ்க்கை நடத்தினன் என்றாலும், அது குறித்துக் கண்ணகி அவனைத் தூற்றுதல் இன்றி, "எந்நாளேனும் இங்கு வந்து சேருவன்" என்று எண்ணி, ஆறாத் துயருடன் வாழ்ந்து வர லாயினாள். 'குலமகட்குத் தெய்வம் தன்கொழு நனே' என்பது சட்டமேயானாலும், "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்" என் பது மறைமொழி என்றாலும், தன் கணவன் தகாத ஒழுக்கத்தில் ஈடுபட்டுள்ளமையின், அவனைத் தக்க வழியில் திருப்புவான் வேண்டி, இறைவனை வந்தித்து வாழ்த்தி வணங்கி வருவாளானாள்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் அல்லரோ? இவள்பராவி வழிபட்ட கடவுள் இவட்கு நற்காலம் வருமாறு திருவுளங் கொண்டு புலவர் பெரு மக்களைத் தூண்டினர். அத்தூண்டுதல் காரண

மாகப் புலவர்கள் பேகனைக் கண்டு அறிவு புகட்டத் தொடங்கினர்.

ஒரு முறை கபிலர் பேகனைக் காண இவன் வாழ்ந்த மலைப்பாங்கர் சென்றனர். அவர் சென்ற தற்குக் காரணம், அவர் சுற்றம் பசியால் வாட்ட முற்றதனுல் அதனைத் தீர்த்தற்கு ஆகும். பேகனைக் காணின், பசிநீங்கும் என்பது அவர் கருத்து. சென்றவர் முரசுபோல ஓசை செய்து கொண்டு அருவி சொரிதலையும், அவண் ஓங்கிய மலையின் உயர்ச்சியையும் கண்டு, பேகன் மனையிடத்தின் வாயிலண்டைப் போந்து மலையினை வாழ்த்தி நின்ருர், பேகன் ஆண்டு இலன். அவன் கண்ணகி யைப் பிரிந்து வேற்று மங்கையுடன் வாழ்ந்து வந் தனன் என்பது முன்பே குறிப்பிடப்பட்டதன்ரே?

கபிலர் பேகன் பெயரைச் சுட்டிப் பாடியதைக் கேட்ட கண்ணகி, தன்கணவன் பேரைக் காதால் கேட்ட உணர்ச்சி வயத்தளாய் வாயிலின், வெளியே வந்தனள். அழுகையும் மிக்கது. அவ்வழுகையும் இனிமை தரத்தக்கதாகவே குழல்போல இருந்தது. இந்நிகழ்ச்சியைக் கண்ட கபிலர், இரக்கம் மிகக் கொண்டவராய், அங்கு இருக்கவும் மனம் அற்ற வராய்ப் பேகன் ஆண்டு இல்லாமையை உணர்ந்து அவன் உறையும் உறைவிடம் நேரேசென்ருர். பேக னைக்கண்டார். கண்டு "மழைபெய்ய வேண்டி முகிற் குழாங்கள் மலைமீது தவழ்வதாக என்று தெய்வம் பராவி, அங்ஙனமே தாம் வழிபட்டதன் பலனுக மழை வளந் தரவும், மீண்டும் அம்மேகம் பெய்தது சாலும், மேலேசெல்வதாக, என்று கடவுளைப் போற் றும் இயல் புடைய குறமளிர் குலவி மழையின் பயனுல் தினைப்புனம் செழிக்க அத்தினையரிசி யுண்டு வாழ்கின்ற மலைநாட்டு மன்ன!" எனவும், "சினத்திறல் செய்யும், போரையும், கைவன்மை யால்கொடுக்கும்கொடையினையும் உடையோனே!"

என்றும், 'காற்றினும் கடுகிப் பாயும் கலினமா உடைய கண்ணியோனே, எனவும் விளித்து "யான் நாடிநின் அகத்தை அடைந்து நின்மலையைப் பாடி நின்னையும் வாழ்த்தி நின்றேன். அப்பொழுது ஓர் எழிலுடையணங்கு நின்பேரைக் கேட்டதும் அகத்தினின்றும் புறத்தே போந்து, நீர் வார்கண்ணளாய், குழல்போல் இசைக்கும் ஒலியுடன் அழத் தொடங்கினுள். அவளது இரக்கநிலை இன்னது என அறிகிலேன். அவள் யாராகிலும் என்? அவள் உன்பேரைக் கேட்ட அளவில் வாட்டமுற்று அழும் அழுகையளாகக் காணப்படுதலின், உனக்கு உறவினளாயினும் சரியே, அவளுக்கு நீ தண்ணளி செய்யவேண்டுவது உன் தலையாய கடனாகும்" என்று கூறினுர். இங்ஙனம் கபிலர் பாடி அறிவுறுத்திய பாடலால், நின்மலையில் குறவர் மாக்கள் கடவுளைப் பேணி மழை வேண்டியபோது அம்மழையினைப் பெற்றுத் தாம் வேண்டும் உணவினை நுகருமாறு போல, இவளும் நின் அருள் பெற்று இன்பம் நுகர்பவளாக வேண்டும், என்னும் பொருள்படப் புலவர் பாடியுள்ளார் என்னும் கருத்துத் தொனிக்கின்றதன்றே?

பரணர், பேகன் இல்லம் சென்றனர்! சென்று செவ்வழிப் பண்ணை யாழில் இசைத்துப் பேகனது மழைதவழ் மலையினைப் பாடி நின்றனர். பேகன் மனைவி கண்ணகி, எப்பொழுதும் பேகன் நினைவே நினைவாகக் கொண்டு இனைந்து வாழ்ந்து வந்தனள். ஆதலின், பல நாள் உண்ணுது பட்டினியால் கிடப்பவன் காதில் "கஞ்சி வரதப்பா என்றுல் எங்கே வரதப்பா?' என்று விரைவது போல, பேகன் என்னும் பெயரை எவர் கூறினும், பேகனைக் காணுது போயினும், அத்திரு நாமத்தைச் செப்பியவனையேனும் கண்டு சிறு மகிழ்வு கொள்ளும் நிலையில் இருந்தவள் கண்ணகியாதலின், பரணர் பேகனையும் பேகன் வாழ் மலையினையும் பாடி வந்தபோது

வெளியில் வந்தனள். வருகின்றபோதே அவளது நீல நறு நெய்தல் மலர்போலும் மையுண்ட கண்களிலிருந்து நீர்த்துளிகள் நித்திலங்கள் உதிர்வன போல மார்பகம் நனைய உகுத்த வண்ணம் இருந்தன. பரணர் இத்துயரமுற்ற கோலத்தைக் கண்டனர். கபிலர் போல யாதொரு மொழியையும் கண்ணகியை வினவாது. அடி பெயர்த்து அப்பாற் செல்ல ஒருப்பட்டிலர். "இங்ஙனம் இம்மாது அழக் காரணம் என்னவாக இருக்குமோ? அதனை உசாவவேண்டும்" என உறுதி கொண்டனர். மெல்ல அம்மாதின் சந்திரவதனத்தை நோக்கினர். "அம்மணி! நீ யாவள்? எம் உழுவல் அன்புடைக் கெழுதகை நண்பன் பேகன் என்பானுக்கும் நினக்கும் உறவுமுறை ஏதேனும் உளதோ? அவன் பெயரைக் கூறிய மாத்திரையில் இங்ஙனம் உளங் குழைந்து உயங்குகின்றனையே. உண்மை கூறு." என்று வினயமாக வினவினர். பெரியர் பேசுகையில், அவர் விடுத்த வினுவிற்கு விடை இறுக்காது இருத்தல், முறையன்று என்று ஓர்ந்தவளாய், காந்தள் மொட்டுப் போலும் விரலாலே தன் கண்ணீரினைத் துடைத்துக் கொண்டு, "அன்பும் அறிவும் சான்ற ஆன்றவரே! யான் எங்ஙனம் எம் கொழுநர்க்கு உறவினள் ஆவேன்? யான் உறவினள் ஆயின், அவர் என்னைவிடுத்து வேறொருத்தியின்பால் வாழ எண்ணியிருப்பாரோ? இரார்" என்று நாகரிக முறையில் உண்மைச் செய்திகளைச் சொல்லிவிட்டனள். இந்த மொழிகளைக் கேட்டதும் பரணர் வருத்தமுற்றனர். பேகன் செயல் அடாதது என்பதை உணர்ந்தனர். அப்பேகன் வாழ்ந்த இடத்தை நேரே அடையப் புறப்பட்டனர். பேகனைக் கண்டனர். கண்டவற்றை விண்டனர். "பேக! நீ இப்பொழுதே இவணின்று அவண் போந்து அவட்கு அருள் பண்ணுக. இங்ஙனம் பண்ணுயாயின், அதுமிகக் கொடிது" என்று இடித்து மொழிந்தனர்.

அந்த அளவில் கூறியும் அமைந்திலர் புலவர். தமக்கு இப்பொழுது பேகன்பால் பரிசில் பெற வேண்டும் என்பது எண்ணம் இல்லை. எப்படியேனும் இவனைக் கண்ணகிபால் சேர்க்கவேண்டும் என்பதே எண்ணமாகும். அதனை வெளிப்படுத்தியும் கூறிவிட்டனர். பேகனுக்கு எம்முறையில் கூறினால் அவன் திருத்தமுறுவான் என்று சிந்தித்தனர். அதன் பொருட்டு இவன்செய்த கொடையைக் கூறி விளித்தனர். "மெல்லிய தோகையினையுடைய கரிய மயில், குளிரால் நடுங்கு மென அருள் கூர்ந்து படாம் கொடுத்த பேகனே!" என்று விளித்தனர். இங்ஙனம் சுட்டிய தன் நோக்கம், ஓர் உயர் திணைப் பொருள்—அதிலும் நின் வாழ்கைக்கு அரும் பெருந்துணையாக அமைந்த ஒருத்தி—நின்னைக் காணாது, கூடி மகிழாது, அலமந்து ஆழ்துயரில் உள்ளாள் என்பதைச் சிறிதும் உணராது, இருத்தல் முறையாமோ? என்பதை உணருமாறு செய்தற்கே இங்ஙனம் விளித்தனர். "நீ நின் இல்லக்கிழத்திக்கு இரக்கங் காட்டிலை எனில், நின் இசைக்கு வசையே வரும். ஆகவே, நின் இசையினை இழக்காமல் இருக்க விழைந்தால் அவட்கு அருள் பண்ணுக!" என்பதற்காகவே இவனுக்கு இவன் பெற்ற இசையினை நினைவுபடுத்த "நல் இசைக் கடாஅ யானைக் கலிமான் பேக!" எனவும் விளித்தனர். விளித்து யாது கூறினர்? "பேக! யான் பசித்து வந்திலன். எனக்கும் என்னை எதிர் நோக்கி வாழும் சுற்றமும் இல்லை. ஆகவே, நீ எற்கு இதுபோது பரிசில் தருக என நின்னை வினவவும் மாட்டேன். என்றாலும், ஒன்றை மட்டும் நின்னை இதுபோது கேட்க அவாவி வந்தனன். அதுதான், நீ இன்றைப் பொழுதே நின் அருமனை புகுந்து, ஆயிழை, கண்ணகியின் அருந்துயர் களைதலேயாகும்" என்று வேண்டி இரந்து நின்றார்.

பரணரைப் போலவே அரிசில் கிழார் என்னும் புலவர் பெருந்தகையாரும் பேகனும் கண்ணகியும் கூடி வாழப் பெரிதும் முயன்றனர். அரிசில் கிழார் கருத்தும் பரணர் கருத்தும் இந்த முறையில் ஒன்று கவே காணப்பட்டன. அரிசில் கிழாரும் பேகன் மனை யாள் கண்ணகியின் நிலையை அறிந்து கொண்டு நேரே பேகனிடம் சென்றனர். பேகனை ஏனைய புல வர்கள் புகழ்ந்து விளித்தது போன்று விளிக்காது, இவனது போர் வெற்றியை மட்டும் புகழ்ந்து விளித் தனர். "அடுபோர்ப் பேக" என்றனர். இங்ஙனம் இவர் விளித்ததன் நோக்கம், உன் வெற்றிகள் யாவும் இல்லக் கிழத்தியோடு இல்லறம் நடத்தாத போது பயனற்றனவேயாகும். "புகழ் புரிந்து இல்லிலோர்க்கு இல்லை, இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடை" என்பது பொது மறை. "நின் இல்லக் கிழத்தி உடன் இல்லாதபோது உன் வெற்றிச் சிறப்பு வெற்றெனப்படுவதே" என்பதைச் சுட்டிக் காட்டவே இங்ஙனம் விளித்தனர். பிறகு இப் பேகனை நோக்கி, "யானும் நின்னால் தரப்படும் பெறுதற்கரிய அணிகலன்களும் செல்வமும் ஆகிய அவற்றைப் பெறுதலை விரும்பேன். யான் சிறிய யாழில் செவ்வழியாகிய பண்ணை அமைத்து நின் வலிய நிலமாகிய நல்ல மலை நாட்டைப் பாட, அது கேட்டு என்னை விரும்பி எற்குப் பரிசில் தர விரும் புவையாயின், அப் பரிசிலை யான் வேண்டேன். நீ அருள் புரியாமையால் கண்டார் எல்லாம் இரங்கும் வண்ணம் மெலிந்து அரிய துயரால் நின் இல்லக் கிழத்தி இல்லின்கண் மழையைக் காணது வாடிய பயிரினைப் போல்வருந்தி நிற்கின்றாள். அவளிடம் சென்று அவளது அடர்ந்த குழலில் அழகிய மலரைச் சூட்டி மகிழும் பொருட்டு நின் தேரில் பரியினைப் பூட்டி விரைந்து செல்க. இதுவே யான் வேண்டும் பரிசில்" என்று இன்னுரை பகர்ந்தனர். "அருங்கல வெறுக்கை அவை பெறல் வேண்டா. பரியினை

நெடுந்தேர் பூண்க.'' என்பது இப் புலவர் வாய் மொழிக் கருத்துக்கள்.

பெருங்குன்றூர்க்கிழாரும் பரணர் கருத்தையும் அடியொற்றிப் பாடினர். பெரும் புலவர்களின் கருத்துக்கள் யாவும் ஒரு படித்தாகவே காணப்படும்.

பெருங்குன்றூர்க் கிழாரும் பேகனைக் கண்டு ''ஆவியர் கோவே! யான் நின் மாட்டு வேண்டுவது பொருள் பரிசிலை அன்று. நீ நேரே இவண் நின்று நீங்கிக் கண்ணகி வாழும் அவண் சென்று அவட்கு மலர் சூட்டி மகிழ்க. அதுவே யான் வேண்டும் பரிசு. அவள் கூந்தல் தோகை போல் அடர்ந்து மென்மையாகக் காணப்படுவது. அவ்வழகிய குழல் பூசுவன பூசிப் பூண்பன பூண்டு பன்னாள் ஆயது. அதனால் அது பொலிவிழந்து காணப்படுகிறது. அது மீண்டும் பொலிவு பெற நீ அருள் செய்க'' என்று வேண்டி நின்றார்.

இங்ஙனம் புலவர்கள் யாவரும் ஒரு மனப் பட்டுப் பேகனை அணுகித் தாம் பரிசில் பெறுதலையும் அறவே மறந்து இவன் எவ்வாறேனும் கண்ணகி என்னும் கற்பரசியாளுடன் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்தப் பெரிதும் பாடு பட்டனர். இவர்கள் பாடு பாழாய் இருக்குமோ? இராது. பேகன் கண்ணகியிடம் சென்றிருப்பான். அவளுடன் இல்லறத்தை ஏற்று இனிது வாழ்ந்திருப்பான்.

'' இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்''

என்பது பொய்க்குமோ? என்றும் பொய்க்காது.

# 6. சேக்கிழாரும் கம்பரும்

திருவளர்ந்தோங்கும் இப்பரத கண்டத்துத் தெய்வப் புலவர் என்னும் பட்டம் பெற்ற புலவர் சிகாமணிகள் இருவரே. ஒருவர் உலகம் புகழும் உத்த மராம் திருவள்ளுவ நாயனார். மற்றொருவர் சைவ மணங்கமழும் சேக்கிழார் பெருமானார். இவ்விரு பெரும்புலவர்கட்கு அமைந்துள்ளபேறு, வேறுஎப் புலவர்களும்எய்திற்றிலர் என உறுதியாக உரைத்து விடலாம். இங்ஙனம் கூறுதற்குப் பலகாரணங்கள் உள. ஏனைய புலவர்கள் தனித்துவிளங்கும் நூல்வடி வில் புகழத்தக்க பெருமைபெற்றிலர். அப்புலவர் களின் சிறப்பையும் அவர்கள் யாத்த நூலின் மாண்பையும் புகழும் முகத்தால் சிற்சில தனிப் பாடல்கள் மட்டும் உள்ளன. அவை அவ்வப்புலவர் களின் நூற்களுக்குச் சிறப்புப்பாயிரச் செய்யுட் களாகத் திகழ்கின்றன, அவை தனியன்கள் என்றும் சாற்றப்பெறும். ஆனால், திருவள்ளுவரையும் அன்னார் இயற்றிய நூலின் பெருமையையும் கூறும் தனிநூல் திருவள்ளுவமாலை என்றே திகழ்ந்து வருகிறது. இதுபோலவே, நம் சேக்கிழார்பெருமானு ரையும் இவர் திருவாய்மலர்ந்த பெரியபுராணத்தை யும் சிறப்பித்துப் பேசும் தனிநூல் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்பது. இந்தத் தனிப்பெருமை யுடன் மட்டும் இப்புலவர் பெருமானார் புகழப்படு தலன்றிக் கொற்றவங்குடி உமாபதி சிவச்சாரிய சுவாமிகள் தம் திருவாக்காலும் சேக்கிழார்மீது புராணம் பாடியிருத்தலையும் நாம் பாராட்டாமல் இருக்க இயலாது. அப்பெரியார் தண்டமிழ் மேலாந்தர நூல்களாகச் சிலவற்றை விதந்து கூறுகை

யில் நம் தொண்டர் புராணமாம் பெரிய புராணத்தையும் இணைத்து,

வள்ளுவர் நூல் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்.

எனப் பாடியும் உள்ளார். சேக்கிழார் மாண்பினை உணர அவாவுவார் சேக்கிழார் புராணத்துள்ளும், சேக்கிழார் பிள்ளைத்தமிழிலும் பரக்கக் காணலாம்.

வடநூற்கடலும் தென்னூற்கடலும் ஒருங்கே நிலை கண்டுணர்ந்து அறிவுமயமாய்த் திகழ்ந்த சிவஞான முனிவர்தம் வாயார,

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கினல் சொல்ல வல்லபிரான் எங்கள்
பாக்கி யப்பய னுய்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சிந்தை இருத்துவாம்.

எனப்பாடிப் பரவியுள்ளார். மற்றும் சேக்கிழார் பெருமை பலவாகும். இவரது நுண்ணறிவுத்திறன் காண விரும்புவோர் இவர் பாடியுள்ள பெரிய புராணத்தில் கண்டுகளிக்கலாம். இவர் வாழ்ந்த **காலம் அனபாயச்சோழனுகிய இரண்டாம் குலோத்துங்கன் காலம். அதாவது கி. பி. 1123 முதல் 1148 வரை அவன் அரசு புரிந்தகாலமாகும்.** மேலும் தெள்ளத் **தெளியக் கூறப்புகின் கி. பி. 12-ஆம் நூற்றுண்டு எனலாம்,** இனிக் கம்பரது பெருமையைச் சிறிது காண்போமாக.

கம்பர் ஒரு சிறந்த கவி. "கல்வியில் சிறந்தவர் கம்பர்". "கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்". "கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்பனபோன்றவை கம்பர் பெருமையை விளக்கவந்தவைகளே.

இத்துணைப் புகழ்உரைகளும் உண்மை உரைகளே அன்றிப் புனைந்துரைகள் அல்ல. உண்மையாகவே கம்பரது கவிகள் அத்துணையளவு சுவை பயக்கவல்லவைகளாக உள்ளன. கம்பரையே சில அறிஞர்கள், "ஐய! புலவர் மணியே! உமது கவிகள் மிக்க நயமுடையனவாகவும் சுவையுடையன வாகவும் உள்ளனவே; இன்னதற்குக் காரணம் உளதோ?" என வினவினார்களாம். அதுபோது கம்பர் "என் கவிகள் சுவையுடையனவாய் இருத்தற்கு யான் காரணன் அல்லேன். அது அதில் ஒவ்வோர் அகப்பை அள்ளிக்கொண்டேன். அதாவது எனக்கு முன்பு இருந்த புலவர் பெருமக்களின் சொற்களையும், தொடர்களையும், கருத்துக்களையும் அப்படியே எனது நூலில் அமைத்துப் பாடியுள்ளேன். இவையே என்கவிகள் சிறத்தற்குக்காரணமாகும்" என்றனராம். இஃது உண்மை என்று உறுதிப்படுத்தற்குத்திருமணம், செல்வக்கேசவராய முதலியார் எம். ஏ. (பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்) எழுதியுள்ள "கம்பர்" என்னும் நூலே சான்றாகும். அதில் பல தலைப்புக்களைக் கொடுத்து எழுதிய அறிஞர், கம்பர் பயின்ற நூற்களைக் குறிப்பிடும்போது சைவத் திருமுறைகளையும் குறிப்பிட்டுள்ளார். எனவே, கம்பர் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தினையும் நன்கு பயின்றவர் என்பது புலனாகிறது. பயின்றதோடு நில்லாமல் பற்பல அரியசொற்களையும், தொடர்களையும், கருத்துக்களையும் அப்பெரு நூலினின்றும் எடுத்து மிகமிகப் பொருத்தமான இடங்களில் அமைத்துத் பாடியுள்ளார் என்பதை அறிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கம்பர், சேக்கிழார் பெருமானாரது காலத்திற்குப் பிந்தியவர். கம்பர், இரண்டாம் இராஜராஜ சோழர் காலத்தவர். அதாவது, கி.பி. 1171 முதல் 1178-ஆம்**

ஆண்டுவரை வாழ்ந்த அரசர்காலத்தவர். முன்பு சேக்கிழார் காலம் குறிப்பிட்டிருப்பதையும், ஈண்டுக் கம்பர் விளங்கிய காலத்தைக் குறிப்பிட்டிருப்பதை யும் உற்று நோக்கின் கம்பர் பிற்பட்டவர் என்பது நன்குவிளங்கும். மேலும், "காவலன், மண்ணில் கடலில் மலையில் பெரிது என் என எண்ணி எழுதிக் கொடுத்த ஏற்றக்கை" எனக் கம்பர் சேக்கிழாரின் அறிவைப் புகழ்ந்து பாடினார் எனக் கூறப்படும் திருக் கைவழக்க நூல் சான்றினாலும் கம்பர் சேக்கிழாருக் குப் பிற்பட்டவராதல் தெளிவாகும். இது நிற்க.

சேக்கிழார் பெருமானார் இறைவன் தமக்கு 'உலகெலாம்' என்று எடுத்துக்கொடுத்த தொட ரையே மகுடமாக அமைத்து

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

எனப் பாடியருளினர். இங்ஙனமே கம்பரும் தமது நூலின் தொடக்கத்தில்,

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே

என்று பாடி அமைத்துக் கொண்டனர். இவ்வமைப் பில் ஒற்றுமைகள் பல உள, அவற்றுள் தலை சிறந்தது சேக்கிழார் எந்தக் கலிவிருத்தயாப்பில் செய்யுளைப் பாடினரோ அதிலேயே கம்பரும் பாடி அமைத்திருப்பதேயாகும்.

சேக்கிழார்பெருமானார் தம் நூலிற்குத் திருத் தொண்டர் புராணம் எனப்பெயர் சூட்டியதோடு நில்லாமல், மாக்கதை என்னும் திருநாமத்தையும்

பேசியுள்ளார். அங்ஙனமே கம்பரும் தம் நூலுக்கு இராமாவதாரம் என்றபெயர் சூட்டியதோடு அமையாது 'தோமறு மாக்கதை' என்றும் குறிப்பிட்டிருப்பதை உணர்வோமாக. இவ்விருபுலவர்களும் தாம் தாம்பாடும் நூற்களை ஆசையுடன் பாடத் தொடங்குவதாகக் கூறுகின்றனர். முன்னர்க் கூறியவர் சேக்கிழார். "அளவில் ஆசை துறப்ப அறைகுவேன்" என்பது அவர் வாக்கு. பின்னவரான கம்பர் "ஆசைபற்றி அறையலுற்றேன்" எனப் பாடி மகிழ்கின்றார்.

தொண்டர் சீர்பரவுவார் தம் ஆசையின் பெருக்கத்தினையும் ஆர்வத்தின் விழைவினையும் ஓர் உவமையில் வைத்துப்பேசுகையில் 'பெருகு தண்கடல் உற்றுண் பெருநசை ஒருசுணங்களை ஒக்கும் தகைமையேன்' என மனமுவந்து பகர்ந்துள்ளார். இம்முறையில் தாமும் அமைய வேண்டும் என்று எண்ணிய கம்பநாடரும், "ஓசைபெற்றுயர் பாற்கடல் உற்றொரு பூசை முற்றவும் நக்குபு புக்கென' என இசைத்துள்ளார். முன்னவர் கூறியதில் நாய் உவமையாக வந்துளது. பின்னவர் பாடியதில் பூனை எடுத்துக்காட்டாக இயம்பப்பட்டுள்ளது.

சேக்கிழார் காவிரியாற்றைப்புகழ்ந்து உவமை தருகையில் செவிலித்தாயைக் குறிப்பிட்டுள்ளார். இதனைச் 'செய்யபூமகட்கு நல் செவிலி போன்றது' என்னும் அடிகளில் காணலாம். இங்ஙனமே கம்பரும் சரயுநதிக்கு உவமை பேசுகையில் 'சரயு என்பது தாய்முலை அன்னது' என்றனர். செவிலி என்பாள் வளர்த்ததாய். தாய் என்பாள் பெற்றதாய். இவ்விருதாயரும் தாய்மைப்பண்பில் ஒன்றுபட்ட மனப்பான்மையுடையவர். ஆகவே, நதிக்கு இவ்விரு உவமைகளும் பொருத்தமானவைகளே.

சேக்கிழார்பெருமானார் சோழமன்னனது அரசியல் மேம்பாட்டைப் புகழ்ந்து கொண்டுவருகையில்

“அவனது நாட்டில் அமைந்த செங்கோன்மைகாரணமாக விலங்குகள் தமக்குள் பகைமையின்றி வாழ்ந்தன; பறவைகள் தமக்குத் தான்யம் இன்மை காரணமாக வேற்றுநாட்டகம் புகாது சோழ நாட்டகத்திலேயே வாழ்ந்துவந்தன.” என்னும் கருத்துக்களை அமைத்து “நீதியபுள்ளும் மாவும்” என்று சுருங்கக்கூறி விளங்கவைத்தனர். இவ்வாறு புலவர் பெருமானார் புகன்றதன் நுண்பொருளை நன்கு உணர்ந்த கம்பர் தம்நூலில் தசரதன் அரசியல் மேம்பாட்டைக் கூறுகையில்,

“வெள்ளமும் பறவையும் விலங்கும் ஒருவழி ஓடநின்றவன்”

என விதந்துகூறினர். நீதியபுள்ளும் மாவும் என்று சேக்கிழார் கூறிய தொடருக்குக் கம்பரது வாக்கு ஒரு விளக்கம்தருவதாக அமைந்திருப்பதை அறிஞர்கள் ஊன்றிச் சிந்திப்பாராக.

திருநீலகண்டர் வரலாற்றில் நடுநாயகமாக விளங்கும் சீரிய நிகழ்ச்சி திருநீலகண்டநாயனார் தம் வாழ்க்கைத்துணைவியாரிடம் உறுதி கூறிய கருத்தாகிய ‘எம்மை என்றதனல் மற்றைய மாதரார் தம்மை என்றன் மனத்திலுந் தீண்டேன்’ என்றதாகும். இச்சீரிய கருத்தைக் கம்பர் தம் நூலில் ஏற்ற இடத்தில் வைத்துப் பாடவேண்டும் என்று கருதி, அதற்குரிய இடங்களை நாடியபொழுது அவர்க்கு ஓர் இடம் கிடைத்தது, அதுவே அநுமனும் சீதையும் பேசிக்கொண்ட இடமாகும். அப்பேச்சில் சீதை இராமனிடம் அறிவிக்குமாறு அநுமனுக்குக் கூறுகையில்,

வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த விப்பிற விக்கிரு மாதரை
சிந்தை யாலுந்தொ டேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்

என்று செப்பியதாகும். சேக்கிழாரது தொடரான மனத்தினுந்தீண்டேன் என்பதும், கம்பர் வாக்கான சிந்தையாலும் தொடேன் என்பதும் எத்துணைப் பொருத்தமாக இருக்கின்றன பாருங்கள்!

இலக்குவன் தாயாகிய சுமத்திரையென்பாள் இலக்குவனுக்கு அறிவுரை கூறி இராமனிடம் கானகத்தில் எங்ஙனம் நடந்துகொள்ளவேண்டும் என்று கூறுகையில்,

ஆகாத தன்றால் உனக்கவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன்நம் மன்னவன் வையம்ஈந்தும்
போகாஉயிர்த் தாயர்நம் பூங்குழல் சீதையென்றே
ஏகாய்இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்என்றாள்,

என்று பாடியுள்ளார், இங்குக் கம்பர் "இவ்வயின் நிற்றலும் ஏதம்" என்றதன் குறிப்பு, 'இவ்வளவு நேரம் தாமதம்செய்தல் கூடாது; இராமன் காடு நோக்கிப் புறப்படுவதற்கு முன்சென்று வழிகாட்டியாகச் செல்லவேண்டும்' என்னும் விரைவினைக் காட்டுவதாகும். இந்தவிரைவு குறிக்கும் கருத்தினைக் கம்பர் யாண்டுப் பெற்றார் எனில், சேக்கிழார் பெருமானார் நூலில் பெற்றார் என்றால், அது மிகையாகாது. இயற்பகை நாயனார் விரைந்து நின்ற செயலைச் சேக்கிழார் குறிப்பிடுகையில்,

நின்றது பிழையாம் என்று நினைந்து வேறிடத்துப் புக்குப்
பொன்திகழ் அறுவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி

என்றனர். இங்கு "நின்றது பிழையாம்" என்னும் தொடரே கம்பரது நினைவிற்கு "இவ்வயின் நிற்றலும் ஏதம்" என வந்து அவர் நூலில் இடம்பெறலாயிற்று.

கண்ணப்ப நாயனார் புராணத்துள் திண்ணனார் வேட்டையாடும் சிறப்பைச்சிறப்பிக்குங்கால், யானையும் சிங்கமும் கண்ணப்பர் கடுங்கணைபட்டு ஒருங்கே சாய்வதை உவமை கூறுகையில் "இரவொடு பகல்

அணைவன என மிடையும் அவ்வனமே" எனக் கூறினர். கரியின் நிறத்திற்கு இரவு உவமையும், அரியின் நிறத்திற்குப்பகல் உவமையும் ஆக நின்றன. இந்த உவமையினை ஏற்ற இடத்தில் அமைக்க எண்ணிய கம்பர், யுத்தகாண்டத்தில் விபீணடனும் சுக்ரீவனும் ஒருவரை ஒருவர் தழுவி நின்ற நிலைமைக்கு உவமைகாட்டி மகிழ்வுற்றார். "இருவரும் ஒருநாள் உற்ற, எல்லியும் பகலும் போலத் தழுவினர் எழுவின் தோளார்" என்பது கம்பரது பாடல். சுக்ரீவனுக்குப் பகலும், வீபீடண னுக்கு இரவும் உவமைகள் ஆயின, விபீடணன் கரியன்; சுக்ரீவன் செம்மையின்; ஆகவே, உவமைகள் இவ்விருவர்க்கும் உகந்தவைகளாகவே அமைந்தன. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்துள்,

"கேட்டவப் பொழுதே சிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சிபொங்க
நாட்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா"

என்னும் இவ்வடிகளையே,

"இப்பொழு தெம்மனோரால் இயம்புதற் கெளிதே யம்மா
செப்பரும் குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்புஅவ் வாசகம் உரைப்பக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செத்தா மரையினை வென்றதம்மா"

எனக் கம்பர் தமது இராமனது திருமுகப் பொலி வுக்கு, "அப்பொழுது அலர்ந்த செந்தாமரை" என இப்பாட்டில் இணைத்துப் பேசிக்கொண்டார் எனில், இதுபொருத்தமே ஆகும். பெரிய புராணத்தில் பூம் பாவையார் எழிலினைப் பேசுகையில் சேக்கிழார் "ஓவியர்க்கு எழுத ஒண்ணுப் பாட்டொளி ஒளிர்வுற் றோங்க" எனக்குறிப்பிட்டனர். இக்குறிப்பு நினை விற்குவந்தே கம்பர் இராமனது அழகை வாலியின் வாக்கில் வைத்துப் புகழ்கையில் "ஓவியத்தெழுத ஒண்ணு உருவத்தாய்" என்று உளமுவந்து உரைத் தருளினர்.

கம்பர், சொற்பொருளின் ஆழத்தினை நன்கு சிந்திப்பதில் வல்லுநர். எளிய சொல்லாயினும் அஃது இடத்திற்கு ஏற்ப அமையப்பெறின், அஃது அரிய சொல்லே சீரிய சொல்லே—என்பது கம்பரது துணிபு. திருஞான சம்பந்தர் புராணத்தில் ஆளுடை பிள்ளையார் காளத்தியப்பரைக் கும்பிட்டதன் பயனை கக் காளத்தி வேடராம் கண்ணப்பரைக் கும்பிடு கையில் "கும்பிட்டபயன் காண்பார்போல் மெய் வேடர் பெருமானைக்கண்டு வீழ்ந்தார்" எனப் பாடி உளம் பூரித்தார். ஈண்டு வீழ்ந்தார் என்னும் சொல் பாலறுவாயருக்குக் கண்ணப்ப நாயனாரிடத்து அமைந்த அன்பின் பெருக்கை அறிவிப்பதாய் விரைந்து பணிந்து வணங்கிய பண்பாட்டை விளக்கி நிற்கிறது. இதன் ஆழ்ந்த பொருளை அறிந்த கம்பர் தாமும் அவ் "வீழ்ந்தார்" என்னும் மொழியின் வேகத்தைத் தம்நூலில் பொருத்தமான இடத்தில் வைத்துப் போற்ற விழைந்து, விபீடணன் இராமனைக் கண்டு வணங்கும் போது அவனது அன்பின்மேம் பாட்டை அறிவிக்க, "வரங்களின் வாரியன்ன தாளிணை வந்து வீழ்ந்தான்" எனப்பாடி அகங்களித் துள்ளார் என்பதை அறியின், கம்பருக்குச் சேக்கி ழார்பெருமானார் கவியினிடத்து எத்துணை ஈடுபாடும் அன்பும் ஆர்வமும் இருந்தன என்பதை அறிஞர்கள் பாராட்டாமல் இருக்க இயலாது.

காதால் கேட்டற்கும் சகிக்க ஒண்ணாத வார்த்தைகளைக் கேட்கும் சந்தர்ப்பமும் வாய்க்கப்பெறின், அவ்வார்த்தைகளின் கொடுமையினை விளக்க, தக்க உவமை கூறவேண்டுவது கவிகளது திறனே ஆகும், அந்த முறையில் சிறுத்தொண்டரிடம் வந்த வைரவர் தாம் கூறப்போகும் செய்தி கடுமையானது என்பதை முன்பே அறிவிப்பான்வேண்டி அதனைத் தக்க உவமை வாயிலாக,

"புண்செய் நோவில் வேல் எறிந்தாற்போலும்
புகல்வ தொன்றென்றார்"

எனக் கூறினர்.

துன்பந் தருதற்கு இதைவிடச் சிறந்த உவமை காட்டல் அரிது. இந்த உவமையின் பொருட்பொலி வினைக் கம்பர் உணர்ந்து தமது நூலில், விசுவா மித்திரர் தசரதனிடம் இராமனை வேண்டியபோது, அவ்வேண்டுகோள், தசரதனுக்கு எவ்வாறு இருந்தது என்பதை விளக்க,

எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தால்
எனச்செவியில் புகுத லோடும்.

என்று சிறிது மாற்றி அமைத்துக்கொண்டனர்.

இங்ஙனம் பல்லாற்றானும் கம்பர், சேக்கிழார் பெருமானார் கவிகளில் ஈடுபட்டு அக்கவிகளின் கருத்துக்களையும், தொடர்களையும், சொற்களையும் தம் நூலில் ஆங்காங்கு ஏற்ற இடங்களில் அமைத்துப் பாடித் தம் நூலினைச் சிறக்கச் செய்துள்ளார் என்பதில் ஐயம் உண்டோ?

# 7. மணிமேகலை பாடிய மாபெரும் புலவர்

மணிமேகலை எனனும் மாபெரும்நூலைப் பாடிய புலவர் யார் எனில், அவரே மதுரைக் கூலவாணிகச் சீத்தலைச் சாத்தனுராம் சங்ககாலச் சான்ருேருள் பெருமதிப்புப் பெற்ற பெருந்தகையராவார். இவர் பெரும் புலவராயும், பெரும் வணிகராயும் திகழ்ந் தவர். இவரது இயற்பெயர் சாத்தனுர் என்பது. ஆனுல், இவருடைய பெயர்க்கு முன் உள்ள அடை மொழிகளால் பல அரிய குறிப்புக்கள் நமக்கு அறிய வருகின்றன. இப்புலவர் வணிகர் தொழிலை மேற் கொண்டு இருந்தவர் என்பதை இவர் பெயர்க்கு முன் வாணிகச் சீத்தலைச் சாத்தனுர் என்று குறிப்பிடப் பட்டிருப்பதனுல் நன்கு உணரலாம். வாணிபம் பல துறையில் செய்யப்படும். அது பொன் வாணிபமாக வேனும், அறுவை (ஆடை) வாணிபமாகவேனும் மற்றும், வெவ்வேருன வாணிபமாகவேனும் இருக் கலாம். ஆனுல், இப்புலவர் சிகாமணியார் தான்ய வியாபாரியாக இருந்தார் என்பதை இவர் **கூல வாணிகச்** சீத்தலைச் சாத்தனுர் என்ற பெயர் பூண்டு இருப்பதால் உணரலாம். கூலம் என்பது நெல் முதலிய தான்யம் ஆகும்.

அடுத்தபடியாக இவர் பெயருடன் இணைத்துப் பேசப்பட்டுள்ள மதுரை என்னும் சொல்லைக் குறித் தும் சீத்தலை என்னும் மொழியைக் குறித்தும் சிறிது ஆராய்ச்சி செய்ய வேண்டியவராய் இருக்கின்ருேம். இவர் தாம் மேற்கொண்ட தான்ய வியாபாரத்தினை மதுரையில் நடத்தி வந்தமையின் மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனுர் என்று குறிக்கப் பட்டு வந்தனர். சீத்தலைச் சாத்தனுர் என்று ஏன்

இவர் அழைக்கப்பட்டார் என்பதையும் ஈண்டே உணர்ந்து கொள்வது உசிதயாகும்.

சாத்தனார் **சீத்தலைச்** சாத்தனார் என்று பெயர் பூண்டமைக்கு நம் தமிழகத்தில் இரு காரணங்கள் இயம்பப்பட்டு வருகின்றன. ஒன்று, "சீத்தலை என்பது ஓர் ஊர். இவ்வூரில் சிறப்புற்று விளங்கிய தெய்வம் ஐயனார் என்பது. அத் தெய்வத்திற்குச் சீத்தலைச் சாத்தனார் என்ற பெயர் வழங்கப்பட்டு வந்தது. அப்பெயரையே இவருக்கு இட்டு வழங்கினர்" என்பது. சீத்தலைச் சாத்தனார் என்ற பெயருக்கு மற்றொரு காரணமாகக் கூறப்படுவது யாதெனில், அதுதான் பின்வரும் குறிப்பாகும். அதாவது, 'சீத்தலைச் சாத்தனார் சங்ககால அறிவுடைச் சான்றோர் அல்லரோ? அவர் தமிழ்ச் சங்கத்தில் இருக்கும்போது புலவர் என்று பெயரை வைத்துக் கொண்டு சிலர் பாடல்களைப் பாடிக்கொண்டு வந்து படித்துக் காட்டும்போது, அப்பாடல்களில் சொற்குற்றம், பொருட் குற்றம் முதலிய பல குற்றங்கள் மலிந்து இருந்தமையினைக் கேட்கும் தோறும், சகிக்க முடியாத காரணத்தால், தாம் எழுதும் இருப்பு ஆணியாகிய எழுத்தாணியைக் கொண்டு 'இத்தகைய தவறுடைய பாடல்களையும் நாம் கேட்க நேர்ந்ததே' என்று தம்தலையில் குத்திக் குத்தி வந்த காரணத்தால் குத்துண்ட இடம் புண்ணாகிச் சீழ் ஒழுகும் இடமாக இருந்தமைபற்றி, இவர் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்பட்டனர்" என்பதாகும். ஆனால், இக்குத்து இப்புலவர்க்கு நின்றபாடு இல்லையோ என்று நீங்கள் எண்ணக் கூடும். இவர்க்கு இவ்வாறு தம் தலையில் குத்திப் புண்ணாக்கிக் கொண்ட செயல் முற்றுப் பெறும் காலமும் வந்து சேர்ந்தது, வள்ளுவப் பெருந்தகையார் வரைந்த வாய்மொழியாகிய திருக்குறட்பாக்களைக் கேட்டபின்னர், அக்குறட் பாக்களின் பொருள்

செறிவு, இவர் குத்திப் புண்ணுக்கிக் கொள்வதை நிறுத்தச் செய்தது. இதனை அழகுபட இவர் காலத்துப் பெரும்புலவர் மருத்துவன் தாமோதரனார் தமது அருமைப் பாடல் ஒன்றால், "வள்ளுவர் முப்பாலால் தலைக் குத்துத் தீர்வு சாத்தற்கு' என்று விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, மேலே காட்டிய காரணங்களால் இப்புலவர் பெருந்தகையார் மதுரைக் கூலவணிகச் சீத்தலைச் சாத்தனார் என்று குறிக்கப்பட்டு வந்துள்ளார். இவர் மதுரைச் சீத்தலைச் சாத்தனார் எனவும், சீத்தலைச் சாத்தனார் எனவும், சாத்தனார் எனவும் அழைக்கப்படுவாரானார்.

சாத்தனார், இவரைப்போன்ற புலவர்களால் சிறப்பிக்கப்பட்ட சீர்மையோர் ஆவார். இவரோடு இணைந்து நட்புக் கொண்டிருந்த புலவர் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகளார் ஆவார். அவர் இவரைக் குறிப்பிடும் போதெல்லாம் "நன்னூல் புலவன்" என்றும், "தண்டமிழ் ஆசான் சாத்தன்" என்றும் குறிப்பிட்டு இவர்க்கு இருந்த தண்தமிழ் அறிவையும், நல் நூல்களை இயற்றும் வன்மையினையும், ஆசிரியர் என்று போற்றத்தக்க பெருமைசான்றவர் என்பதையும் நன்கனம் புலப்படுத்தி யுள்ளார்.

சீத்தலைச் சாத்தனார் இளங்கோ அடிகளின் தமையனான சேரன் செங்குட்டுவனிடத்தில் நட்புக் கொண்டிருந்தனர். அந்நட்புக் காரணமாகக் கண்ணகி என்பாளது பிறப்பின் மேம்பாட்டை எடுத்துக்கூறியவர். மேலும், அவளுக்குக் கோயில் கட்டுவித்து நித்தியபூசைகள் நியமமாக நடத்தக் காரணமானவர். சாத்தனார் வேண்டுகோளுக்கு இணங்கியே இளங்கோ அடிகளார் சிலப்பதிகாரமாம் சீரிய நூலை யாத்தனர். ஆகவே, கற்புடைக் கடவுளாம் கண்ணகியின் கோயில் எடுப்புக்கும் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாம் காவியத்தை நாம்பெறு

தற்கும் பெருங்காரணர் சீத்தலைச் சாத்தனார் என்பதை அறிந்து நாம் இன்புற வேண்டியவராகின்றோம்.

சாத்தனார் பெரும் புலவராக இருந்தும், திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு உடையவராய் இருந்தார் என்பதை முன்னர்க் கண்டோம். திருவள்ளுவரிடத்திலும், அவர் செய்த நூலிடத்திலும் இவர் கொண்டிருந்த மதிப்பு இவர் எழுதியுள்ள நூலில் சமயம் வந்தபோது, திருவள்ளுவரையும், திருக்குறளையும் புகழ்ந்து பேசுவதிலிருந்து நன்கு உணரலாம். திருவள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்று கூறிப் போற்றுகிறார். திருக்குறளைப் 'பொருள் உரை' என்று புகழ்கிறார். திருக்குறள்களில் ஒரு குறளை எடுத்து ஓர் எழுத்தும் ஒரு சொல்லும் சிதையாதவாறு தம் நூலில் அமைத்தும் பாடியுள்ளார். அதுவே, மணிமேகலையில் சிறை செய் காதையில்,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருள்உரை தேறாய்"

என்று கூறப்பட்டதாகும். சீத்தலைச் சாத்தனார்க்குத் திருக்குறளினிடத்தில் இருந்த பெருமதிப்புக்கு மேலே காட்டிய சான்று மட்டும் போதாது. நாடு, மலை, நதி, ஊர், முரசு, தமிழ், கொடி, ஊர்தி முதலிய ஒவ்வொன்றும் மும் மூன்றாகப் பெற்றிருந்தாலும் முப்பாலாகிய திருக்குறள்தான் மன்னர்கட்கு முடியில் மாலையாக விளங்க வல்லது என்பதை,

"மும்மலையும் முந்நாடும், முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்"

என்று பாடியுள்ள பாராட்டுரையைப் பாருங்கள். இதன்பொருள், "இக்குறள் கொல்லிமலை, நேரிமலை,

பொதிகைமலை எனப்படுகின்ற மூன்று மலைகளையும், சேரநாடு, சோழ நாடு, தென்னாடு எனப்படுகின்ற மூன்று நாடுகளையும், பொருநை நதி, காவிரி நதி, வைகை நதி எனப்படுகின்ற மூன்று நதிகளையும், கொடை முரசு, படை முரசு, மண முரசு என்ற மூன்று முரசுகளையும் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் எனப்படுகின்ற மூன்று தமிழ்களையும் வில் கொடி, புலிக் கொடி, மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடிகளையும் பாடலம், கனவட்டம், கோரம் எனப்படுகின்ற மூன்று குதிரைகளையும் தாம் முறையாகப் பெற்ற சேர, சோழ, பாண்டியர் எனப்படும் மூவரசர்கள் தம் தம் முடிகளில் மேலும் கொள்ளப் பட்ட மாலை'' அன்றோ என்பது.

சீத்தலைச் சாத்தனார் அறிவு ஆற்றலைக் காண விழையும் நாம், இப்புலவர் பாடியுள்ளனவாகக் கிடைத்துள்ள பாடல்களை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு புறநானூறு திருவள்ளுவமாலை நூல் களில் பரக்கக் காணலாம். இப்பாடல்கள் தனித் தனிப்பாடல்கள். இவர் ஒரு பெருங்காவிய நூலாகச் செய்ததே மணிமேகலை என்னும் பெயருடைய நூலாகும். இம்மணிமேகலை என்னும் நூலில் இவர் கூறியுள்ள கருத்துக்களில் புத்தமதக் கருத்துக்களை ஆழ்ந்த அனுபவ முறையில் கூறியிருப்பது கொண்டு இப்புலவர் பெருமானார் புத்த மதத்தினர் என்பது புலனாகிறது. ஈண்டு நாம் இப்பெருந்தகையாரது புலமைப் பெருக்கை அறிந்து இன்புறுதற்கு இவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலையே பற்றுக் கோடாகக் கொள்வோமாக. இவரது ஏனைய பாடல் களின் இன்சுவையினை நுகர்தற்கு இவ்வேடு இடந் தராது. பின்னால் நீங்களே அப்பாடல்களைப் படித்துப் பெரும்பயன் பெறுவீர்களாக.

சாத்தனார் பாடினதாகப் புறநானூற்றில் காணப் படும் பாடல் ஒன்றே ஆகும். அப்பாடல்

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் மீது பாடப்பட்டது. இம்மன்னனுக்கு முன்னும் பின்னும் அமைந்த சொற்களாகிய பாண்டியன் மாறன் என்பன அவன் மூவேந்தர் குடிகளுள் ஒன்முன பாண்டியர் குடியினன் என்பதைப் புலப்படுத்து கின்றன. இவனே பாண்டியர் குலத்து மன்னர் களுள் நற்பெயர் எடுத்த நல்லரசன்போலும்! அதனுல்தான் நன்மாறன் என்று கூறப்பட்டுள்ளான். இவன் வாழ்ந்த இடம் ஒரு பேர் அரண்மனை. அது பல விதமான அழகிய சித்திரங்களைக் கொண்டிருந்தது. அவ்விடத்தில் இவன் இருந்து வாழ்கையில், இவனது வாழ்நாட்கள் உலந்தபின் மண்ணுலகிலிருந்து விண் ணுலகிற்கு விருந்தாகச் சென்றவன். இவ்வாறு இப்பாண்டிய மன்னன் தான்வாழ்ந்திருந்த மாளிகை யாகிய சித்திரமாடத்தில் உயிர்விட்ட காரணத்தால் பாண்டியன் சிந்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன் என்று கூறப்பட்டனன். இவ்வாறு மன்னர்கள் எங் கெங்கிருந்து இறந்தனரோ, அவ்வவ்விடங்களையும் இணைத்து இன்ன இடத்தில் இறந்தமன்னன் என்று குறிப்பிட்டுவந்த வழக்கம் தமிழகத்துத் தொன்று தொட்ட வழக்கமாகும். இதனைப் பண் டைக்கால மன்னர்கட்கு அமைந்திருந்த பெயர்களைக் கொண்டு நன்கு உணரலாம். எடுத்துக் காட்டாகக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, சேரமான் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், சேரமான் சிக் கல் பள்ளித்துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியா தன், சோழன் இளவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங் கிள்ளி சேட் சென்னி, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன், சோழன் குள முற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவன், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன், பாண் டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, பாண் டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி

முதலிய பெயர்களைக் காட்டலாம். எனவே, சீத் தலைச் சாத்தனாரால் பாடப்பட்ட பாண்டியன் சித்திரகூடத்தில் பூத உடல் நீத்துப் புகழ் உடல் பெற்றவன்.

இம்மன்னனைப் பற்றி இப்புலவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் நீண்ட பாடலும் அன்று; குறுகியபாடலே. அக்குறுகிய பாடலில் இம் மன்னன் வீரம், கொடை முதலியன சுருங்கச் சொல்லி விளங்க வைத்த பெருமை சீத்தலைச் சாத் தனாரையே சாரும். சுருங்கச்சொல்லி விளங்க வைக் காதார் அல்லரோ ஒன்றைப்பாரித்துக் கூறுவர். இவ்வாறு பாரித்துக் கூறுபவரையே வள்ளுவனார் இழித்துக் கூறுகிறார். அவர்களை எத்துணை நாகரிக மான முறையில் பழித்துக் கூறுகின்றார் பாருங்கள்!

"பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்"

என்பது சுருங்கச் சொல்லி விளங்க வைக்காத வரைப்பற்றி வள்ளுவர் கொண்ட கருத்து.

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன் மாறன் நல்ல கம்பீரமான தோற்ற முடையவனாய் இருந்திருக்க வேண்டும். அவன் தோற்றப் பொலிவை நம் கண்முன் கொணர்ந்து காட்ட, அவனைப் பற்றிக் கூறும்போது, சீத்தலைச் சாத்தனார், மாலை தொங்கப்பட்ட அழகு விளங்கப் பட்ட மார்பையும், முழந்தாள் வரை நீண்ட கையை யும் உடைய மாட்சிமைப்பட்ட பாண்டியன் என்பதை,

"ஆரம் தாழ்ந்த அணிகிளர் மார்பில்
தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி"

என்று கூறிச் சிறப்பித்தார். இத்தகைய தோற்றப் பொலிவுடைய மன்னன் வீரம் உடையனாய் விளங்கி

இருந்திருப்பான் என்பதை விதந்து கூற வேண்டா அன்றோ! உண்மையில் இவன் வீரம் செறிந்த விடலையாகவே இருந்தனன்.

இவன் பகைவர்கட்கு ஞாயிறுபோன்று வெப்பம் தருபவனாக இருந்தான் என்று தண்டமிழ்ச் சாத்தனார் தயக்கம் இன்றிக்கூறும் கூற்றே போதிய சான்றாகும். இதன் கருத்துச் சூரியன் எப்படித் தனது சுடும் இயல்பாகிய வெம்மையினால் பொருள்களைச் சுட்டு அழிக்கின்றானோ, அதுபோல இப்பாண்டியன் பகைவர்களைத் தன்சினமாகிய வெம்மையினால் சுட்டழிப்பவன் என்பதாம். இவ்வாறான வீரமும் சினமும் இவன் கொண்டிருந்ததனால், இவன் ஈரம் நெஞ்சம் இல்லாதவனாய் இருந்திருப்பானோ என்று எண்ணவேண்டா. வீரமுள்ள இடத்தில் நிச்சயமாக ஈரம் இருந்தே தீரும். ஈரமாவது அன்பு; இந்த அன்பு இப்பாண்டியனிடம் குடி கொண்டிருந்தது. இதனைக் குறிப்பிடாமலும் விட்டிலர் புலவர் சீத்தலைச் சாத்தனார். இச்செழியன் பால் அமைந்த அன்பு தம்மிடத்தில் மட்டும் காட்டப் பட்ட அன்புபோலும் என்று நாம் உணர்தல் கூடாது. இத் தென்னவன் கொண்ட அன்பு சீத்தலைச் சாத்தனார் போன்ற புலவர்கள் யாவரிடத்தும் காட்டி வந்த அன்பாகும். இப்பாண்டியன் காட்டிய அன்பு தண்ணிய அன்பு: இன்பம் தரும் அன்பு. இக் கருத்து இப் புலவர் கூறும் உவமை வாயிலாக உணரக் கிடைப்பது. குளிர்மைக்கும் இனிமைக்கும் ஏற்றதான சந்திரனையே இப்பாண்டி மன்னன் அன்புப் பண்புக்கு அமைந்த உவமையாக அறிஞர் சீத்தலைச் சாத்தனார் அறைந்துள்ளார். இவ்வாறு பகைவர்க்கு ஞாயிறு அனையனாகவும், புலவர்கட்குத் திங்கள் போன்றவனாகவும் இருந்தான் என்பதைப் இப் புலவர் புலப்படுத்தும் புறநானூற்று அடிகள்,

"ஞாயிறு அனையைநின் பகைவர்க்குத் !
திங்கள் அனையை எம்ம னோர்க்கே !"

என்பன.

இவ்வடியில் அமைந்த உவமைகள் சுவை பயப் பன அல்லவோ? இன்னோர் அன்ன கருத்துக்கள் அமைந்த அடிகள், புலவர் சீத்தலைச் சாத்தனர் பாக் களில் மலிந்து உள்ளன. அவற்றைப் படிப்பதற் கான அவா உம்பால் அமைவதாக.

# 8. கம்பன் கவியும் காகுத்தன் கணையும்

கம்பன் கவியும் காகுத்தன் கணையும் என்னும் தலைப்பு நான்கு சொற்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்வதைக் காண்கின்றோம். ஒவ்வொரு சொல்லும் விளக்கம் பெறுதற்குரிய சொல்லேயாகும். கம்பர் தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய இடைப்பட்டகாலத்துப் பெரும் புலவர்களில் ஒருவர் என்பதை எவரும் அறிவர். தமிழுக்குக் கதியாவார் கச்சியப்பரும் திருவள்ளுவரும் என்று ஒரு சிலர் கருதினும், திருமணம் செல்வகேசவராய முதலியாரைப் போன்றவர்கள் கம்பரும் திருவள்ளுவரும் என்று கூறிவந்த கூற்றுக்கு ஏற்றவர் கம்பர் என்று கூறுவதும் மிகவும் பொருத்தமேயாகும். "கல்வியில் பெரியன் கம்பன்" என்று பல்லாண்டுகளாகக் கூறப்பட்டு வரும் பழமொழியும் அவரது கல்விப் பெருக்கத்திற்குப் பெருஞ்சான்றாக நிற்கிறது.

அடுத்தாற்போல் உள்ள கவி என்னும் சொற்பொருளையும் நாம் ஊன்றிப் பார்த்தல் வேண்டும். கவி என்பது பாடல், செய்யுள், யாப்பு, தூக்கு என்றபொருள் தரும் மொழியே யாகும். கவி எவ்வாறு இருத்தல் வேண்டும்? பாடப்படுதல் வேண்டும்? என்பனவற்றைப் பவணந்தியார் கூறாய,

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போல்பல
சொல்லால் பொருட்கிடன் ஆக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

என்னும் நூற்பாவினால் நன்குணரலாம். மேலே கூறப்பட்ட செய்யுள் அமைப்பு முழுமையும் கம்பர் கவியுள் உண்டு என்பதில் எள்ளளவும் ஐயமின்று.

இன்றேல், கம்பர் கவிச்சக்கரவர்த்தி யென்று தமிழ் மக்களால் மதிக்கப் பட்டிருக்கமாட்டார். மேலும், கம்பரே சான்ளுேர் கவி எவ்வாறு இருக்க வேண்டு மென்பதை,

> "புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்ருகி
> அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிஅ ளாவிச்
> சவியுறத் தெளிந்து தண்ணென் ருெழுக்கமும் தழுவிச் சான்ளுேர்
> கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்"

என்ற பாடலைப் பாடி விளக்கியிரார் அல்லரோ? இவ்வாறு சான்ளுேர் கவிக்கு ஒரு தனிச் சிறப்பிலக்கணம் தந்து பாடிய கம்பர், தம் கவியும் இம்முறையில் இருத்தல் வேண்டுமென்பதைச் சிந்தியாமல் இராமாயணப் பெருங் காவியத்தில் பல்லாயிரக் கணக்கான பாடல்களைப் பாடியிரார்.

ஆகவே, கம்பர் கவிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டென்பதை உணர்தல் வேண்டும். கம்பர் கவிக்கு எடுப்பும் இணையும் அற்ற ஏற்றம் உண்டு என்பதைக் "கம்ப நாடன் கவிதையைப் போல் கற்ளுேர்க்கு இதயம் களியாதே." என்ற அரும் பொருட்டொடர் எடுத்துக் காட்டுவதைக் காண்க. "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்ற பழமொழி கொண்டேனும் கம்பரது கவியின் பெருமையினை உணரலாம். கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும் என்பது உயர்வு நவிற்சி அணியின்பால் பட்டதெனினும், கம்பர் வீட்டில் பணிபுரிந்து வந்த ஒருத்தி, கம்பனைக் காணவந்த ஒரு புலவரை நோக்கி,

> "வட்டமதி போலிருக்கும் வன்னிக் கொடிதாவும்
> கொட்டுவார் கையினின்று கூத்தாடும்—சுட்டால்
> அரகரா என்னுமே அம்பலசோ மாசி
> ஒருநாள்விட் டேன்ஈ துரை"

என்று பாடி, அப்பாடற் பொருள் இன்னது

என்பதறியாவாறு திகைப்புறும் வண்ணம் செய்தாள் என்பதைத் தனிப்பாடல் திரட்டுப்பாடல் மூலம் அறியலாம். இப்பாடலில் குறிப்பிடப்பட்டது வரட்டியாகும். எனவே, கம்பர் கவி எனில் அதற்கு நாட்டில் தனிச் சிறப்புண்டு.

கம்பரது கவி, கற்றோர் இதயத்தைக் களிக்கச் செய்வதன் இரகசியம் யாது ? கற்றூர் களிக்க எம்முறையில் அவர் கவிகளைப்பாட முடிந்தது? என்பன போன்ற வினுக்களுக்கு விடையை அவரது கவிகளைப் பார்க்குங்கால் உணரலாம். அதுபோது கம்பரது பரந்த புலமையும் புலனுகும். கம்பரது பல நூற் பயிற்சியும் தென்படுகிறது. இவற்றிற்கு அரண்செய்வனவாகக் கீழ்வரும் பாடல்களைப் பயின்ருல் மேலே கூறிய உண்மை புலனுகாமல் இராது.

"புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழ்இடை வீழ்த்ததெனத் தாரைகள்"

என்பது,

"வெள்ளிவெண்
கோல்நி ரைத்தன போல்கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்தவே"

என்னும் சிந்தாமணியை ஒட்டியது.

"வரம்பில தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுஎன் பான்போல் முன்னைநாள் இறந்தான் பின்னுள்
பிறக்குமா றிதுவென் பான்போல் பிறந்தனன் பிறவா வெய்யோன் "

என்பது,

"தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும்
மாய்தல் உண்மையும் பி[illegible]த்தல் உண்மையும்

அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கள் புத்தேள் திரிதரும் உலகம்''

என்னும் புறநானூற்றைத் தழுவியது.

''ஊருணி நிறையவும் உதவும் மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் ருகவும்''

என்பது,

"ஊருணி நீர்நிறைந் தற்றே''

என்றும்,

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றல்''

என்றும் உள்ள குறட்பாக்களை நினைவூட்டுகின்றன.

கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுடர் இருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியஓர் செம்பொன் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினன்

என்பது. "கருமாணிக்க மலைமேல், மணித்தடந் தாமரைக் காடுகள்போல் திருமார்பு, வாய், கண் உந்தி கை காலுடை ஆடைகள் செய்யபிரான்'' என்னும் திருவாய் மொழியின் கருத்தைச் சார்ந்ததே. இந்த எடுத்துக்காட்டுக்களினால் கம்பர் "முன்னோர் மொழி பொருளே அன்றி, அவர் மொழியும் பொன்னே போல் போற்றுவம்'' என்ற கருத்தினை உளத்தில் கொண்டு தம் நூலைக் கவினுற யாத்துள்ளார் என்பது அறிய வருகின்றது. மேலே காட்டிய மேற்கோள்கள் கம்பரது பரந்த கல்வியறிவுடைமைக் குரிய அகச்சான்றுகளாக அமைவனபோலப் புறச்சான்றாகக் கம்பரே ஒருசமயம் தம்மை நோக்கி வினவினார்க்குத் தாம் அதில் அதில் ஓர் அகப்பை அள்ளிக் கொண்டேன் என்று கூறியதாகக் கூறப் படும் சொற்றொடரைக் கொள்ளலாம். அதில் அதில் ஓர் அகப்பை அள்ளிக் கொண்டேன்

என்பதன் பொருள், எனக்கு முன்னிருந்த நூற்களின் கருத்துக்கள் சிலவற்றை முகந்து எடுத்துக்கொண்டு, என் நூலில் அமைத்துக் கொண்டேன்,'' என்பதன்றோ?

சேக்கிழார் பெருமானார் தம்நூலினை "உலகெலாம்'' என்ற தொடரை முன்னதாக அமைத்துத் தொடங்கியுள்ளார்.

இவ்வுலகெலாம் என்னும் தொடரைச் சேக்கிழார் பெருமானார் தாமே படைத்துக் கொண்டு தம் முதற்செய்யுளை யாத்திலர். இத் தொடர் கூத்தப் பெருமானாரது கூர்த்த அருளால் தொண்டர் சீர்பரவுவார்க்கு எடுத்து மொழியப்பட்டதாகும். ஆகவே, அவ்வாக்குப் பசுவாக்கு ஆகாமல் பதிவாக்காயிற்று. அப்பதிவாக்கை முதலிடத்து மட்டும் வைத்துப் போற்றாமல், தம்நூலின் இடையிலும் கடையிலும் வைத்துப்போற்றியுள்ளார், சேக்கிழார். இடையில் வைத்துப் போற்றிய இடம், ஆளுடைய பிள்ளையார் இறைவர் கொடுத்த நித்திலச்சிவிகையில் இவரும் போதாகும். அதுபோது

"அஞ்செழுத் தோதி ஏறினார் உய்ய உலகெலாம்''

என்றுபாடிக் களித்தார், பின் தம் நூலை முடித்து வாழ்த்துக் கூறுமுகத்தால்,

வான்புகழ் நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

என்று பாடி இன்புற்றார். இதனைப் பாராட்டி, மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் தாம் பாடிய சேக்கிழார் பிள்ளைத் தமிழில், "உலகெலாம் எனும் சுருதி நாப் பண்ணும் ஈற்றும் பொருத்திப் பேர்கொண்ட'' என்று பாடியும் காட்டினார்.

இங்ஙனம் சேக்கிழார் செய்தது போலவே, கம்பரும் தம் நூலில் மூவிடத்து வைத்துப் பாராட்

டத்தக்க சிறப்பினைச் செப்ப நீடு நினைந்தார். நினைந்த அவரது நினைவில் இராமனது அம்பு நினைவிற்கு வந்துற்றது. உண்மையில் இராமனது சிறப்பு இயல்பைக் காட்டக்கூடியவை பல இருந்தாலும், அவற்றுள் தலைசிறந்ததாக எடுத்துக் கூறத்தகும் பெருமை வாய்ந்தது அவ்விராமனது அம்புதான் என்று கூறின் இழுக்கு ஒன்றும் எய்தாது. தெலுங்கு மொழியிலும் இராமனது தனிப்பெருந் தகைமைகளுக்கு மூன்று செயல்கள் கூறப்படுகின்றன. அவையே "ஏகபாணம், ஏகதாரம், ஏகமாடா" என்பன. இங்குக் கூறப்பட்ட தொடர்களின் பொருள் முறையே, ஒரே அம்பு, ஒரே மனைவி, ஒரேசொல்" என்பதாகும். இதுகுறித்துத்தான் ஈண்டுக் காகுத்தன் கணைஎன்ற தொடர். கட்டுரையின் தலைப்பில் இணைந்துள்ளது. காகுத்தன் ஆவான் இராமபிரான் என்க. காகுத்தன் என்ற பெயரைக் குலசேகர ஆழ்வார் தயரதன் புலம்பல் என்ற தலைப்பில் தாம் பாடிய பாடல்களில் செம்மையுறத் தெரிவித்துள்ளனர்.

கொல்லணைவேல் வரிநெடுங்கண் கோசலைதன்
குலமதலாய் குனிவில் ஏந்தும்
மல்லணைந்த வரைத்தோளா வல்வினையேன்
மனம்உருக்கும் வகையே கற்றாய்
மெல்லணைமேல் முன்பயின்றாய் இன்றுஇனிப்போய்
வியன்கானம் மரத்தின் நீழல்
கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ
காகுத்தா கரிய கோவே !

என்ற பாடலில் காண்க.

கணையாவது அம்பு. ஆகவே, காகுத்தன் கணை என்பது இராமனது அம்பாகும். இவ்வாறான இராமனது அம்பின் மாட்சி சிறப்புறப் புலப்படுத்தப்பட்ட மூவிடங்கள் யாவை என்றாய்தலே அடுத்த கட்டமாகும்.

கோசிகர் தாம் செய்யும் வேள்விகட்கு இடையூருக நின்றதாடகையைக் கொல்ல இராமனை அழைத்துச் செல்லுகிருர். இராமனே, எந்த வேட்டையும் ஆடி அறியாதவன். அரசர் குலச்சிறுவர் முதல் முதல் வேட்டையாடினுல், அது கன்னி வேட்டை யெனப்படும். ஆகவே, கன்னிவேட்டை, முதல் வேட்டை என்ற பொருளது. ஆனுல், இராமனுக்கமைந்த கன்னிவேட்டை, முதல் வேட்டை என்ற பொருளுடன் கன்னியாகிய பெண்ணை வேட்டையாடிக் கொல்லுதல் என்ற பொருள்தரும் முறையிலும் அமைந்துவிட்டது. இது குறித்து, இராமன் தாடகையைக் கொல்வது குறித்துச் சிறிது அஞ்சினுன். அவ்வச்சம் தாடகையைக் கண்டு அஞ்சிய அச்சம் அன்று. ஒருபெண்ணையா ஓர் ஆண்மகன் வேட்டையாடிக் கொல்வது என்பதுதான் அவனது அச்சத்திற்குக் காரணம். இந் நிலையில் விசுவாமித்திரர், இராமனது உட்கிடக்கையை யுணர்ந்து,

தீதென் றுள்ளவை யாவையும் செய்தெமைக்
கோதென் றுண்டிலள் இத்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணிஞய்

என்று கூறிக்கொல்லுமாறு கட்டளையிட்டார். அவ்வளவு தான்! உடனே இராமன்,

ஐயன் அங்கது கேட்டறன் அல்லவும்
எய்தி ஞல்அது செய்கென் று ஏவிஞல்
மெய்ய நின்னுரை வேத மெனக்கொடு
செய்கை யன்றே அறம்செயு மாறென்ருன்

என்று கூறி அம்பை விடுத்தான். அவ்வம்பு வேகமாகச் சென்று தாடகையின் உடல் உரத்தை உருவி வெளிவந்துற்றது, இந்த நிலையைத்தான் கம்பர்,

சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தி ளுள்மேல் விடுதலும் வயிரக்குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்கா தப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்
றன்றே

என்று பாடிக் காட்டினர்.

இப்பாடலில் இராமனது அம்பு தாடகையின் மார்பகத்தை ஊடுருவிச் சென்று, முதுகுவழியே மின்வேகமாக வெளிவந்துற்றது என்பது கூறப்படுகிறது. அவ்வம்பு மிக்க விரைவுடன் ஊடுருவி. மிக்க விரைவிலும் வெளிவந்துற்றது என்பதை விளக்கவே நல்ல உவமையினைக் காட்டி விளக்கியருளினர் கம்பர், கல்லாதவர்கட்குக் கற்றவர் அறவுரைகளைக் கூறினுல், அச்சொற்கள், ஒரு காதின் வழியே நுழைந்து, மற்றொரு காதின்வழியே அப்போதே விடப்படுகின்றன. அக்கருத்துக்கள், அவர்கள் நெஞ்சத்து இருப்பது மில்லை. ஆகவேதான், " கம்பர், கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே" என்றனர். எனவே, இஃது இராமனது அம்பின் வேகத்தின் மாட்சியினைக் காட்டிய முதல் இடமாகும்.

இனி, அடுத்தாற்போல் இராமனது அம்பின் சிறப்பைக் கம்பர் யாண்டு வைத்து இயைத்துக் காட்டி உள்ளார் என்பதைப் பார்ப்போம்.

இராமன் வாலியின் மார்பில் அம்பினை விடுத்தனன். இராமன்அம்பு எத்தனை வேகமும், வெப்பமும் உடையதாக இருப்பினும், அது வாலியின் மார்பகத்தை ஊடுருவிச் செல்லும் ஆற்றலைப் பெற்றிலது. தன் மீது பாய்ந்த அம்பினை வாலி, தன் இரு கரத்தாலும், இரு காலாலும், ஒரு வாலாலும் பிடித்து, அது யாருடைய அம்பெனக் கூர்ந்து

நோக்கவும் தொடங்கினன். இங்ஙனம் வாலி அவ் வம்பினைத் தன் போக்கில் போகவிடாமல், தடுத்துப் பார்க்கவும் கம்பர் அமைத்தது, பல உண்மைகளை நம்மனோர்க்கு உணர்த்தவேயாம் என்பது உற்று நோக்குங்கால் உணரக் கிடைக்கிறது.

வாலி அம்பைப் பார்த்தான். அவ்வம்பில் இராமன் என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அச் சொல் எத்தகையது என்பதைக் கம்பர் ஈண்டு உணர்த்த விழைந்தவராய்,

மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே ஏழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்.

என்று பாடி இன்புற்றார். இந்த உண்மையினை உணர்த்துவதுடன் நின்றாரில்லை கம்பர்.

இல்லறத்தில் ஈடுபட்டவர்கள் இல்லக்கிழத்தியர் இல்லாதபோது, எத்தகைய செயல்களையும் ஆராயாது செய்து விடுவர் என்னும் சீரிய கருத்தினையும் ஈண்டே இயம்ப எண்ணி, வாலி இராமனை நோக்கி, இராமன் தன்னை மறைந்து நின்று அம்பு எய்து வருத்தியது அடாது என்பது குறித்து ஏசிப் பேசும் நிலையில், அவன் கூறியதாக,

"கோவியல் தருமம் உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத ஒண்ணு உருவத்தாய் உடைமை அன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னர்த் திகைத்தனை போலும் செய்கை"

என்று பாடினர்.

முதல் இரண்டடிகளில் இராமனது அழகையும், குலப் பெருமையினையும் வாலி வருணித்துக் காட்டிய தன் நோக்கம், உடம்பு அழகு இருக்கின்றதேயன்றி,

உனக்கு உள்ளழகு இல்லையே என்பதையும், நீதி நெறியினின்றும் சிறிதும் பிசகாத சூரிய குலத்தில் தோன்றிய நீ, அக் குலத்துக்கு மாசினைத் தேடித் தந்தனையே என்பதையும் எடுத்து மொழிந்து இராமனை இடித்து உரைப்பதற்கேயாகும்.

இன்னோரன்ன இனிய கருத்துக்களை இவ்வுலகம் அறியவே கம்பர், இராமன் இரண்டாம் தரம் பயன் படுத்திய அம்பிற்கு வேகம் கொடுத்து விடுக்காமல், தடைசெய்து நிறுத்திக் காட்டினர். ஆகவே, இது காகுத்தன் கணையின் தோற்றப் பொலிவு துலங்கும் இரண்டாம் இடமாகும். இனி மூன்றும் இடத்தில் முகுந்தனும் இராமனது முனை அம்பின் சிறப்பைக் காண்போமாக. அந்த இடம் இராவணன் வதை யுண்ட இடமாகும்.

இராகவனும் காகுந்தன் இராவணனது மார்ப கத்தில் தன் அம்பைப் போக்கினன். ஈண்டு அவ் வம்பு செய்த செயல் வியக்கத்தக்க செயலாகும். அவ்வம்பு தாடகையின் உடலில் பாய்ந்தபோது, வேகமாகப் பாய்ந்து வெளியே வந்தாற்போல் வந்திலது. வாலியின் உரத்தில் ஊடுருவத் தொடங் கியபோது, வாலியினுல் தடைப்பட்டது போலத் தடையும் பட்டிலது. பின்னை, யாது செய்தது? இராவணன் மார்பகம் முழுமையும் துளை செய்து விட்டது. இங்ஙனம் செய்ததன் நோக்கம் யாது? இங்ஙனம் துளை செய்தது என்பது எங்ஙனம் புலனு கிறது? இவற்றிற்குரிய விடையாக இராவணன் மனையாள் வாய்விட்டுப் புலம்பிய பாடல்களுள் ஒன்றுன,

வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி உயிர் இருக்கும்
இடம்நாடி இழைத்த வாறோ

கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி

என்னும் பாடல் அறிவித்து நிற்கும்.

ஆகவே, இப்பாடலில் அம்பு பல துளைகள் துளைத்தமைக்குக் காரணம் தெள்ளத் தெளிய உணர்த்தப்பட்டுள்ளது. ஒன்று இராவணன் உயிர் யாண்டுள்ளது என்பதைத் தேடுதற்கும், மற்றொன்று சீதைமாட்டுக் கொண்டிருந்த காதல் உணர்ச்சியாண்டு நிலைத்திருந்தது என்பதற்கும் ஆகும்.

கம்பர் ஆரண்ய காண்டத்தில் இராவணன் சீதையினைத் தன் உளமாகிய சிறையில் அடைத்து விட்டான் என்பதை,

மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நிண்ட
எயிலுடை இலங்கை வேந்தன் இதயமாம் சிறையில்
வைத்தான்

என்று பாடினர்.

இங்ஙனம் இதயம் புகுந்த சீதா பிராட்டியினை விடுதலை செய்ய வேண்டியது கம்பர் கடமையாகி விட்டமையின், அச் சிறைவீடு செய்யும் காரணத்தால் அவனது மார்பு, இதயம் பல துளைகளையுறுமாறு கம்பர் ஈண்டுப் பாடியமைத்து, இராமனது அம்பின் அருஞ்சிறப்பினை எடுத்துக் காட்டுவாராயினர்.

இராமனது அம்பு பல்வேறு இடங்களில் பயன் படுத்தப்பட்டதாயினும், அவ்வம்பின் மாட்சி தோன்றும் இடங்கள் மூன்றாகும். சேக்கிழார் பெருமானாரும் உலகெலாம் என்னும் அருள் வாக்கினைத் தம் நூலில் பல இடங்களில் அமைத்துப் பாடி இருப்பினும்,

முன்னர் எடுத்துக் காட்டப்பட்ட மூன்று இடங்களில் அமைந்த உலகெலாம் என்னும் தொடரையே அறிஞர் பெருமக்கள், யாவர்க்கும் அறிவித்து வருவர். அது போலவே கம்பரும் இராமனது அம்புக்குப் பல இடங் களில் வேலை தந்திருப்பினும், மேலே கூறிய மூன்று இடங்களில்தான் அதன் சிறப்பை எடுத்துக் காட்டித் தாமும் சேக்கிழாரை யொட்டி நடந்தமையினை ஊகித் துணர்வார்க்கு உணர்த்துவராயினர். ஆகவே, தமிழ் மக்களாகிய நம்மனோர் கடமை இவ்விரு நூற்களையும் நன்கு ஓதி அவற்றின் கவி இன்பங்களையும் துய்த் தலைபயன் தருவது ஆகும்.

# 9. சிலம்பையாத்த சீர்சால்புலவர்

சிலம்பையாத்த சீர்சால்புலவர் யாவரோ என ஐயுறவேண்டா. அவரே தண்டமிழ் மொழியில் தலை சிறந்து விளங்கும் ஐம்பெருங் காவியங்களில் ஒன்றான **சிலப்பதிகாரம்** என்னும் சீரிய நூலை யாத்த இளங்கோ அடிகளார் ஆவார். அன்னாருடைய வாழ்க்கை வரலாற்றைச் சிறிது ஈண்டுச் சிந்திப் போமாக.

திருவள்ளுவர் தம் பொருட்பாலில் குடிமை என்னும் இயலில்

> ''வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பிற் தலைப்பிரிதல் இன்று.''

என்னும் குறளைப் பாடியுள்ளார். அன்னதற்கு உரை கூறிய பரிமேலழகர், தம் விளக்கவுரையில், ''பழமையாவது தொன்று தொட்டு வருதல்; அது சேர சோழபாண்டியர் என்பது போல ஆதிகாலந் தொடங்கி மேம் பட்டுவருதல் என்பதாம்'' என்று கூறியுள்ளார். இதனால் தமிழ்நாட்டுப் பழங்குடி மூவேந்தர்தம் குடி என்பது புலனாகிறது அன்றோ? இப் பழங்குடிகளுள் ஒன்றாகிய சேரர் குடி, சிறப் புடைய குடிஎன்பது சேர, சோழ, பாண்டியர் என்னும் வைப்பு முறையில், முதன்மைக்கண் வைத்துப் பேசப்பட்டு வருதலாலும், சேரர்கட்கு வானவர் என்னும் சொல் இலக்கியங்களில் பெய்யப் பட்டிருத்தலாலும், ஒல்காப் பெருமைத் தொல் காப்பியனாரும் மூவேந்தரது மலர்களைக் குறிக் கையில், ''போந்தை, வேம்பே ஆரெனவரூஉம் மாபெருந் தானையர்'' என முதற்கண் சேரர் மாலையை

வைத்திருப்பதனாலும் ஒருவாறு உணரலாம். சோழ பாண்டியர்கள் தம்மை, முறையே சூரிய மரபினர், சந்திர மரபினர் என்று கூறிக் கொள்ளுதற்கேற்பச் சேரர்கள் தம்மைத் தீக்கடவுள் மரபினர் எனச் செப்பிக்கொள்ளும் சிறப்பு வாய்ந்தவர்கள். இதனை **வில்லியார்** தம் பாரதத்தில், இவன் "**செந்தழலோன் மரபாகி** ஈரேழுலகம் புகழ்சேரன்" என்று குறிப்பிட்டிருத்தல் கொண்டும் நன்கு உணரலாம்.

இச் சேரமரபினர் பாரத காலத்திலும் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்தவர்; கௌரவ பாண்டவர்கள் போரிட்டபோது அவர்கள் படைகள் சோர்வுறு திருக்க உண்டி கொடுத்து ஊக்கமூட்டிய உதியஞ் சேரலாதன் செயலால் இதனைத் தெள்ளெனத் தெளியலாம். இதனைப் **புறநானூறு** என்னும் புராதன நூல் "ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்று கூறி மகிழ்கிறது. சேரர் புகழ்களையே செப்புதற்குரிய நூல் **பதிற்றுப்பத்து** என்னும் பெயரால் இன்றும் இருப்பதிலிருந்தும் இம் மரபினர் அருமையையும் பெருமையும் நன்கு அறியலாம்.

இன்னோரன்ன சீரும் சிறப்பும் வாய்ந்த சேரர் குடியில் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் மன்னன் இற்றைக்குச் சற்றேறக்குறைய 2000 ஆண்டுகட்கு முன்னர், சேரநாட்டு மன்னனாய்த் திகழ்ந்துவந்தனன். இமய வரம்பன் என்னும் அடைமொழி, இப்பெருவேந்தனது வடநாட்டு வெற்றியை அறிவிப்பதாகும். இதனால், இமயம் வரை சென்று ஆண்டுளாரை வென்று மீண்டு அன்னதற்கு அறிகுறியாகத் தன்குலக் கொடியாகிய விற்பதாகையினை இமயத்து நிலை நிறுத்தி மீண்டான் என்பதும் புலனாகிறது.

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே"

எனப் பதிற்றுப்பத்து நூல் கூறுவதிலிருந்து உணர்ந்துகொள்ளலாம்.

நெடுஞ்சேரலாதனுக்கு இரு இல்லக்கிழத்தியர் வாய்த்தனர். ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை என்பவள். மற்ருெருத்தி வேளாவிக் கோமானுனை பதுமன் என்பான் மகள். இவள் பெயர் இன்னது என்பதை அறிதற்கில்லை. நற்சோணை ஈன்ற மக்களே செங்குட்டுவனும், இளங்கோ அடிகளும் ஆவார். பதுமன் மகள் பெற்ற மைந்தர்கள் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் ஆவார். இவ்விரு மைந்தருள் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரன் அரச மரபிற்கேற்ற அருஞ்சிறப்புடன் வளர்க்கப்பட்டு, அரியாசனம் ஏறும் நன்ஞள் வந்துற்றபோது, இவன் தலையில் சூட்டுதற்குரிய கண்ணியும் முடியும் பகைவேந்தரால் களவாடப் பட்டமையின், முடிசூட்டற்கென அமைத்த நல்ஓரை தவருதிருக்க, உடனே அவ்விரண்டிற்கும் ஈடாகக் களங்காயால் ஆகிய கண்ணியும், நாரால் சமைத்த முடியும் இவனுக்குச் சூட்டப்பட்டு அரியாசனத்தில் அமர்த்தப்பட்டான். இக் காரணத்தால் களங் காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என இவன் அழைக்கப் படுவாஞன். இவனது தம்பியான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் நன்முறையில் வளர்க்கப்பட்டு, நல்லரசு நடாத்தும் நன்னிலை பெற்ற காலத்துச் செய்த வீரச்செயல்கள் பல வாகும். அவற்றுள் ஒன்று நண்ணுர் ஆடுகளைக் கவர்ந்ததாகும். இவன் அவர்களை வென்று அன்னர் கொண்டு சென்ற தகரினங்களைத் தந்து தன்

தொண்டிமாநகரில் சேர்ப்பித்த காரணத்தால் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் எனப்பட்டான்.

இளங்கோ அடிகளாரின் திருத்தாதை நெடுஞ் சேரலாதன் என்பதும், அடிகளாரின் தமையன் செங்குட்டுவன் என்பதும் முன்னர் அறிவிக்கப் பட்டன. நெடுஞ்சேரலாதன் சிறந்த போர்வீரன். இவன் அஞ்சாநெஞ்சம் படைத்த ஆண்மையாளன் என்பது வேல் பல் தடக்கைப் பெருவிறல் கிள்ளி யுடன் போரிட்டமையில் இருந்து உணரலாம். மேலும், இவன் சிறந்த சிவ பக்தன் என் பதும் தெரிகிறது. அவ்விறைவனுர் திருவருள் பெற்றே தன் முதல் திருமகனை செங்குட்டுவனைப் பெற்றெடுத்தவன் என்பதை "செஞ்சடை வானவன் அருளினில் விளங்கவஞ்சித் தோன்றிய வானவ" எனச் சிலப்பதிகாரத்துக் கால்கோட் காதையடி களால் காணலாம். இதனைமேலும் அறுதியிட்டு உறுதியாகக் கூறவேண்டுமானுல், "ஆனேறூர்ந் தோன் அருளில் தோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவன்" என அதே நூலில் வரும் வருந்தரு காதையின் அடிகளால் அறிந்துகொள்ளலாம். இச் செங்குட்டுவனுக்குப் பின்னர் பிறந்த திருமகனுரே இளங்கோ அடிகள் ஆவார். இவர் இயற்பெயர் இன்னதென அறியக்கூடவில்லை. இவரைச் 'சேர முனி' என அடியார்க்கு நல்லார் அழைப்பர். இவர் அரச மரபிற்கேற்ப இளவரசுப் பட்டம் எய்துதற் குரியர் என்னும் காரணம் பற்றியும், செங்குட்டுவன் தம்பி எனும் முறைமை பற்றியும் இளங்கோ என அழைக்கப் பட்டிருக்கலாம் என்பது யூகித்தற் குரியது. ஆனுல், இவர் அரசும் பெற்றிலர்; இள வரசு பட்டமும் அடைந்திலர். ஆனுல் துறவுகொண்ட தூயராய்த் துலங்கினுர்.

இளங்கோ துறவு பூண்டமைக்குக் காரணமும் உளது. அதாவது, நெடுஞ்சேரலாதன் தம் அத்தாணி

மண்டபத்தே அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் ஆகிய ஐம்பெருங் குழுவும், கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் ஆகிய எண் பேராயமும் புடைசூழத் தம் மைந்தர்களான செங்குட்டுவனும் இளங்கோவும் இருமருங்கிருக்கச் செம்பியரும் தென்னரும் தன்னடி போற்றும் தகைமையோடு இனிது வீற்றிருந்தனன். அப் போழ்தத்து ஆண்டு ஒரு நிமித்திகன் போந்தனன்.

நிமித்திகன் என்பான் சோதிடனாவான், சோதிட வல்லுநர் நம் நாட்டில் பலர் இருந்திருக்கின்றனர். சோதிடரைக் கணியன் என்று கனனித் தமிழ் கழறு தல் உண்டு. அப்படிக் கணியராய் இருந்த புலவர் ஒருவரும் "கணியன் பூங்குன்றனார்" என அழைக் கவும் படலானார். நம்மவர் சோதிடக் கலையின் நுண்ணறிவை நம் தமிழ் நூல்களில் பலபடக் காண லாம். 'மகத்தில் புக்கதோர் சனியெனக் கானாய்' என்பது ஆளுடை நம்பிகளது மொழியாகும். இத் தகைய கலையில் வல்லான் ஒருவன் தன் அவைக்கு வரக்கண்ட அண்ணல் நெடுஞ்சேரலாதன், நல்வரவு கூறி, நல்லிருக்கை ஈந்து அமரச் செய்தனன். அறிவுடைய கணியர்கள் கணக்கிட்டுத்தான் சோதி டப்பலன் உரைத்தற்குரியர் என உரைத்தற்கில்லை. ஒருமுறை ஒருவரை ஏற இறங்கப் பார்த்த மாத்தி ரையில் பலனைக் கூறவல்ல அத்துணை நுண்ணறிவு படைத்தவர்கள். அவர்களுள் நெடுஞ்சேரலாதனைக் கண்டு செல்ல வந்த கணியன், கைகேர்ந்த அனு பவன் வாய்ந்த நிமித்திகன் ஆதலின், அரசனுக்கு இருமருங்கினும் அமர்ந்த இரு பெருங் காளையர் களான செங்குட்டுவனையும் இளங்கோவையும் உற்று நோக்கினன். முன்னவன் மூத்தவன் என் பதையும், பின்னவன் இளையவன் என்பதையும்

உணர்ந்துகொண்டனன். வந்த நிமித்திகனது வாட்கண் பார்வை இளங்கோவையே கூர்ந்து கவனிக்கத் தூண்டியது. அதனால், மீண்டும் ஒருமுறைக் கிருமுறை இளங்கோவை ஏற இறங்கப் பார்த்தனன். பார்த்து முடிந்தபிறகு, உள்ளதை உள்ளவாறு உரைக்கும் உரம் படைத்திருந்த காரணத்தால், சேர மன்னனை நோக்கி, "மன்னர் பெரும! நும் மருங்கு வீற்றிருக்கும் இருவரும் உம் அருமைத் திருமக்கள் என்பதை அறிகின்றேன். அரசமரபின் முறைமைக்கு ஏற்ப, உமக்குப் பின்னர் அரசுக்கட்டில் ஏறுதற்குரியன் மூத்த மகன் என்பது முறைமையேயானாலும், அப்பதவி ஏற்றற்குரிய இயல்புகள் அனைத்தும், நும் இளைய மகனுக்கே இயைந்துள்ளன. மூத்த மகன்பால் அரசு பெறுதற்குரிய தோற்றப் பொலிவு காண்டற்கில்லை. இஃது என் கலையில் கண்ட உண்மைக் கருத்தேயாகும்" என்று நுவன்றனன்.

இங்ஙனம் நிமித்திகன் கூறக் கேட்டபோது, செங்குட்டுவன் உள்ளத்தில் வருத்தம் மிக்கது. அவ்வருத்தம் புறத்தும் தோற்றம் அளிப்பதுபோல் முகத்தில் தோன்றிய ஏக்கம் காட்டியது. 'நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பது பொய்யாமொழியன்றோ! என்றாலும், செங்குட்டுவன் அதனை நன்கு வெளிப்படுத்தா வண்ணம் வீற்றிருந்தான். இளங்கோ மட்டும் இதனை உணர்ந்துகொண்டனர். முன்னத்தின் உணரும் மூதறிவுடையார் அல்லரோ அவர்! பின்னர் நெடுஞ்சேரலாதன் நிமித்திகனுக்குச் சன்மானம் ஈய அவனும் வெளியேறினன். அவன் சென்ற பின்றை இளங்கோ அடிகள் நன்கு சிந்தித்து "முன்னவன் இருக்கப் பின்னவன் அரசு பெறுதல், முறைமை அன்று" என்பதை உணர்ந்தனர். "தாம் அரண்மனையில் இருப்பின் தம் அண்ணனை செங்குட்டுவன் உள்ளம் தம்மைக் காணுந்தோறும்

வருந்தவும் கூடும். இந்தத் துயரம் நம்மால் அவருக்கு ஏன் எய்துதல்வேண்டும்? நாம் துறவு பூண்டு வெளியேறின், அரசபாரமும் நம்மை அடையாது. அண்ணன் மனமும் அமைதியுறும்'' என்று எண்ணியவராய்த் துறவு நிலையை மேற்கொண்டு வஞ்சிமாநகர்க்குக் கீழ்த்திசைப் பாங்கரில் உள்ள அருகன் கோட்டத்தை அடைந்தனர். இந்த உண்மையை இளங்கோ அடிகளே தம் திருவாய் மலரால் தேவந்தி என்பாள் மீது மருள் ஏறப்பெற்றபோது அவள் கூறுவதுபோலச் 'செங்குட்டுவன் தன் செல்லல் நீங்கப் பகல் செய்வாயில் படியோர் தம்முன் அகலிடம் பாரம் அகல நீக்கி' என அறைந்துள்ளார். இங்ஙனம் அரசப் பற்றை அறவே துறந்து வெளி வந்த பின்பே இவர் 'அடிகள்' என்று அழைக்கப் பட்டார் என்க.

இளங்கோ அடிகளார் மேற்கொண்ட சமயம் இன்னதென நாம் அறிதல் வேண்டும் இவருடைய தந்தையான நெடுஞ்சேரலாதன் தன் மூத்த மகனை செங்குட்டுவனைச் சிவபெருமான் அருளால் பெற்றெடுத்தான் என்பதை முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். ஆகவே, இளங்கோவின் தந்தையார் மேற்கொண்ட சமயம் சைவம் என்பது தெள்ளெனப் புலனாகிறது. இவனது மூத்த மகனை செங்குட்டுவனும் சைவசமயப் பற்றும் சார்பும் உடையவன். இவன் தன் தந்தையார் சிவபெருமானை வணங்கி அப்பிரானது திருவருட் பேற்றால் தோன்றியவன் என்னும் காரணங்கொண்டு அன்று, இவன் சைவ சமயப்பற்றுடையவன் என்பது. இவனது சைவப் பற்று இவன் வடநாட்டுக்குப் புறப்பட்டபோது நிகழ்ந்த நிகழ்ச்சியாலும் அதனை நன்கு உணரலாம். அதாவது, ''இவன் வடதிசை நோக்கிப் புறப்படுகையில், முக்கண் மூர்த்தியை முறையாக வணங்கினன். அம்மூர்த்தியின் இணையார் திருவடிகளைத் தன்

சென்னி மீது தரித்துக் கொண்டனன். பின் தன் அரசு யானை மீது இவர்ந்தனன். அந்த அமயத்து ஆடகமாடமாம் திருவனந்தபுரத்தில் திருப்பள்ளி கொண்டுள்ள திருமாலின் பிரசாதமாகிய துளசி மாலையைச் சிலர் கொண்டுவந்து இவனை வாழ்த்தி வணங்கிக் கொடுக்க, அதற்றை அன்புடன் பெற்றுத் தன் தலையில் சூட்டிக்கொள்ளாமல், தன் திருத் தோளில் தாங்கிச் சென்றனன்" என இளங்கோ அடிகளே கால்கோட் காதையில் கழறியுள்ளார். சென்னியில் தாங்காது, மணித்தோளில் தாங்கிய தற்கு அவரே காரணங் காட்டுகையில், "செங்குட்டு வன் சென்னி சிவனுருடைய திருவடி சூட்டப்பட்டு விட்டமையின், அங்குத் திருமால் சேடம் இருத்தல் முறையன்று எனக் கருதித் தன் திருத்தோளில் தாங்கிச் சென்றனன்" என்றார். இக் கருத்தினை :

" ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கினன் "

என்னும் அடிகளால் நன்கு உணரலாம். தந்தையும் தமையனும் வழிபட்டு வந்த சைவ சமய மரபில் தோன்றியவர் இளங்கோ அடிகள். ஆகவே, இளங்கோ அடிகளும் சைவராகத்தான் இருக்க வேண்டும் என அறுதியிட்டு உறுதியாகக் கூறி விடலாம். ஆனால், அவ்வாறு கூறிவிட இயலாது. முன்னோர் சமயத்தையே பின்னோர் மேற்கொள்ள வேண்டும் என்னும் கட்டுப்பாடும் நியதியும் இல்லை. எனவே, இளங்கோ அடிகளும் சைவசமயத் தைச்சார்ந்தவர் என்பதைச் செப்புதற்கு இடம் இல்லை. இவர் துறவு பூண்டதும், " குணவாயிற்

கோட்டத்து அரசு துறந்திருந்தனர்'' என வரும் அடிகளில், கோட்டம் என்பதற்கு அருகன்கோயில் என அடியார்க்கு நல்லார் பொருள் கூறியுள் ளார். அருகதேவன் சமணசமயக் கடவுள். ஆகவே, இளங்கோ அடிகள் சைனசமயத்தைத் தழுவின வராக இருக்கலாம். இந்த ஒரு காரணம் மட்டும் இவர் சைனசமயத்தவர் என்பதை நிலைநாட்ட வல்லது என்று சொல்லுதற்கும் இல்லை. இவர் எழுதியுள்ள சிலப்பதிகாரத்தில் சைனசமயக் கொள்கைகளையும் கருத்துக்களையும் ஆங்காங்கு மிகுத்துச் சொல்லி இருத்தலின், இவர்சைனர் எனச் சாற்ற இடந்தருகிறது. இதனை நாடுகாண் காதை யில், ''கண்ணகி நடந்து சொல்லுங்கால் கீழேஉள்ள உயிர் இனங்களை மிதிக்கவும் நேரும், ஆகவே அறிந்து நடத்திசெல்ல வேண்டும் எனக் கோவலனிடம் கவுந்தி அடிகள் கூறுவதாக உள்ளவை இளங்கோ சைனசமய சீவகாருண்யக் குறிப்பை உணர்த்தி நிற்கின்றன. ஆகவே, இளங்கோ அடிகள் சைன சமயத்தைத் தழுவியவர் என்பதில் எள்ளவும் ஐய மில்லை என்க. இதனைமெய் யெனவே கூறலாம். இதனால், இவர் தம் முன்னோர் மேற்கொண்டவைதிக சமயத்தை இழிவாகக் கருதியவர் என நினைக்க வேண்டா. பிற சமயச் சார்பாகப் பேசும் சமயங் கிடைக்குந்தோறும் சிறப்புறவே செப்புகிறார்; பாடு கிறார். சிவபெருமானுக்கு முதன்மைத்தானமே ஈந்து மொழிகிறார். ''நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும், உவணச் சேவல் உயர்த்தோன் நிய மும்'' என மொழிகையில் இவ்வுண்மையை உணர லாம். திருமாலைப்பற்றிச் செப்புகையில் ''திருமால் சீர்கேளாத செவியென்ன செவியே'' என்று உள்ளங் குளிர உரைத்துள்ளார்.

இனி இளங்கோ அடிகளார் காலத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்போமாக. இவர் கடைச்சங்க காலத்

தவர் என்பது பலர் கொள்கை. அக்கடைச்சங்க காலத்தின் இறுதிக்காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பதும் பலர் கொள்கை. ஆனால், கடைச்சங்கத்தின் காலம் கி. பி. ஐந்தாம்நூற்றாண்டே எனக் கூறுவோராகவும் ஒரு சிலர் உளர். ஆகவே, இளங்கோ அடிகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு புலவரா? அன்றி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு புலவரா? என்பதை இப்பொழுது நிலைநிறுத்த வேண்டும். "கடைச்சங்கம் இரண்டாம் நூற்றாண்டாக இருப்பினும் சரி, அன்றிக் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாக அமையினும் சரி. இளங்கோ அடிகள் கடைச்சங்க காலப் புலவர் வரிசையில் அமைத்தற்குரியர் அல்லர்; அப்படி அமைத்தற்குரியராயின், சங்க காலத்துத் தொகை நூல்களுள் ஒன்றிலேனும் இவர் பாடிய பாடலாக ஏதேனும் ஒன்று காணப் படவேண்டும்" என்று வாதுபுரிபவரும் சிலர் உளர். இக்கருத்து வேறுபாடுகள் ஒருபுறம் இருந்தாலும், இவர் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பதற்குரிய சான்றுகள் பொருத்த மானவையாகக் காணப்படுகின்றன.

இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதி காரத்தில் காணப்படும் கானல் வரி என்னும் பகுதி யில் உள்ள பாடல்கள் சிலவற்றைத் திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள் இயற்றித் தந்த இறையனார் அகப்பொருட்கு உரை வகுத்த மதுரைக் கணக் காயனார் மகனார் நக்கீரனார் உரை கூறுகையில், மேற் கோளாகக் காட்டிச் சென்றுள்ளார். இவ்வெடுத்துக் காட்டே யன்றி நம்புலவர் பெருமானாரின் தமை யனை சேரன் செங்குட்டுவன் கற்புக்கடம் பூண்ட கண்ணகி தேவிக்குக் கோயில் அமைத்து விழாக் கொண்டாடினன் என்றும், அவ்விழாவைக்கொண்டா டியபோது இலங்கைவேந்தனும் கயவாகு என்பானும்

உடன் இருந்தான் என்றும் வருந்தருகாதையில் இளங்கோவடிகள் கூறியுள்ளார் :

"கடல்சூழ் இலங்கை கயவாகு வேந்தனும்
எந்நாட் டாங்கண் இமைய வரம்பனின்
நன்னாள் செய்த நாள்அணி வேள்வியுள் "

என்னும் அடிகளில் இவ்உண்மையைக் காண்க. இங்ஙனம் உடன் இருந்து கண்ணகி விழாவைக் கண் குளிரக் கண்ட கயவாகு தன்னாட்டகத்தும் அக் கண்ணகிக்குத் திருத்தளி அமைத்துத் திருவிழாக் கொண்டாடினன் என்பதை இந்நூல் பதிகத்தில் " அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான், நங்கைக்கு நாள்பலி பீடிகை கோட்டமுந் துறுத்து ஆங்கு அரந்தை கெடுத்து வரந்தரும் இவள் என ஆடித் திங்கள் அகவையின் ஆங்கு ஓர் பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப மழைவீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடா யிற்று" என்று கூறப்பட்டுள்ளது.

இக்கயவாகு இருந்த காலம் சற்றேறக்குறைய 1820 வருடங்களுக்கு முன்பு என்பது இலங்கைச் சரித்திரமாகிய மகாவம்ஸம் என்னும் வரலாற்று நூலால் அறிகிறோம். கயவாகுவுக்கும் செங்குட்டு வன் இளவலாகிய இளங்கோ அடிகளார்க்கும் தொடர்பு இருந்திருக்கவேண்டும் அன்றோ? எனவே, இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டே என் பது வெள்ளிடை மலையென விளங்குகிறது.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைத் தவிர்த்து வேறு நூல் செய்திருப்பதாகத் தெரிய வில்லை. இவர் இந்நூலையும் தாம் துறவு பூண்ட பின்பே யாத்திருப்பதாகத் தெரிகிறது. இவர் யாத்த இச் சிலப்பதிகார கதை இவர் காலத்தின் கதையாகவும் தெரியவருகிறது. இவர் இந்நூலைச்

சீத்தலைச் சாத்தனார் வேண்டுகோட்கிணங்கிப் பாடியுள்ளார் என்பதும் நமக்குப் புலனாகிறது. இப்படிப் பாடுதற்குக் காரணமாக இருந்தவர் முன்புதான், இவர் இந்நூலையும் அரங்கேற்றி வைத்தனர் என்பதும் தெரியவருகிறது. "உரைசால் அடிகள் அருளக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" என்பதும் சிலப்பதிகாரப் பதிகத்துக் காணும் குறிப்பாகும்.

இளங்கோ அடிகளார், தாம் சேர மரபினராய் இருந்தும், தாம் மரபின் ஆண்மையும் அரசும் இன்னோரன்ன ஏனைய சிறப்புக்களையும் மிகுதிப்படுத்திக் கூறுதற்குரிய வாய்ப்புப் பெற்றவராக இருந்தும், தாம் துறவு பூண்டு தூயராய் விளங்கிய காரணத்தால், நடுநிலை பிறழாது முடிவுடை மூவேந்தர்க்கும் தாம் இயற்றும் நூல் உரித்தாதல் வேண்டும் என்னும் காரணத்தால் தம் நூலைப் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என வகுத்துக்கொண்டு ஒவ்வொரு மன்னரது சீரும் சிறப்பும் தோன்றும் இடங்களில் நன்கு பாடிச் சென்றிருப்பதைப் படிக்குந்தோறும் யாரும் பரவசம் உறுதல் இருக்க இயலாது; இவரது நடுநிலைமைப் பண்பையும் போற்றாமல் இருக்க இயலாது.

இளங்கோ முத்தமிழ்க் கல்வியில் மூதறிவுடையவர். இதனால்தான், இவருடைய நூலாகிய சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காவியமாய் இவ்வுலகில் நிலவி வருகிறது. இளங்கோ அடிகளார் புலவர் பெருமக்களால் பெரிதும் பாராட்டப்படுபவர். சுப்பிரமணிய பாரதியார், தாம் அறிந்த புலவர்களாக எடுத்துப் பேசிய மூவர்களுள் இளங்கோவடிகளார்க்கு இடந் தந்து பாடி இருத்தலை நன்கு சிந்திக்கவும். "யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; இது உண்மை

வெறும் புகழ்ச்சியில்லை" என்று உயர்த்திப் பாடு வாராயினர். இளங்கோ அடிகள் முத்தமிழ்த் துறையிலும் மூதறிவு படைத்தவர் என்பது இவர் யாத்துள்ள சிலப்பதிகாரத்து யாண்டும் காணலாம். இதனால்தான், இந்நூலும் இயல் இசை நாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுளாகக் கூறப்படுகிறது. நாடக உறுப்பினைப் பெரிதும் பெற்றுத் துலங்குதலின், நாடகக் காப்பியம் எனவும் நவிலப்பெறும் நன்னயம் வாய்ந்தது. இந்நூல் தன்னகத்து இசைப் பாட்டும், உரைப்பாட்டும் இடையிடையே விரவப் பெற்று வருதலின், உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளெனப் பகரவும் படுகிறது. இந்நூல் தன்பால் உயரிய நீதிகளைக் கொண்டு விளங்குவது. அந்நீதிகளாவன: "அரசியல் பிழைத்த அரசர்கள் அறக்கடவுளாலேயே அழிக்கப்படுவர். ஊழ்வினை அதற்குரியவனை எப்பெற்றியானும் தேடி அடைந்து, அவனை நுகர்விக்கும். கற்புடைப் பெண்டிரை உயர்ந்தோரும் ஏத்துவர்" என்பன. இன்னோரன்ன சிறப்பியல்புகள் இதனிடத்து அமைந்திருத்தலின், இதனை "நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்" எனப் பாரதியார் செப்பிச் சென்றனர். இந்நூலுக்கு ஈர் உரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அடியார்க்கு நல்லார் உரை. மற்றொன்று அரும்பதவுரை. இவ்விரு உரைகளினால் 'பொன்மலர் நாற்றம் உற்றாற்போல்' இந்நூலின் மாண்பு மேலும் சிறப்புற்றுக் காணப்படுகிறது. அடியார்க்கு நல்லார் உரையால் பல இறந்துபட்ட நூற்களின் பெயர்களையும் பாடல்களையும் அறியும் பேறு நாம் பெற்றுள்ளோம். இன்னோரன்ன நூல்கள், வெண்டாளி, முறுவல், பெருநாரை, பெருங்குறிஞ்சி, பெருங்குருகு, பாசாண்டம், பரதம், பரதசேனாபதியம், பஞ்சமரபு, பஞ்சபாரதீயம், நூல், செயிற்றியம், சயந்தம், குருகு, குணநூல், களரியாவிரை, கனநூல், இசை நுணுக்கம், அணியியல் முதலியன. இதுபோது

திரு. பண்டித வேங்கடசாமி நாட்டார் அவர்களின் உரையும் வெளி வந்துள்ளது.

இதுகாறும் கூறியவற்ருல், ஆசிரியர் அருமையையும், அந்நூலுக்குரிய உரையின் சிறப்பினையும் கண்டோம். இனிச் சிலப்பதிகார நூல் நயம் ஒன்றை மட்டும் இங்குக் காட்டுவோமாக.

இளங்கோ அடிகளார் கதைப்போக்கிற்கேற்பக் கருத்துக்களைக் கவினுறச் சொல்லிச் செல்லும் திறன் பாராட்டற் குரியது. பாண்டியன் நெடுஞ்செழியன் ஆய்ந்தோய்ந்து பாராமல் கோவலனைக் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கினன். அதனுல், நீதிநெறி தவருது செங்கோல் செய்துவந்த பாண்டியர் குடிக்கே பெரும் பழி உண்டாயது. வளையாத செங்கோல் கொடுங் (வளைந்த) கோலாயது. அப்படிக் கொடுங்கோலானதை நிமிர்த்துச் செங்கோல் ஆக்கவேண்டியது தன் பொறுப்பென உணர்ந்த செழியர் பெருமான், அதற்குப் பரிகாரமாகத் தன் உயிரையே ஈந்தனன். இந்த இடத்தை இளங்கோவடிகள் எத்துணை அழகுறக் கூறியுள்ளார் என்பதைப் படிக்குந்தோறும், படிக்குந்தோறும் கவிஞரின் புலமைத் திறன் நன்கு புலனுகிறது.

" வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது "

என்னும் இவ்வீர் அடிகளே முன்பு விளக்கப்பட்ட பொருட் சிறப்புப் பொதிந்துள்ள அடிகள். இவ்வாறு சுவை பயக்கவல்ல தொடர்களும் அடிகளும் சிலப்பதிகாரத்தில் எண்ணில் அடங்காதனவாக உள்ளன. அவற்றை நும் அறிவு கொண்டு அலசி எடுத்து அறிந்து இன்புறுவீர்களாக. ஈண்டுப் பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் போல ஒன்றே காட்டப்பட்டது.

# 10. இனிய தமிழும் இஸ்லாமியர்களும்

பசுந்தமிழ் பண்டும் இன்றும் என்றும் ஏற்றம் பெற்று வந்தமைக்கும், வருகின்றமைக்கும், வரப் போகின்றமைக்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றுள் தலையாய ஒன்று, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர்கள் தாம் தாம் எம்மதத்தினராயினும், தமிழ் மொழியைப்பேணி வளர்த்திருக்கின்றமையே என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம். இந்நோக்கங்கொண்டு உழைத்திலரெனில், நாம் நம் பழம் பெரு இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலான சங்க மருவிய நூற்களைப்பெற்று இருக்க இயலாது; பழம்பெருமையையும் அறிந்திருக்க இயலாது. இச்சங்கமருவிய நூற்களைத் தந்தவர்கள் ஒரு குலத்தவர்கள் அல்லர். ஒரு சமயக் கொள்கையினர்கள் அல்லர். வெவ்வேறு குலத்தவர்களும் சமயத்தவர்களுமே ஆவர். அன்னார் அமைத்த இலக்கிய அணிகலன்களையே தண்டமிழ் அணங்கு தாங்கி நிலவி வருகின்றாள். இங்ஙனமே தமிழ் மகட்குப் பணி பூண்ட பிற்கால இஸ்லாமியர்களும் எம்முறையில் தம் கடனை ஆற்றியிருக்கின்றனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் ஒருபுடை நோக்கமாகும். பற்பல தமிழ்ப் புலவர்கள் இஸ்லாமியர் இனத்தில் பெருகத் தொடங்கினர். இஸ்லாமிய சமூகத்தவரைத் தமிழ் மொழி தன் இனிமைப் பண்பினால் ஈர்த்துவிட்டது. இதனால்தான் தாமாகக் கவிபுனையும் நிலையிலும் பல புலவர்கள் அச்சமூகத்தில் தோன்றத் தொடங்கினர்

இங்ஙனம் புலவர் திலகங்களாக இருந்தவர்களின் வரலாற்றுக் குறிப்பினையும் அன்னார் யாத்த

நூற்கள் சிலவற்றினையும் ஈண்டுக் குறிப்பிட்டால், உண்மை நன்கு புலனாகும்.

சவ்வாதுப் புலவர் என்பார் அரேபியாவில் இஸ்லாமியர்களுக்குச் சிறந்த யாத்திரைத் தலமாக உள்ள **மெதினாமீது ஓர் அந்தாதியும், முஹ்யித்தீன் ஆண்டவர்** மீது ஒரு **பிள்ளைத்தமிழ்** நூலும் பாடியுள்ளார். இவ்விரு நூற்களே அன்றிச் சில தனிப் பாடல்களும் இவரால் பாடப்பட்டுள்ளன. அவற்றைக் காண விழைவார் தனிப் பாடற்றிரட்டில் கண்டு உணர்வார்களாக. இவற்றிேனாடு இவர் காலத்துச் சேதுபதி மகாராஜா வைசூரியால் வருந்திய காலத்தில் அவ்வைசூரி நீங்கும் பொருட்டு, இராஜராஜேஸ்வரியை வேண்டி ஒரு நூல் பாடியதாகவும் அறிய வருகின்றது. அதுவே, **இராஜ ராஜேஸ்வரி பஞ்ச இரத்தின மாலை** என்பது. இதன் பொருட்டு இவர் அம் மகாராஜாவால் சுவாத்தான் என்னும் நிலத்தையும் முற்றூட்டாகப் (வரியிலா நிலமாக) பெற்றதாக உணர்கிறோம்.

முகம்மத் இப்ராஹிம் என்னும் பெயருடைய பெரியாரும் தமிழ்ப் புலமை மிக்கவராய்த் திகழ்ந்துள்ளார். இவர் வண்ணங்கள் பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்தவர். அதன் பொருட்டு இவர் தம் பிள்ளைத் திருநாமமாகிய முகமத் இப்ராஹிம் என்னும் இயற்பெயர் மாறி, வண்ணக் களஞ்சியப் புலவர் என்றே புலவர் பெருமக்களால் புகழப்பட்டு வரலானார். இன்னார் பிறந்த ஊர் மதுரைக்கு அண்மையதான மீசல் என்னும் ஊர் ஆதலின், மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர் என்று சுட்டப்பட்டும் வந்தனர். பல வண்ணங்களே அன்றி, **முஹ்யித்தீன் புராணமும்** பாடியுள்ளார். இதனை நாகூர் மசூதியில் அரங்கேற்றம் செய்தனர். அக்காலங்களில் பல தடைகள் எழுந்தன. அவற்றிற் கெல்லாம் தக்க

விடைகளை அமைதியாக ஈந்தனர். பல்லாண்டு நில உலகில் வாழ்ந்தனர். இவரது இறுதிக்காலம் எண்பத்து ஒன்பது எனில், இவரது முதுமையை உணர்ந்து கொள்ளலாம்.

அலியார் புலவர் என்பாரும் இஸ்லாமிய இனத்துப் புலவரே. இவர் **இந்திராயன் படைப்போர், இபுனியாண்டான் படைப்போர்** என்னும் நூல்களைச் செய்திருப்பதாக அறிகிறோம். இவ்விரு நூற்களும் எவரும் வெருக்கொளத்தக்க அரக்கப் போரை வருணித்திருப்பனவாகும்.

முகம்மத் ஹுசேன் என்பாரும் ஒரு நூல், தமிழ் மொழியில் யாத்துள்ளனர். அது **பெண் புத்தி மாலை** என்பது.

மதாறு சாகிபுப் புலவர் **மிதிறுசாநா** என்னும் தமிழ் நூல் பாடியிருப்பதாகவும் அறிகிறோம்.

எவரும் மறக்கமுடியாத தமிழ்ப் பெரும் இஸ்லாமிய இனத்துக் காவியப் புலவர் உமறுப் புலவர் ஆவார். இன்னுர் பாடிய நூலே சீருப் புராணம் என்னும் சீரிய புராணம் ஆகும். இச்சீருப் புராணமே முகம்மது நபியின் வரலாற்றையும் அவரது வீரதிரச் செயல்களையும் அறிவிப்பதாகும். நவ ரசங்களும் அமையப்பெற்ற இஸ்லாமிய இனத்துத் தமிழ்க் காவியம் இதுவே. காவியப் பண்பு அத்துணையும் அமையப் பெற்றுக் கவினுற விளங்கும் காவியமும் இதுவே.

மஸ்தான் சாயபு என்பாரும் மாபெருந் தமிழ்ப் புலவர். தாயுமானவரைப் போன்ற தகைமை படைத்தவர். அவர் யாத்த நூல் போலவே தாமும் ஒரு நூலைப் பாடியவர். தாயுமானவர் பாடிய நூல் எங்ஙனம் தாயுமானவர் பாடல் எனப் பெயரினைப்

பெற்றுள்ளதோ, அங்ஙனமே இவர் யாத்த பாடலும் மஸ்தான் சாயபு பாடல் என்னும் பெயரினைப் பெற்று விளங்குவதாகும். இப்பாடல் நூலேயன்றி நந்தீசர் சதகம், அகத்தீசர் சதகம் என்ற பெயரால் இரு நூல்களையும் பாடித் தமிழ் அன்னையை அலங்கரித்துள்ளார் என்பர்.

குலாம் காதிர் நாவலர் என்பாரும், புலவர் ஆற்றுப்படை பாடிய குலக் கவியே ஆவர்.

இன்னோரன்ன அருந் தமிழ் இஸ்லாம் இனத்துப் புலவர்கள் தமிழ் அன்னைக்குப் புரிந்த தமிழ்ப் பணியினை யாரேனும் பாராட்டாமல் இருக்க ஒண்ணுமோ ? ஒண்ணாது.

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் மட்டும் தாம் தமிழ் மொழியினிடத்து அன்பும் ஆதரவும் காட்டி வந்தனர் என்று கூற இயலாது. பல இஸ்லாமிய வள்ளல்களும் தமிழ் மொழியினையும் சைவத் தமிழ் புலவர்களையும் ஆதரித்து இருக்கின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றினை ஈண்டுக் குறிப்பிடுவோமாக.

ஷெய்கு அப்துல் காதர் மரைக்காயர் ஒரு பெரும் இஸ்லாமியப் பெரியார். இவரைப் பெரிய தம்பி மரைக்காயர் என்றும் அழைப்பர். இவரே சீதக்காதி என்று சிறப்பித்துக் கூறப்படும் சீரிய வள்ளல். இவருக்கும் படிக்காசுப் புலவர்க்கும் நெருங்கிய நட்பு இருந்தது என்பதைச் சீதக்காதி மறைவு குறித்துப் படிக்காசுப் புலவர் பாடியுள்ள கையறுநிலைச் செய்யுட்களால் நன்கு அறியலாம். படிக்காசுப் புலவர் மறந்தும் புறந்தொழா மாந்தர். மேலும் பெரியபுலவர். அவர் தம் கவியின் சிறப்பினை,

மட்டாரும் தென்களந்தைப் படிக்காசன்
உரைத்ததமிழ் வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகம்
பரிமளிக்கும் பரிந்த ஏட்டைத்
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும்
வாய்மணக்கும் துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டினுடை நளினம் தானே

என்னும் செய்யுளால் அறியலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த புலவர் சிகாமணியார் சீதக்காதி இறந்தமை குறித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று,

பூமா திருந்தென்ன புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் நாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே.

என்பது. இப்பாடலில் சீதக்காதி இறந்ததால் புலமையும் இறந்தது என்று புலவர் கூறுவாராயின், இதிலிருந்து சீதக்காதி தமிழ்ப் புலவர்களை எந்த அளவுக்கு ஆதரித்து வந்தார் என்பது புலனாகிற தன்றோ?

மேலும், தமிழ் மக்களும் இஸ்லாமிய மக்களும் தமக்குள் சமய வேற்றுமை பெரிதும் கருதியவர் அல்லர் என்பதும் நமக்குப் புலனாகிறது. சமய வேற்றுமை கருதியிருப்பாராயின், சேதுபதி மகராஜா வைசூரியால் வருந்திய காலத்து, சவ்வாதுப் புலவர் அந்நோய் நீங்க **இராஜராஜேஸ்வரி மீது பஞ்சரத்தினமாலை** பாடியிரார். இது மட்டும் ஓர் எடுத்துக்காட்டு ஆகாது. தமிழர்கட்கும் இஸ்லாமியர்கட்கும் சமயநெறியில் வேறுபாடில்லை என்

பதற்கு எடுத்துக்காட்டாக அய்யாசாமி முதலியார் என்பவர், குணங்குடி மஸ்தான் சாகிபுமீது குணங்குடி நாதர் பதிற்றுப்பத்து அந்தாதி பாடியிருப்பதாலும் அறியலாம். மஸ்தான் சாகிபு பாடிய அகத்தீசர் சதகமும், நந்தீசர் சதகமும் இதற்குச் சான்றாகக்கூறலாம்.

சைவப்பெரும் புலவர்களும் இஸ்லாமிய இனத்தவர்களும் மிக நெருங்கி நட்பு முறையில் பெரிதும் இயைந்து வாழ்ந்திருக்கின்றனர் என்பது சைவப் புலவர்கள் தம் தெய்வீக நூற்களில் இந்துஸ்தான் மொழியினைத் தங்கு தடையின்றி ஆண்டு இருப்பதாலும் நன்கு உணரலாம். இங்ஙனம் தம் அருமை நூல்களில் ஆட்சி காட்டியவர்கள் அருணகிரிநாதரும், குமரகுருபர சுவாமிகளும் ஆவர். அருணகிரிநாதர், ஆண்ட இந்துஸ்தான் சொற்கள் **சலாம், சபாஷ்** என்பன. சலாம், சபாஷ் என்னும் இரண்டு சொற்களைச் சுவாமிமலைத் திருப்புகழில்,

''சுராதிப திமாலய னுமாலொடு சலாமிடும்
சுவாமிமலை வாழும் பெருமாளே.''

என்றும் ''சபாஷ்'' என்னும் மொழியினைக் திருநள்ளாற்றுத் திருப்புகழில்.

'கற்ப கந்திரு நாடுயர் வாழ்வுறச்
சித்தர் விஞ்ஞையர் மாகர் சபாசென
கட்ட வெங்கொடு சூர்கிளை வேரற
விடும்வேலா''

என்றும் அமைத்துப் பாடியுள்ளார்,

குமரகுருபர சுவாமிகள் தம் முத்துக்குமார சுவாமிப்பிள்ளைத் தமிழில் சலாம் என்னும் இந்துஸ்தான் கிளவியினைப் பயன் படுத்தியுள்ளார். அதுவே,

"குமரி இருக்கக் கலாமயில் கூததயர்
குளிர்புனம் மொய்த்திட்ட சார லில்போயக்
குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனை முத்துக் குமரேசனைப் போற்றுதும்"

என்பது.

பட்டினத்தார் பாடலிலும் "குலாம்" என்னும் இந்துஸ்தான் மொழி காணப்படுகிறது. "கொடுக்க அறியாது இறக்கும் குலாமர்க்கு என் சொல்வேன்" என்ற அடியில் காண்க. இப்படிச் சில எடுத்துக் காட்டுக்கள் உண்டு.

இங்ஙனம் எம்மதத்தினரும் ஒற்றுமையுடன் தமிழ் நாட்டில் நிலவித் தமிழ்மொழியினைப் பேணிப் போற்றி வந்தனர் என்பதை நாம் உணர்கையில், நாமும் நம்தமிழ் அன்னைக்கு நம்மாலான தொண்டினைச் செய்யக்கடமைப் பட்டுள்ளோம் என்பதை மறவாமல், ஆவனசெய்தற்கு அரும்பாடுபடுவோமாக.

# 11. வீரமா முனிவர்

தமிழ் மொழிக்கு அரும்பெருந்தொண்டு செய்தவர்கள் பல சமயத்தவர்கள் என்பதை நாம் நன்கு அறிந்துளோம். அவர்களுள் முஸ்லீம் சமயத்தவர்கள் செய்ததொண்டினை இதற்கு முன் உள்ள கட்டுரை வாயிலாக நன்கு அறிந்தோம். அவர்களைப் போலவே கிறிஸ்தவச் சமயத்தவர்களும் பல அரிய தமிழ்ப் பணியினைச் செய்துள்ளனர். அவர்களுள் ஈண்டு ரெவரெண்ட் பெஸ்கி என்னும் கிறிஸ்தவத் தமிழ் அறிஞரைக் குறித்துச் சிறிது சிந்திப்போமாக. இவரே வீரமாமுனிவர் ஆவார்.

ரெவரெண்டு பெஸ்கி அவர்கள் இத்தாலி தேசத்தில், வெனிஸ் நகரில் கி. பி. 8-11-1680-ஆம் தேதியில் பிறந்தார். பெற்றோர்கள் இவரது பிறப்பால் பெரிதும் களித்தனர்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த இவர், தம் மழலைச் சொற்களினால் தாய் தந்தையரைக் களிப்பெனுங் கடலில் ஆழ்த்தி இன்புறச் செய்தார். இவர், தம் இளமைப் பருவத்திலிருந்தே கல்வியில் ஊக்கங் காட்டி நன்கு பயின்று வந்ததுடனிற்காமல், மக்களின் துன்பங்களுக்காகத் தம்மையே, பாவிகளிடம் ஒப்புவித்துச் சிறையில் அறையப்பட்ட இயேசுகிறிஸ்துவிடம் அளவற்ற அன்புகொண்டு அவருடைய அன்புரைகளைப் போற்றித் துதித்தும் வந்தார். இவர்ரோமன் கல்லூரியில் கல்வியைத் திறம்படக் கற்ருர். கல்லூரியில் பயிலும்போதே, கிறிஸ்துவின் பொன் மொழிகள் இவரது மனத்தில் பசுமரத்தாணி போன்று பதிந்துவிட்டன. எனவே, இவர் இயேசு கிறிஸ்து

திருச் சபையில் சேர்ந்து, அயல் நாட்டினர்க்கு அத் திருச் சபையின் சன்மார்க்க போதனைகளைப் பரப்பி, சமயப் பணி ஆற்றுவதிலேயே பேரூக்கங் காட்டி வந்தார்.

இவர் தம் பதினெட்டாம் வயதில், ரோமாபுரிக் கத்தோலிக்கப் பாதிரிமார்களின் சமயச் சங்கத்தில் சமயப் பயிற்சியின் பொருட்டுச் சேர்ந்தார் ; அங்கு இரு ஆண்டுகள் சமயப் பயிற்சியை நன்கு தெளிவுறப் பயின்றார். பின்பு இலக்கண ஆசிரியராய் இருந்தார். மூன்று ஆண்டுகள் தத்துவ ஞானம் என்னும் சாஸ்திரத்தைப் பயின்று தேர்ச்சியுற்றார்; பல நாட்டுப் பல்வேறு மொழிகளையும் கசடறக் கற்றார் ; சமயாசார சாஸ்திரத்தின் நுட்பங்களைத் தெளிவுறப் பயின்று அதிலும் நல்ல புலமை பெற்றார் ; இவ்வாறு சமய நுட்பங்களை நன்கு பயின்றதனால் இவர் சமய குருவானார். இவர் கிறித்துவ மதத்தில் கொண்டுள்ள பற்றையும், சமயப் பணியாற்றுவதில் அன்னாருக்கிருக்கும் தீவிர ஆர்வத்தையுங் கண்ட ரோமாபுரிக் கத்தோலிக்கக் குருமார்கள் உவப்புற்று, அயல் நாடுகளில் சமயப் பணி புரிவதற்குரிய தகுதி வாய்ந்தவர்களுள் வீரமா முனிவரையும் ஒருவராகத் தேர்ந்தெடுத்தார்கள். கரும்பு தின்னக் கூலி கிடைத்தாற்போன்று, கிறித்தவ மதத்தைப் பிறநாட்டு மக்களிடம் பரவச்செய்ய இரவும் பகலும் சிந்தித்தவாறு இருந்த வீரமா முனிவர், குருமார்களின் கருத்தை அறிந்ததும், நடுக்கடலில் திசை காணாத நிலையில் திசை கண்ட மாலுமியைப் போன்று மனமகிழ்ச்சியுற்று, சமயப் பணி புரியும் அந்நன்னாளை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்.

கி. பி. 1706-ஆம் ஆண்டு வீரமா முனிவர் தம் தாய் நாடாகிய இத்தாலி தேசத்திலிருந்து புறப்

பட்டுப் போர்த்துகீசியக் கப்பலில் இந்தியாவிற்குப் புறப்பட்டார்; செப்டம்பர் மாதம் போர்த்துகீசிய நாடாகிய கோவாத் துறைமுகத்தை யடைந்தார். அவ்வாண்டில் ரோமக் கத்தோலிக்கத் திருச்சபை யிலிருந்து சமயத் தொண்டாற்றும் பொருட்டுத் தமிழ்நாட்டிற்கு வந்த சமய குருமார்களின் முதன் முதலாக வந்தவர் வீரமா முனிவரே யாவார்; அங் கிருந்து கொச்சித் துறைமுகத்தை யடைந்து, கப்பலி னின்றும் இறங்கினர்; அங்குச் சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்ட பின்பு கடற்கரையோரமாகவே யாத்திரை செய்துகொண்டே அம்பலக்காடு என் னும் இடத்தை அடைந்தார். மதுரைக் கத்தோ லிக்கத் திருச்சபையைச் சேர்ந்த வீரமா முனிவர் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த புதுப்பட்டி, குருக்கல்பட்டி முதலிய இடங்களில் சில தினங்கள் இருந்தார். பின்பு வீரமா முனிவர் சுமார் இரண்டு ஆண்டுகள் திருநெல்வேலி ஜில்லாவில் வடக்கன் குளத்திலும், காமையநாய்க்கன்பட்டியிலும் பாதிரி யாராய் இருந்து சமயப் பணியை ஆரம்பித்தார். இவ்விடங்களில்தாம் இவர் தம்மை வீரமா முனிவர் எனத் தம் பெயரை அமைத்துக்கொண்டனர். அது காறும் தாம் அணிந்திருந்த கருப்பு உடைகளைக் களைந்துவிட்டு, தமிழ்நாட்டு துறவிகளைப்போன்று காவி உடைகளை உடுத்திக்கொண்டும், தலையில் பாகை அணிந்துகொண்டும், கால்களில் மிதியடி அணிந்துகொண்டும், கையில் கோல் பிடித்துக் கொண்டும் சமயப் பணி ஆற்றிவந்தார். முனிவர் எவ்விடத்திற்குச் சென்றாலும் சீடர்கள் பலர் தம் மைச் சூழ்ந்து வரப் பல்லக்கில் அமர்ந்து செல்வார். இப் பல்லக்குப் பிரயாணம் அருகிலுள்ள பல சிற் றூர்களுக்குச் சென்று, சமயத் தொண்டு ஆற்ற இவருக்கு மிகவும் பேருதவியா யிருந்தது. தமிழ் நாட்டுத் துறவிகளைப் போன்று எப்பொழுதும்

தரையில் புலித் தோலாசனமிட்டு உட்கார்ந்து, தம்மைச் சூழ்ந்துள்ள மக்களுக்கும் ஏனைய சீடர்களுக்கும் சமய போதனைகள் செய்துவந்தார். தமிழ் மக்களிடையே சமயப் பணி ஆற்றுவதற்கு உறு துணையா யிருப்பது, அம்மக்களின் தாய்மொழி யாகிய தமிழ் மொழி என்பதை ஊகித்தறிந்து, தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கினர்.

வீரமா முனிவர் இரண்டு தமிழ் இளைஞர்களைத் தம் இடத்தில் தொழிலாளராக அமைத்துக் கொண்டு, அவர்கள் சமைத்த உணவை ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் உண்டுவந்தார். முதன் முதலில் முனிவர் இந்து தர்ம சாஸ்திரங்களை நன்கு பயின்று, பல்வேறு தமிழ் நாடுகளுக்குஞ் சென்று, அவண் வாழும் மக்களின் நடையுடை பாவனைகளையும் அறிந்து கொண்டார்.

முனிவர் முதன்முதலாகத் தென்னூற்காடு ஜில்லா **கோனான்குப்பம்** என்னும் சிற்றூரில் தேவாலயம் ஒன்றைக் கட்டுவித்தார். முனிவர் இவண் வசித்த மக்களுக்குக் கிறித்தவப் போதனைகளை உபதேசித்து, பலரைக் கிறிஸ்தவர்களாகச் செய்தார்; ஒவ்வொருவர் இல்லத்திற்கும் சென்று, இயேசு கிறிஸ்துவின் பொன் மொழிகளை அன்புடன் போதித்து, அவர்களனைவரையும் கிறித்தவ வழிபாட்டில் திளைக்கச் செய்தார். மேலும், தமிழ் அணங்கு அணியும் உடையுடன், இயேசு நாதராகிய குழந்தையைக் கையிலேந்தியவண்ணம் கன்னிமேரி அம்மையாரின் திருவுருவத்தை வரைந்து, அவ்வோவியத்தைத் தாம் ஏற்படுத்திய தேவாலயத்தில் பிரதிட்டை செய்துவைத்தார்; அவ்வம்மையார்க்குப் 'பெரியநாயகி அம்மாள்' என்னும் திருப்பெயரிட்டு, பதினைந்து தோத்திரப் பாடல்களையும் பாடித் திருவிழா நடத்தினர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மழவராயன் என்னும் சிற்றரசனின் ஆளுகைக்குட்பட்டிருந்த திருக்காவலூரிலுள்ள கிறித்தவ மக்கள் மிகவும் பிறரால் துன்பமடைந்து, மதப்பற்று அற்றவர்களா யிருந்தார்கள். சமயப் பணியையே தம் பிறவிப் பயன் எனக் கருதிய முனிவர், திருக்காவலூர் மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கத் திருவுளங் கொண்டு, விரைந்து அவண் சென்றார்; அங்குள்ள மக்களுக்குச் சமய போதனைகளைத் தெளிய உரைத்தனர். அவருடைய இன்சொல் போதனைகளாலும், மலர்ந்த முகத்தின் பொலிவினலும் பலர்கிறித்தவ மதத்தைத் தழுவலானார்கள். சிற்றரசன் மழவராயனும் முனிவரிடம் பேரன்புகொண்டது மன்றி, மேரியம்மையார்க்குத் திருக்கோயில் கட்டுதல் பொருட்டு, வேண்டிய நிலமும் ஈந்தனன். ஆண்டவனின் திருவருளை நினைத்து உவப்புற்ற மாமுனிவர், அந்நிலத்தில் அழகிய தேவாலயம் ஒன்றைக் கட்டி முடித்தார்; பின்பு மேரியம்மையாரின் அழகிய உருவத்தை அத்தேவாலயத்தில் பிரதிட்டை செய்து, அவ்வம்மையாருக்கு '**அடைக்கல மாதா**' என்னும் திருநாமமும் சூட்டினர். முனிவருக்கு அடைக்கல மாதாவிடம் பூரண பக்தி இருந்தது. எனவே, அவர் மாதாவைப்பற்றி நெஞ்சுருகப் பல பாமாலைகளையும், கலம்பகங்களையும் இயற்றினர். முனிவரின் மனம் உருக்கும் சமயப் போதனைகளும், அடைக்கல மாதாவின் அன்புருவமும் மக்களைக் கிறித்தவச் சமயப் பற்றில் ஆர்வ முள்ளவர்களாக ஆக்கின.

கி. பி. 1713-ஆம் ஆண்டில் வீரமா முனிவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குருக்கல்பட்டி என்னும் கிராமத்திற்குச் சென்றார். இங்குள்ள மக்களில் சிலரே கிறித்தவ மதத்தைத் தழுவியவர்கள். அதுகண்ட முனிவர் மனம்புழுங்கினர்; நீர்வடித்தார். எனவே, ஒவ்வோர் இல்லத்திற்கும் அவர் சென்று,

இயேசுநாதரின் சன்மார்க்க போதனைகளை இனிய தமிழல் உபதேசித்தார்; ஆங்காங்குத் தேனினு மினிய தமிழ்மொழியில் சமய நன்மார்க்கங்களைப் பற்றிய சொற் பொழிவுகளை ஆற்றினார். அன்னாரது சொற்பொழிவுகள் மக்களின் மனத்தைப் பிணித்தன. ஆகையினால், அவரது இனிய சமய விளம்பரங்களில் ஈடுபட்டுப் பலர் கிறித்தவர்களானார்கள். சுற்றுப்புறங்களிலிருந்து மக்கள், தங்கள் மனைவிமக்களுடன் கால் நடையாகவே குருக்கல்பட்டிக்கு வந்து, முனிவரின் எழில் உருவத்தைக் கண்டு வணங்கிப் பெரியாரிடம் உபதேசம் பெற்று, பேரானந்தத்துடன் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள். இவ்வாறு சிலவாண்டுகள் முனிவர் அவண் வாழ்ந்த கிறித்தவ மக்களுக்குச் சற்குருவாக இருந்து, அவர்களுக்கு நற்போதனைகள் பலவற்றைப் போதித்துவந்தார்.

தஞ்சை மாவட்டத்தில் வீரமா முனிவர் சமயப் பணி ஆற்றிக்கொண்டு வருகையில் திடீரென்று அவருக்கு ராஜ பிளவு என்னும் பெருங் கட்டி ஒன்று முதுகில்தோன்ற, அதன் காரணமாகப் படுக்கையில் நாற்பதுநாள் இருந்து மிகவும் துன்பமடைந்தார். அவ்வமயம் பக்கத் தூர்களிலிருந்து இரண்டு பாதிரிமார்கள் வந்து, முனிவரின் தினசரி அலுவல்களைக் கவனித்து, அவருக்குப் பதிலாகச் சமயப் பணி ஆற்றிவந்தனர். சில நாட்களில் முனிவர் குணமடைந்து தம் பணியை மேற்கொள்ளத் தொடங்கினார். ஆனால், மீண்டும் அக்கட்டியினால் அவர் பாதிக்கப்பட்டு, சிகிச்சையி னிமித்தம் புதுச்சேரிக்குச் சென்றார். அங்குச் சில தினங்கள் தங்கிப் பூரண சுகமுற்றதும், புதுச்சேரியினின்று புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வடுகர்பட்டிக் கிராமத்திற்குச் சென்று, அங்குச் சில நாட்கள் உறைவாராயினர்.

திருச்சிராப்பள்ளியில் முனிவர் இருக்கும் பொழுது, சந்தா சாகிபு என்னும் நவாபு ஆட்சி புரிந்துவந்தார். அவர் முனிவரின் வசீகர சொற் பொழிவுகளையும், கல்விப் புலமையையும், அறிவின் தெளிவினையுங்கண்டு, அவருடன் நட்புக்கொண்டார். முனிவர் நவாபுடன் அளவளாவும்பொருட்டு இந்துஸ் தானி, பாரசீகம் முதலிய மொழிகளைப் பயின்றார்; பின்பு சந்தா சாகிபைக் கண்டு பேசி, தம் பொன் மொழிகளால் நவாபை வசீகரித்தார். அப்பொன் னுரைகளைக் கேட்டு இன்புற்ற சந்தா சாகிபு, அவரது அறிவின் திறத்தை மெச்சி, அவரைத் தம் திவானாக நியமித்துக்கொண்டார்; மேலும், திருச் சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள அரசூர், நல்லூர் முதலிய சிற்றூர்களை முனிவருக்கு இனமாகத் தந்து, தந்தப் பல்லக்கு ஒன்றையும் ஈந்தார். இச்சிற்றூர் கள் ஒவ்வோர் ஆண்டிலும் 12,000 ரூபாய் வருமானம் தருபவை.

வீரமா முனிவர் தம் 66-ஆம் வயதில் சேர நாட்டைச் சேர்ந்த அம்பலக்காடு என்னும் ஊரை அடைந்தார். அவர் அங்குள்ள கல்லூரியின் மேற் பார்வையாளர் பதவியைத் திறம்பட வகித்து வந்தார்; அப்பதவியிலிருந்தவாறே பல உரைநடை நூல்களையும், செய்யுள் நூல்களையும் இயற்றினார். இறுதியில் தைரியநாதர் ரெவரெண்டு பெஸ்கி என வழங்கும் வீரமா முனிவர் கி. பி. 1747-ஆம் ஆண்டு பிப்ரவரிமாதம் 4-ஆம் தேதி மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வை அடைந்தனர்.

வீரமா முனிவர் தமிழ் மொழியைப் பயின்று, புலமை பெற்றதுடன் நிற்காமல், அம்மொழியில் பலசெய்யுள் நூல்களையும், உரைநடை நூல்களை யும், இலக்கண நூல்களையும், அகராதிகளையும் இயற்றித் தமிழ் அன்னையை அலங்கரித்துள்ளார்.

அவைகளுள் செய்யுள் வடிவில் அமைந்தவை ; தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாளம்மானை, திருப்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் மூலமும் உரையும், தேம்பாமாலை, அடைக்கலமாலை என்பன. வேத விளக்கம், வாமன் சரித்திரம், வேதியர் ஒழுக்கம், ஞான விளக்கம், பரமார்த்த குரு கதை, திருச்சபைக் கணிதம் முதலியன உரைநடை நூல்கள்.

தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம் என்பன இலக்கண நூல்கள். அகராதிகள்: சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி என்பன.

வீரமா முனிவர் நல்ல நாவன்மை படைத்தவர். அங்ஙனம் நாவன்மை படைத்துப் பற்பல சொற்பொழிவுகளை அவையஞ்சாது, மெய்விதிராது ஆற்றி வந்தமையால்தான் தைரியநாதர் என்னும் பெயரையும் பெற்றனர். நாவன்மை படைத்தது போலவே, பாவியற்றும் பாவன்மையும் படைத்தவர் என்பது அவர் யாத்துள்ள காவியத்தாலும், தோத்திரப் பாடல்களாலும் அறிகிறோம். அக்கவிகள் சொல்லழகு பொருளழகு நிரம்பப் பெற்றுள்ளன; படித்தற்கும் இன்பந் தருவனவாக உள்ளன. இவர் மேற்கு நாட்டினராக இருந்து, தமிழ் அறிவு பெற்றுத் தமிழ் மொழியில் பெருங் காவியமாகத் தேம்பாவணியை இயற்றி யுள்ளார். இந்நூலின் நாட்டு வளம், நகர் வளம் கூறும் பகுதிகள் சிந்தாமணி, இராமாயணம் முதலிய நூற்போக்கிற் கியைய அமைந்துள்ளன. அவற்றிற் கெல்லாம் ஈண்டு எடுத்துக்காட்டுக்கள் எடுத்துக் காட்டப்பெறின், இக்கட்டுரை பரந்து போகும் ஆதலின், ஒரு பாவின் நயத்தினை மட்டும் ஈண்டு விளக்கிக்காட்டி, மேலே சொல்வோமாக.

ஊக்கஏர் பூட்டி நோன்பால் உடல்செறு உழுது நன்றி
வீக்கமேல் விரதச் செந்நெல் வித்திநல் ஒழுக்க நீரைப்
போக்கநீ டிறைத்துத் தன்ஐம் பொறியெனும் வேலி காக்கின்
ஆக்கமாய்ப் பெருவீட் டின்பம் அண்டமேல் விளைக்கும் தானே

என்பது தேம்பாவணியில் ஒரு செய்யுள்.

இப்பாடல் கீழ்வரும் அப்பர் பெருமானுர் அமுத வாக்கைப் போன்றது என்பதை நாம் உணர்தல் வேண்டும். கீழ் வருவது அப்பரது அருள்வாக்கு,

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும்
வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும்
நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும்
வேலி யிட்டுக்
செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி
விளையு மன்றே.

என்பது.

மேலே உழவுத் தொழிலின் நடைமுறைகளை யும், அதன் பயனையும் வீரமா முனிவர் நன்கு உரு வகப்படுத்தி யுள்ளதைச் சிந்திப்போமாக. இவர் மதபோதகராய் வெளிநாட்டில் பிறந்தவராய் இருந் தும், தமிழ்நாட்டில் தலை சிறந்த தொழிலாகிய உழ வுத் தொழிலின் சிறப்பையும் எவ்வளவு கூர்ந்து கவனித்துள்ளார் என்பதை நாம் அவரது செய்யுளி லிருந்து உணரலாம். உழவுத்தொழிலோடு மோட்ச இன்பத்தை இயைத்துப் பேசுகிருர் புலவர். "மோட்சம் என்பது அடைதற்கரிது, அணுகுதற் கரிது, சிந்தித்தற்கரிது என்று நினைக்க வேண்டா! ஒழுக வேண்டிய முறையில், நடக்கவேண்டிய முறை யில் ஒழுகினுல், அவ்வரிய வீட்டின்பத்தையும்

எளிதில் அடையலாம் என்பதை அவரது பாடலால் அறிவுறுத்துகிருர் இவ்வான்றவர்.

ஊக்கத்தை ஏர் என்ருர்; உடலே வயல் என்ருர்; விரதத்தைச் செந்நெல் விதை யென்ருர்; ஒழுக்கத்தை நீர் என்ருர்; ஐம்பொறிகளை வேலி என்ருர். இப்படி உருவகப்படுத்தி உரைத்த அழகைஅவரது பாட்டில் சுவைப்பீர்களாக. ஆகவே, புலவர் கருத்து ஆக்கமாகிய பேரின்ப வீட்டினை விரும்பின், ஊக்கம் வேண்டும்; விரதங்களை மேற்கொள்ளவேண்டும்; ஒழுக்கத்தை யுடையவராய் இருத்தல் வேண்டும்; ஐம்புலன்களை அவற்றின் போக்கில் போகவிடாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பனவற்றை எவ்வளவு இனிமையாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார் என்பதை ஓர்ந்து உணர்வீர்களாக!

# 12. தேவர் கண்ட நாடு

சீரும் சிறப்பும் மிக்கது நம் செந்தமிழ் மொழி. இக் காரணங்கண்டே இதன்பால் ஆர்வமும் அன்பும் கொண்டு இதனைப் பயின்றவர் பலர். அப் பலர் இனத்தாலும், சமயத்தாலும் வேறுபட்ட கொள்கையினர் ஆவர். இங்ஙனம் வேறுபட்டவராயினும், அவர்கள் இம்மொழியை வளம்படுத்தவோ, இதற்குப் பணி பல புரியவோ, நூல் பல யாக்கவோ பின்வாங்கியவர் அல்லர். இம் முறையில் பண்ணியல் தமிழ்க்குப் பணி புரிந்தவருள் சைனரும் அடங்குவர். அவர்கட்குத் தமிழ் நாட்டவர் என்றென்றும் கடமைப்பட்டவர் என்று கூறல் மிகையாகாது.

சமணப்புலவர் பெருமக்களுள் திருத்தக்கதேவரும் ஒருவர். இவர்க்கு அமைந்த அடைமொழிகளின் சிறப்பினின்றே இவ்வறிஞர் பெருமானரது மாண்பினை நன்கு உணரலாம். இவர் துறவுக் கோலம் பூண்ட தூயர். 'இவர் பெருந்துறவியாராதலின், பேரின்ப நிலையைப் பேசுந்திறத்தினர் போலும்! காவியம் பாடிக் கவிஞரைக் களிக்கச் செய்யும் ஆற்றல் அற்றவராய் இருப்பர் போலும்!' என்று எண்ணுவதற்கு இடங் கொடாதவர் என்பதைக் காவியச் சுவை கனிந்து ஒழுகும் வண்ணம் சீவக சிந்தாமணி என்னும் சீரிய நூலைச் செய்திருப்பதினின்றும் அறிந்து கொள்ளலாம்.

இவர் சொல்லையும் பொருளையும் எடுத்து ஆண்ட புலவர் பலர். புலவர் பெருமானர் சேக்கிழார்க்கும், கல்வியில் பெரியராம் கம்பர்க்கும், ஆற்றுவளன், நாட்டுவளன், நகர்வளன் எவ்வெம் முறையில் கூறுவது என்பதை எடுத்துக் காட்டியவர் தேவரே எனில், வேறு என் கூறுவது! இக் கூற்றின் உண்மையை அப்புலவர் பெரு மக்கள் பாடியுள்ள

காவியங்களை ஓத்திட்டுக் கற்பின் புலனுகாமற் போகாது.

"பத்தியின் பாலர் ஆகிப்
பரமனுக் காளாம் அன்பர்
சுத்தமிற் கூடி ஞர்கள்
தலையினுல் வணங்கு மாபோல்
மொய்த்தநீள் பத்தி யின்பால்
முதிர் தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி எல்லாம்"

என்னும் சேக்கிழார் பெருமானுரது செவ்விய வாக்கு,

"சொல்லருஞ் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

என்னும் தேவர் செய்யுளின் கருத்தை ஒட்டியது என்பதைச் சுட்டவும் வேண்டுமோ! இவ்வாறே கம்பர் என்னும் கவி குஞ்சரத்தின் பாடலாகிய,

"புள்ளி மால்வரை பொன்னென நோக்கிவான்
வெள்ளி வீழ்இடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி உள்ளவெல் லாம்உவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே"

என்பது, திருத்தக்க தேவர் பெருமானுரது திருந்திய மொழியாகிய,

"தேனிரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேனிரைத்துவி சும்புற வெள்ளிவெண்
கோனிரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானிரைத்து மணந்து சொரிந்தவே"

என்பதன் சாயை அன்றே?

இப்படிப் பல சான்றுகளைக் காட்டிச் செல்லலாம். ஆயினும், பரக்குமென இத்துடன் சுருக்கப் பட்டது. ஆகவே, திருத்தக்க தேவரது சிறப்புக் குன்றின்மேல் இட்ட தீபம் போல என்றும் குறையா ஒளியுடையதாகும்.

இது காறும் கூறப்பட்ட பெருமை வாய்ந்த புலவர் திலகராற்பாடப்பட்ட நூலே சீவக சிந்தாமணி என்பது. இதனைத் தமிழ் அறிவு படைத்த எவரும் அறிவர். இந்நூல் எல்லாப்படியாலும் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு தனி நூல். தன்மையால் பெயர் பெற்ற நூல் இன்ன என்பதை மயிலை நாதர் குறிப்பிடுகையில், 'சிந்தாமணி, சூளாமணி, நன்னூல்' என்று கூறுவதால் நன்கு விளங்கும். இந்நூலை எச்சமயத்தவரும் எப்புலவரும் பாராட்டாமல் இரார். இதற்குரிய காரணம், இந்நூற்கண் அமைந்த பொருட் சிறப்பே அன்றி, வேறு அன்று. சிவப்பிரகாச சுவாமிகள் இந்நூற் பொருளை நன்கு துய்த்து அறிந்தவர் என்பது, அவர் யாத்த திருவெங்கைக் கோவையில் காணப்படும் ஒரு செய்யுளினின்றும் நன்கு புலனாகிறது.

" சிந்தா மணியும் திருக்கோ வையும்எழு திக்கொளினும்
நந்தா உரையை எழுதல்எவ் வாறு நவின்றருளே !"

என்பன அப்பாடலின் அடிகளாகும். இதனால், சிந்தாமணியின் உரைப் பொருளைக் கற்பனைக்கு ஊற்றும் துறைமங்கலம் சிவப்பிரகாசரே, இங்ஙனம் இந்நூலின் நுட்பத்தினைத் தெரிவிப்பாராயின், மற்றப் புலவர் எத்துணை அளவிற்கு இதனைப் பாராட்டுவர் என்பதை உணர்ந்து மகிழ்வோமாக !

இன்னோரன்ன இயல்பு வாய்ந்த நூலிலிருந்து ஏதேனும் ஒரு பகுதியை ஆராயவேண்டிய உள்ளம், திருத்தக்க தேவர் கண்ட நாடாகிய ஏமாங்கத நாட்டின் மீது சென்றது. இதன்மீது கருத்துச் சென்ற

தற்குப பல காரணங்கள் இருபபினும், அவற்றுள் தலே சிறந்த காரணங்கள் சில. அவை, தேவர் எம் முறையில் தாம் கூறப்புகுந்த நாட்டின் வளத்தையும் சிறப்பையும் கூறியுள்ளாரோ, அம் முறையைப் பிற நாடுகளும் பெறவேண்டும் என்பதும், அவர் எத் தகைய நாட்டை விழைகின்ருர் என்பதும், அந்நிலே அமைவதற்கு யார் யார் எவ் வெம்முறையில் உழைக்க வேண்டும் என்பதும் ஆகும்.

நாடு என்றதும் சிலருக்கு மண்ணும் மரமும் மட்டைகளுமே முன்வந்து நிற்கும். இவைமட்டும் அல்ல நாட்டிற்குரிய பண்புகள். நாட்டின் இலக்கணம் காண விழைவார், வள்ளுவர் வகுத்த நாடு என்னும் தலேப்பின்கீழ் உள்ள குறட்பாக்களே ஊன்றிப்பார்ப் பார்களாக! ஆனல், தேவரும் நாட்டைக் காண முயல்கின்றனர்; வகுக்க முன் வருகின்ருர். அவர் கண்டது என்ன? வகுத்தது யாது? இவையே ஈண்டு ஆராய்வதற்குரியவையாகும்.

நாட்டிற்கு இன்றியமையாதது செல்வம் என் பதை மறுக்க எவருக்கும் எண்ணம் எழாது. செல்வம் நிறைந்த நாடே செழிப்புற்ற நாடு. அச் செல்வம் எது? பொருட் செல்வம் மட்டுமா? அன்றிக் கல்விச் செல்வமும் வேண்டற்பாலதோ?' எனில் இரண்டுமே ஈண்டுச் செல்வம் என்று குறிக்கப்பட்டவை யாகும். பொருட் செல்வத்திலும் கல்விச் செல்வமே தலே சிறந்தது, 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என் பதன்றோ வள்ளுவர் கருத்து? 'விழுச்செல்வம்' என்று கல்வியைத் தானே கவிஞர் பலரும் கழறுவர்? இதனல், 'பொருட்செல்வம் பொலிவுறுதல் வேண் டாவோ? என்ற வின எழ வேண்டா. இரண்டும் ஒரு நாட்டிற்குக் கண் போன்றவை. இதனே மறவாத நம் முனிவர் பெருந்தகையார், தாம் காணும் நாட்டைக் குறித்துக் கழறும்போது,

"நாவீற் றிருந்த புலமா மகளோடு நன்பொன்
பூவீற் றிருந்த திருமா மகள்புல்ல நாளும்"

என்று குறிப்பிட்டுத் தொடங்கியதினின்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு இவை இரண்டும் மிகமிக இன்றியமையாதவை என்பதைத் தேவர் வற்புறுத்தி இவை விளக்க முற்றுப் பெருகுதற்கானவழி வகைகளை நாட்டு ஆட்சியாளரும் பொது மக்களும் நாட வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார்.

கல்வியறிவு நிரப்பப் பெற்றவர், தாம் வாழும் நாட்டிற்கு ஆக்கம் தேடுவரே அன்றி, அழிவைத் தேடார்; வாளா இருக்க ஒருகாலும் ஒருப்படார். செடிகளை நட்டுச் சிறக்க வாழ்வர். இம் முறையே பண்டைய முறையாகும். இதனை நாம் செய்யாது மறந்ததனால் அன்றோ, பசியும் வறுமையும் கொண்டு இந்நாள் வாடி வதங்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்? நடுதற்கும் வளர்த்தற்கும் முன் வராவிட்டாலும், அழித்தற்கு முன் வருவதுதான் வருந்தத்தக்க செயலாகும். வீடு கட்டுதற்கும், சூளை இடுதற்கும், காற்றும் நிழலும் கனியும் தரும் தருக்களை வெட்டி வீழ்த்துநரைக் காணின், எத்துணைத் துன்பம் உண்டாகிறது? ஏன்சினமும் எழுகின்றது! அந்தோ! அவர்தம் அறியாமை என்னே! மரஞ் செடி கொடிகளின் அடர்த்தி நாட்டுவளத்திற்கு அறிகுறி அன்றோ? மேகந் தவழ்ந்து மழை சொரிதற்கு மார்க்கமன்றோ? இதனாலன்றோ இன்மொழிப் புலவர்யாவரும் தத்தம் நாட்டை வருணிக்கும் காலத்து, மரஞ்செடி கொடிகளை மாண்புறப் பாடத் தொடங்கினர்? அவை செறிந்த நாடே நாடு என்பதை அறிவுறுத்த அன்றோ திருத்தக்க தேவரும்,

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக்
கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறிப்
வருக்கை போழ்ந்து

> தேமாங் கனிசிதறி வாழைப்
> பழங்கள் சிந்தும்
> ஏமாங் கதமென் றிசையால்
> திசைபோய துண்டே''

என்று மர வளத்தைப் பாடிக் களிக்கிறார்?

மரம் செடி வளர்ப்போடு விளைவினை விருத்தி செய்து நாட்டில் பசியை நாடவொட்டாது செய்வதும் மக்கள் கடமையாகும். கடமைப் பண்பை மேற் கொண்ட போது ஒற்றுமைக் குணமும் ஓங்க வழிஏற் படுகிறது. உயர்திணைப் பொருள்கள்பால் இப்பண் பாடுகள் ஒருங்கே அமையின், அஃறிணைகளிடத்தும் அமைந்து காணப்படும் என்பதை நாம் எதிர் பார்க்க லாம். இஃது உண்மை என்பதைத் தேவர் உழவு மாடு களின் மூலம் உணர்த்துகிறார். விளைவுக்கு உறுதுணை யாய் இருப்பன அவையே அல்லவா? கடமைப் பண்பை உணர்ந்தவர் காளைகளைக் கண்ணுங் கருத் துமாய்ப் பேணுவர் என்பதைக் கழறவும்வேண் டுமோ? உழுகின்ற எருதுகள் சூம்பற் காளைகளாயும், சோம்பற்காளைகளாயும், ஒற்றுமை அற்றனவாயும் இருப்பின், உழவும் இயலாது; விளைவும் பல்காது. இவை இரண்டும் நடவா எனில், ''பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க'', என்னும் முது மொழியும் பாழ்படும் 'மாடு' என்னும் சொல்லும் 'செல்வம்' என்னும் பொருளை இழந்து நிற்கும். ஒற்றுமைப் பண்புடையனவாய் இருத்தலை வற்புறுத்தவே தேவர்,

> ''மாமனும் மருகனும் போலும் அன்பின,
> காமனும் சாமனும் கலந்த காட்சிய,
> பூமனும் அரிசிப் புல்ஆர்ந்த மோட்டின
> தாமினம் அமைந்துதம் தொழிலின் மிக்கவே''

என்று கூறிக் களிக்கின்றார். நாட்டிற்கு இத்தகைய காளைகள் தேவைஎன்பதைச் சுட்டிக் களிக்கின்றார்!

உழவர்கள் இன்னோர் அன்ன பண்புடையகாளைகளைப் பெறுதற்கு அரசாங்கம் துணைபுரிய வேண்டும் என்பதைத் தேவர் சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறார். இத்துடன் நில்லாமல், அரிசிப் புல் ஆர்ந்து என்னும் தொடரால், யார் ஒருவர் உள்ளம் உவக்க உழைத்துப் பாடுபடுகின்றனரோ, அவர்கள் தாமும் உண்டு பிறரையும் உண்ணச் செய்யும் பேருபகாரியாவர் என்பதையும் காளைகளின் குணங்களினின்றும் குறித்துக் காட்டுகின்றார். இன்னமும் இதன்பால் உள்ள நயமுடைப் பொருளை நன்கனம் ஓர்ந்து சுவைப்பீராக.

இங்ஙனம் இயற்கை வளனும் செயற்கை நலனும் ஒருங்கே அமையப் பெற்ற நாட்டில் அன்பும் வீரமும் குடிகொண்டு நிலவும். இவை நிலவப் பெற்ற நாட்டை எவரும் விரும்புவர். 'மண்ணவரே அன்றி விண்ணவரும் விழைவர்,' என்பது அறிஞர்களின் கருத்தாகும். நம் தேவர் பெருமானார் இதனைச் சுட்டிக் காட்டுகின்றார். அப்படிச் சுட்டும் போது ஓர் அழகும் பொலிய அமைத்துக்காட்டுகின்றார். புலவர்கள் கற்பனைக் களஞ்சியம் என்பதை எவராலும் மறுக்க இயலாது. அம் முறையில் வானவர் கண் இமையாமல் இருத்தற்கும் தற்குறிப்பேற்ற அணியாகப் பல காரணங்களைக் காட்டுவர். ஈண்டுத் தேவர் காரணம் காட்டும் வகை அருமைப்பாடுடையது. அவ்வருமைப் பாடு நாட்டின் சிறப்பு நனிமிகச் சிறப்பதற்காகவே கூறும் கூற்றாகும்.

'விண்ணவர்க்கு யாதொரு குறைவும் தம் விண்ணுலகில் இல்லாதிருந்தும், ஏமாங்கத நாட்டில் அமைந்துள்ள செல்வப் பெருக்கையும், வீரப் பண்பையும், கண்டு அந்நாட்டை இமை கொட்டாது நோக்குதலால்தான் கண் இமைத்திலர்' என்று தேவர் தீட்டும் ஓவியம் எத்துணை இன்பம் பயக்க வல்லதாக இருக்கிறது பாருங்கள்!

மல்லல் மாநகர்ச் செல்வமும் வார்கழல்
செல்வர் செல்வமும் காணிய என்பர்போல்
எல்லியும் இமையார்"

ஈண்டு எல்லி என்னும் சொல்லை இரவு பகல் என்னும் இருபொருள் தரும் முறையில் அமைத்துப் பாடிய சிறப்பைக் காண்க.

நாடென நவிலப்பெறும் பேறுபெற வேண்டும் மாயின், எல்லா நலனும் வளனும்ஒருங்கே பொலிதல் வேண்டும். எவர் எதைவிழையினும் அதைத் தரும் நாடே நாடு. அறவோர்க்கு இடம் தரும் நாடே, துற வோர்க்கும் இடந்தருதல் வேண்டும். வறுமையால் சிறுமையுற்று வாடி வருவார்க்கும் இடம் தந்து, இழந்த பொருளை ஈட்டுதற்கும் ஏற்ற வசதிதருவதாய் வாய்ந்ததே நாடாகும். இன்னோரன்ன இயல்புடைய நாட்டையன்றோ தேவர் நமக்குக் காட்டுகின்றார்?

"நற்ற வம்செய் வார்க்கிடம் ;
தவம்செய் வார்க்கு ம.:திடம்
நற்பொருள்செய் வார்க்கிடம் ;
பொருள்செய் வார்க்கு ம.:திடம் ;
வெற்ற இன்பம் விழைவிப்பான்
விண்ணு வந்து வீழ்ந்தென
மற்ற நாடு வட்டமா
வைகும் மற்ற நாடரோ."

என்று கூறியும் குதூகலிக்கிறார்.

இவ்வாறு தேவர் வகுத்துத் தந்த நாட்டின் இயல்பை ஏனைய நாடுகள் அமையப் பெறுதற்கான வழி வகைகளை நாடுதற்கு அரசியலார் முந்தவேண்டும். இ.:து அரசியலார் பணி,' என்று பொதுமக்கள் வாளா இருத்தல் அன்றி அவ்வரசியலாருடன் ஒற்றுமைகொண்டு உழைக்கவும் வேண்டும்.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு."

# 13. பெருமை

நாட்டில் வாழும் மக்கள் நற்குடிப் பிறப்பினராய்த் தாம் பிறந்த குடி தாழ்வுறுதிருக்கச் செய்து உயர்த்தவல்லவராய், மானமுடையவராய் இருத்தல் வேண்டும். மக்கள் மானத்துடன் இருப்பதோடன்றிப் பெருமையோடும் தம் வாழ்க்கையை நிலைநாட்டி நன்முறையில் நடக்க வேண்டும்.

பெருமையோடு வாழ்தலாவது, செயற்கரிய செயல்களைச் செய்தும், செருக்கு இல்லாமலும், பிறர்மீது குற்றம் கூறுமலும் வாழ்தலாகும். இம் மூன்று பண்புகளும், உள்ள நிலையினும் மேல் மேல் உயர்த்தும் பண்புகளாகும். ஒருவனது உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணம் அவனே அன்றிப் பிறர் இல்லை.

> நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
> நிலைகலக்கிக் கீழ்இடு வானும்—நிலையினும்
> மேன்மேல் உயர்த்தி நிறுப்பானும் தன்னைத்
> தலையாகச் செய்வானும் தான்.

என்று நாலடியார் கூறுவதாலும் இதனை நன்கு உணரலாம்.

"ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை" என்பர் வள்ளுவர். அதாவது, ஒருவனுக்குத் தான் இருக்கின்ற காலத்தும் மிக்குத்தோன்றுதல் உடைமை. அதாவது பிறரால் செயற்கரிய செயல்களைச் செய்வோம் என்னும் ஊக்கம் மிகுதி. இவ்வாறன மிக்குத் தோன்றுதலாகிய பண்பு மக்களுக்குத் தேவை.

செயற்கரிய செய்தலாவன, அளவு கடந்து உபகாரம் செய்தலும், ஈகைக்குணம் உடைமையும்

என்க. இப்பண்பைப் பெருத நிலை, மக்களுக்குக் குற்றம் உண்டாக்கும். அபகீர்த்தியையும் ஏற்படுத்தும் என்பதை,

அய்து குடியில் பிறந்தருநூல்
ஆய்ந்து செல்வத் துயர்ந்ததனுல்
எய்தல் அரிது பெருமைஅஃது
எய்தும் கொடைஒப் புரவாதி
செய்தற் கரிய செய்துபிறர்
செயிர்கூருமல் தருக்காமல்
உய்தி நெறியில் பிறழாமல்
ஒழுகு வார்க்குள் ளுதிமைந்தா,

என்ற விநாயக புராணப் பாடலால் அறியலாம்.

இறைவனுல் படைக்கப்பட்ட உயிர் இனங்களுக்குள் வேறுபாடு இல்லை. பிறப்பளவில் எல்லாம் ஒன்றே. "எம்மினம் பெரிது ; உம்மினம் சிறிது" என்று கூறுதற்கு இல்லை. பிறப்பால் உயர்வு தாழ்வு கூறுதல் சிறப்பாகாது. ஆனுல், அவர் அவர்கள் செய்யும் தொழிலாலும் செயலாலும் மட்டும் பெருமை சிறுமைகளைக் கூறலாம்.

அவர் அவர் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப மண், நீர், தீ, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்களின் காரியமாகிய உடம்பைப் பெற்று நின்று அவ்வுடம்பின் பயனை த்துய்த்தல், எல்லா இனத்தவர்க்கும் சமம். ஆதலின், பிறப்பு, ஒத்து உள்ளது என்க. அவர் அவர்களின் பெருமை சிறுமைகளுக்கு உரைகல்லாக உள்ளவை, அவரவர் செய்யும் தொழிற் பிரிவுகள் ஆதலின், அந்நிலையில் உயர்வு தாழ்வு கருதலாம். ஏனெனில், "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என வள்ளுவர் கூறுகின்ருர் அல்லரோ ? எனவே, குலத்திஞல் பெருமையை அறிதல் ஆகாது. ஆசாரமே பெருமைக்குக் காரணம். இந்தத்

தருணத்தில் கம்பர் கூறுவதையும் நினைவிற்குக் கொணரலாம். "எக்குலத்து யாவருக்கும் வினையினால் வரும் மேன்மையும் கீழ்மையும்" என்பது அவரது கூற்று. "உத்தியினால் எல்லோரும் ஒக்குமென ஒண்ணாதே" என்பது தினகர வெண்பா,

செயற்கரிய செம்மையான செயல்களைச் செய்யாமல் செல்வத்தின் உயர்வு காரணமாக விலை உயர் படுக்கை, ஆசனம் முதலியவற்றில் படுத்தும் அமர்ந்தும் இருப்பவர்கள், ஒருகாலும் பெரியராகமாட்டார். வறுமையுற்றபோதும் செயற்கரிய செயலைச் செய்பவர் வறுமையுடையார் என்று அறிவுடைப் பெருமக்களால் கருதப்படமாட்டார்.

இளையான் குடிமாற நாயனார் பெருஞ் செல்வத்தைப் பெற்றிருந்த போதிலும், தம் இல்லத்தில் அடியவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து உபசரித்து மேன்மை பெற்றார். பின்பு வறுமையுற்றபோதும், தம் செய்கையினின்றும் மாறாது உபசரித்து மேன்மையுற்றார் "அல்லல் நல்குரவு ஆனபோதிலும் வல்லவராய்" விளங்கினார். ஆகவே, பெருமையுடையவர் என்பதற்கு அறிகுறி செல்வமோ, குடிப்பிறப்போ காரணம் அன்று; செயலே இன்றியமையாதது. மனை, மாடு, பொருள், பூமி முதலியவற்றால் பயனில்லை. குலம், ஒழுக்கம், குணம், ஞானம் முதலியன மக்களுக்குத் தேவை. இவை இல்லார் மிகவும் சிறியரினும் சிறியரே.

நக்கீரர் சங்கப் பலகையின் மேல் வீற்றிருந்து பெரியர் ஆகிவிட்டனரோ? சிவனார் அப்பலகையில் நிற்றல் இன்றி அவர் முன் கீழே, நின்று இருந்ததனால் சிறியர் ஆகிவிட்டனரோ? நக்கீரர் பெரியர் ஆயிலர், சிவனார் சிறியர் ஆயிலர.

"சங்கரன்போய் நின்றளவில் சங்கப் பலகையின்மேல்
அங்கிருந்தான் நக்கீரன் ஆயினும் என்"

என்ற முதுமொழிமேல் வைப்பு வெண்பா இக்கருத்தை எவ்வளவு அழகாக நிலைநாட்டுகிறது பாருங்கள் !

நகுடனும் பல்லக்கில் முனிவர்கள் சுமந்து செல்ல ஊர்ந்துதான் சென்றான். ஆனால், விரைவாகச் செல்க என்ற பொருளில் 'சர்ப்ப' என்று கூறிய அளவில் என்னானான்? சுமந்து சென்ற முனிவரால் சர்ப்பமாகும் சாபத்தைப் பெற்றான் அல்லனோ ?

> "கும்பமுனி யால்நகுடன் சர்ப்பஎன்றே குண்டலியாய்
> மொய்ம்பிழந்து வீழ்ந்தான்"

என்னும் முருகேசர் முதுநெறி வெண்பாவைக் காண்க.

இத்தகைய பெருமை ஒருவனுக்கு எப்போது வரும்? ஒருமனப்பட்ட மகளிர் தம் மனத்தைப் பலவாறு சிதரவிடாமல் இருந்து, தன் கற்பைக் காத்துக் கொள்வதுபோல, ஒரு மனிதன் தன் நிறையினையும் தவறாமல் காத்து வந்தால்தான் உண்டாகும். அதாவது காக்கவேண்டுவனவற்றைக் காத்துக் கடிவனவற்றை நீக்கி ஒழுகுதல் என்பதாம். சுருங்கக் கூறின் மன மொழி மெய்களை அடக்கி,உபகாரம் முதலியவற்றைச் செய்து வருதல் எனலாம். வறுமையுற்ற காலத்திலும் பிறரால் செயற்கரிய செயலைச் செய்ய வல்லவரே பெருமை அடைவர். இங்ஙனம் செய்பவரே சால்புடைய மக்கள் ஆவார்.

அரிய செயலைச் செய்யும் மக்களாகிய பெரியாரை நாமும் போற்றிக் கொள்ள வேண்டும். அவர்கள் செய்யும் அரிய செயல்களை ஒவ்வொருவரும் செய்ய முந்த வேண்டும். ஆனால், சிறியவராயினார் இங்ஙனம் இப்பெரியார்களைப் போற்றுதலும் செய்யார். அவர்கள் செயலை மேற்கொண்டு ஆற்றுதலையும் செய்யார். அச்சிறியார் ஏன் இவ்வாறு செய்ய வேண்டுமென்பதை மனத்தாலும் நினையார். சிறியார்

குடிப் பிறப்பு, செல்வம், கல்வி இவற்ருல் இறுமாப்புக் கொண்டிருப்பர். பெரியோர்களோ செல்வம் கல்வி முதலியவற்றையுடையராய் இருப்பினும், செருக் குருது என்றும் அடங்கி இருப்பர்.

குடிமையும், செல்வமும், கல்வியும் சிறியார் இடத் தில் இருக்குமாளுல், அவற்ருல் தருக்கு அடைவரே அன்றி, வேறு பெருமையுடையர் ஆகார். அவற்றைக் கொண்டு தகாதனவற்றையே செய்வர். ஆளுல், இச் செருக்கு, குடிப்பிறப்பாலும், செல்வ வளத்தாலும், கல்வி மேம்பட்டாலும் நிறைந்த பெரியாரிடத்தில் என் றென்றும் காணப்படாது. அவர்கள் எக்காலத்தும் தாழ்ந்தே போவர். சிறியவர்களோ மேலே கூறப் பட்டவற்றைப் பெற்ற காரணத்தால் தம்மை வியந்து பெருமையாகப் பேசிக்கொள்வர். இவ்வாருன பெரி யார் சிறியார் இயல்புகளை மதிலின் மீதும் அகழியின் மீதும் வைத்துத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமி கள் கற்பித்துக் கூறிய கற்பனையைக் கற்றறிந்தால், நாம் கழி பேர் உவகை கொள்வோம் என்பதில் ஐயம் இல்லை.

தாழ்ந்தோர் உயர்வர் என்றுமிக
உயர்ந்தோர் தாழ்வர் என்றுஅறம்
சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்
மதில்சூழ் கிடந்த தொல்அகழி
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல்
நின்றன் றுயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையில் உதிப்பவன்தாள்
கீழ்நின் றதுபோய்ச் சூழ்எயிலே

என்பதே அவரது பாடல்

பெரியவர்கள் பணிந்து போவர் என்பதற்கு மற் ருேர் எடுத்துக்காட்டிளுலும் விளக்கலாம். புலிக்கால் முனிவரின் திருமகளுர் உபமன்யு முனிவர். அவர், தம்மைப் பல இருடிகள் சூழக் கையிலையில் ஒரு சார்

வீற்றிருந்தார். அப்போது சுந்தரர் மண்ணுலகு விடுத்துக் கைலேக்கு எழுந்தருளினர். இங்ஙனம் அவர் வருதலைக்கண்ட உபமன்யு முனிவர் தம்இரு கரங்களை யும் சிரமேல் குவித்துச் சுந்தரரைத் தொழுது நின்றார். ஆனால், ஏனையவர் தொழுதிலர். காரணம் பெருமை என றும் பணியும்; சிறுமை தன்னை வியந்து தருக்கும் அன்றோ?

> "நாவலர் வெள்ளானை நடத்தஉப மன்னியர்போல்
> ஆவலுடன் கண்டுபணிந் தார்களோ"

என்ற திருத்தொண்டர் வெண்பாப் பாடலைப் படித்தால், இக்கருத்து நன்கு விளங்கும். ஆகவே, பெருமைக் குணமுடையவர் செருக்கு இன்றி இருப் பர். ஆனால், சிறுமைக்குணம் உடையவர் செருக் குடன் வாழ்வர். இதனால் குலத்தாலும் செல்வத் தாலும் பெரியராயினர்தாம், பெரியார் என்று எண்ணுதல் வேண்டா,

நற்குடி பிறவா மாந்தர் இவர் என்பதை அவர் களின் செருக்குற்ற மனப்பான்மையால் எளிதில் அறியலாம். "சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிவ" என்ற முதுமொழிக்காஞ்சி நூலால் இதனை உணரலாம்.

> ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
> மீச்செலவு காணின் நனிதாழ்ப—தூக்கின்
> மெலியது மேல்மேல் எழச்செல்லச் செல்ல
> வலிதன்றோ தாழும் துலைக்கு

என்கிறது நீதி நெறி விளக்கம்.

சிறியாரிடத்து மற்றொரு குற்றமும் உண்டு. என்றும் பிறருடைய குற்றங்களையே பிறரிடம் கூறித் திரிவர். ஆனால், பெருமைக்குணம் நிறைந்த பெருங் குடி மக்கள் பிறருடைய குற்றத்தையும் மறைத்தே பேசுவர். பிறருடைய நற்பண்பையே எடுத்துப் மொழிவர்.

★